www.padippakam.com

# கவிதாசரண்

உள்ளே:

பேசுகிறவர்களும் பேசப்படுகிறவர்களுமாய் சிலர்:

எஸ். வி. ஆர். ராஜ்கௌதமன் பொ. வேலுசாமி
அ. மார்க்ஸ் ரவிக்குமார் த. பழமலய்
சாந்தா தத் ஜி. காசிராஜன் ஜெயந்தன்
முருகேச பாண்டியன் கோச்சடை தேவிபாரதி

கவிதாசரணின்

## தலித்துகளுக்கெதிரான இழிமனப் போக்குகள்

## பிளாஸ்டிக் கழிவுகள்

ஏப்ரல் - மே, 1996. விலை ரூ. 10.

படிப்பகம்

www.padippakam.com

## பிழைப்பு —பாரதிவசந்தன்

அருக்காணி, அங்கம்மா
மாரி, மண்ணாங்கட்டி...
சேரியில இருக்கிற
எல்லாரும் வாங்க
நம்ம தலைவரு
கூப்பிடறாரு...

எதுக்காம்..?

கட்சி சார்பா
இந்த எலெக்ஷன்ல
நிக்கறாரு இல்ல...
ஓட்டு கேக்க
நாம போனாத்தான்
அவரால ஜெயிக்க
முடியுமாம்...

அப்படியா சங்கதி...
ஜெயிச்சி என்ன
பண்ணப் போறாராம்..?

எம். எல். ஏ. ஆவவாரு
இல்ல...

ஜெயிக்காட்டி...?

இது என்னா கேள்வி
புதுசா இருக்குது...
அடுத்த வருஷமும்
அம்பேத்காரு சிலைக்கு
மாலைபோட நம்மள
ஆடு, மாடுங்க மாதிரி
ஓட்டிகிட்டுப் போவாரு
அவ்வளவுதான்...

அடி செருப்பால...
அதுக்கா இத்தன
ஆர்ப்பாட்டம் பண்ணுது
அரசியல நக்கிப் பொழைக்கிற
அந்த அறிவுகெட்ட நாயி...?

படிப்பகம்

www.padippakam.com


# கவிதாசரண்

ஆண்டுச் சந்தா ரூ. 60.
ஆயுள் சந்தா ரூ. 600.
சந்தாவை M. O. செய்க.

படைப்பிலக்கிய இதழ் ★ ஆசிரியர்: கவிதாசரண்

முகவரி:
ஆசிரியர், "கவிதாசரண்", 31, டி.கே.எஸ். நகர், சென்னை-600 019.
தொலை பேசி எண்: 54 44 99

ஏப்ரல், 1996 விலை ரூ. 10


"மனித நேயப் பார்வையோடு, தமிழின் கலாச்சார - பண்பாட்டு மதிப்பீடுகளை இலக்கியத் தேடலாக்கும் இதழியக்கப் பயணம். தமிழுக்கான பரிமாணங்கள் யாவும் இதழுக்கான திசைகளாகும்.

---

'கவிதாசரண்' இதழைப் பரிசளித்துப் பாராட்டிய 'தாஸ்னா'வுக்கு மனமுவந்த நன்றி. பரிசாக ரூ. 300 ரொக்கம் வழங்கியது எதிர்பாராதது. கூடுதல் மதிப்புக்குரியது.

பிரபஞ்சன் எழுதி எழுதித் தன் பெயராகவே பரவு கிறவர். அந்தப் புரிதலின் அடையாளமாகவே சாகித்ய அகாதமி விருது அவருக்கு. எழுத்தை உப்பு புளி மிளகாயோடு சம்பந்தப் படுத்துகிறவர் கள் மலினப்படாமல் சுயம் காப்பது இன்னும்கூட உயிரை வாங்குகிற விஷயம்தான். இந்த உயிர் வாங்கலைக் கம்பீரப்படுத்துகிறார் என்பதாலேயே நாம் அவர் பக்கம்.

இந்த இதழில் வாசகர் கடிதங்கள் இடம் பெற வில்லை. அவை பக்கம் நிரப்பும் விஷயமில்லை.

படிப்பகம்

www.padippakam.com



இதழ் வருவதில் ஆகக் கூடுதலான தாமதம். காரணம் சொல்வது தன்னிரக்கம் கொள்வதாய் ஆகிவிடக் கூடும். இதழ் நின்றுபோவதென்பது இந்த நூற்றாண்டில் இல்லை.

வெளியார் நூல்களை 'கவிதாசரண்' அச்சிட்டுத் தர முன் வருகிறது நல்ல அச்சில், நியாயமான கூலியில். புதியவர்கள் பயன் பெறலாம்.

## அடுத்த இதழ்

நவம்பர், 1995 'கவிதாசரண்' இதழில் வந்த எஸ்.வி.ஆர். கட்டுரைக்கான கோ. கேசவனின் மறுப்பும், அதற்கான எஸ்.வி.ஆர். எதிர்வினையும் இதழ் முழுதும். பெரியாரை மீட்டெடுக்கும் வாய்ப்பைத் தவிர்க்கக் கூடாதெனத்தான்.

●


## PRESS & REGULATION OF BOOKS ACT

Registration of Newspapers (Central) Rules, 1957.
FORM IV (SEE RULE 8) Statement about ownership & other Particulars about Newspaper KAVITHAASARAN

| | |
|---|---|
| 1. Place of Publication. | 580, T.H. Road, Madras-21 |
| 2. Periodicity of its Publication: | Monthly |
| 3. Printer's Name: | Mrs Kavithasaran |
| Nationality: | Indian |
| Address: | 31, T K S Nagar, Madras-19 |
| 4. Publisher's Name: | Kavithaasaran |
| Nationality: | Indian |
| Address: | 31, T K S Nagar, Madras-19 |
| 5. Editor's Name: | Kavithaasaran |
| Nationality: | Indian |
| Address: | 31, T K S Nagar, Madras-19 |
| 6. Name & address of Individuals who own the Newspaper: | 1) Kavithaasaran, 31, T K S Nagar, Madras-19<br>2) Mrs. Kavithasaran, 31, T K S Nagar, Madras-19 |

I, KAVITHAASARAN hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Dated: 1-3-1996

Signature of Publisher
(Sd) KAVITHAASARAN


படிப்பகம்

www.padippakam.com



என்னைக் தமிழ் அன்னை பெற்றாள்,
ஏடெடுத்து வாழ்ந்திருப்பேன்;
இன்னுயிரைத் தோற்றபின்னே
என் குழியில் புதைந்திருப்பேன்.

# தலித்துகளுக் கெதிரான இழிமனப் போக்குகள்

அண்மையில் நிகழ்ந்த ஒரு சம்பவம்.

15-1-1995இல் வல்லிக்கண்ணனின் பவளவிழா நடந்தது. அதில் கலந்துகொள்வதற்காக அழைக்கப்பட்டிருந்த — புதுவைப் பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் - டாக்டர் கி. வேங்கட சுப்ரமணியன் தவறுதலாக அருகில் நடந்து கொண்டிருந்த மக்கள் சிவில் உரிமைக் கழகக் கூட்டத்தில் புகுந்துவிட்டார். அழையாத விருந்தாளியாய் நுழைந்து விட்டவரை அலட்சியப்படுத்துவது அழகல்ல என்பதாய் 'நாகரிகம்' பேணத் தெரிந்த அமைப்பாளர்கள் அவரை இருகரம் கூப்பி வரவேற்று, மேடையில் அமர்த்தி பேசவும் வேண்டிக் கொண்டனர். 'நீங்கள் தவறுதலான இடத்தில் நுழைந்து விட்டீர்கள்' என்று சுட்டிக்காட்டுவதோ, அல்லது நுழைந்தவரை வெறும் பார்வையாளராகவே இருக்கச் செய்வதோகூட நாகரிகத்தின் நியாயமான அம்சமென்பது வேங்கடசுப்ரமணியன்களின் பிரசன்னத்தில் மறந்துபோவதுதான் நம் மக்களின் வலிமை மிக்க பலவீனம்.

மேடையில், சென்னை மாநகராட்சியின் முன்னாள் ஆணையரும் இந்நாள் தலித் போராட்டக்குழுத் தலைவருமான கருப்பன், ஐ. ஏ. எஸ். ஒரு பேச்சாளராக அமர்ந்துள்ளார். இவர் மாநகராட்சியின் ஆணையராக இருந்தபோது, ரிப்பன் கட்டிடத்திற்கு அருகே இருந்த மிருகக்காட்சிசாலையும் நகராட்சிப் பொறுப்பில் இருந்தது. அதில் இருந்த சிங்

படிப்பகம்

www.padippakam.com



கம், புலி போன்ற விலங்குகளுக்கு ஒரு நாளைக்கு 300 கிலோ மாட்டிறைச்சியும், 30 கிலோ ஆட்டிறைச்சியும் வாங்குவார்களாம். மாட்டிறைச்சி கிலோ 99 பைசாவும் ஆட்டிறைச்சி கிலோ ரூ. பத்து வீதமும் விற்ற காலம் அது. அதாவது மாட்டிறைச்சிக்கு ரூ. 297உம் ஆட்டிறைச்சிக்கு ரூ. 300உம் செலவிட்டார்கள். இந்தக் கணக்கு இவர் கவனத்துக்கு வந்தபோது காட்சிசாலை பொறுப்பாளரைக் கூப்பிட்டு, "ஐயா, ஆட்டுக்கறி எதற்காக வாங்குகிறீர்கள்? விலங்குகள் வாயில்லாத பிராணிகள். ஆகவே எந்த விலங்கும் 'நான் மாட்டுக்கறி தின்ன மாட்டேன். ஆட்டுக்கறிதான் வேண்டும்' என்று சொல்லியிருக்காதே," என்று கேட்டாராம். மிருகக்காட்சி சாலை வரலாற்றிலேயே முதல் தடவையாக இப்படியொரு கேள்வியை எழுப்பித் தன்னை வித்தியாசமான ஆணையராகப் பதிவு செய்தவர்.

பேசச் சொன்னதும், பேச்சில் வல்லவரான வேங்கடசுப்ரமணியனும் எழுந்து பேசத் தொடங்கிவிட்டார். பேச்சினூடே, தான் ஜாதியைப் பொருட்படுத்துவதில்லை என்று சொல்லி "அந்தக் காலத்திலேயே இதோ இங்கே உட்கார்ந்திருக்காரே கருப்பன், அவருடைய தகப்பனாரையே எங்க வீட்டுக்கு அழைத்து நடுக்கூடத்தில் உட்கார வைத்துச் சாப்பாடு போட்டிருக்கிறோம்," என்று சொல்லித் தன் பரம்பரையின் பெருமையை வெளிப்படுத்தியுள்ளார். கருப்பன் என்ன செய்வது என்று தோன்றாமல் கூச்சமும் புன்னகையுமாக நெளிந்திருக்கிறார். இதுவும் ஒருவகை சபை நாகரிகமாகப் பயிலப்பட்டுவிட்டது.

வேங்கடசுப்ரமணியன் போன்ற மேதாவிகள் தங்கள் வீட்டு நடுக்கூடத்தில் நாய்களை உண்ணவைத்துக் கொஞ்சுவதைப் பற்றி மேடை போட்டுப் பெருமை பேசிக்கொள்வதில்லை. மனிதர்களுக்குச் சோறிடுவதுதான் அப்படியான விஷயமாகிவிட்டது.

'தலித்துகள் நாகரிகம் தெரியாதவர்கள்' என்பீர்கள். இப்படிச் சொல்வதையே உங்களுக்கான நாகரிகமாகக் கற்றிருக்கிறீர்கள். கூச்சத்தால் நெளிந்து புன்னகை செய்து சமாளித்த கருப்பன் வாயைத் திறக்காமல் சகித்துக் கொண்டார். உங்கள் நாகரிகம் அவரை ஆட்டுவித்தவிதம் அப்படி. "அடே, நிறுத்தடா நாயே," என்று அவர் கர்ஜித்திருக்கலாம். 'மகா அநாகரிகம்' என்பீர்கள். வேங்கடசுப்ரமணியனின் அநாகரிகம் உங்களுக்கு உறைக்காதபோது தலித்துகளுக்கெதி

படிப்பகம்

www.padippakam.com



ரான உங்களின் இழிந்த மனப்போக்குக்கு இதைவிட வேறு என்ன சான்று வேண்டும்? கருப்பன்கூட கமிஷனாராயிருந்த காலத்தில் 30கிலோ ஆட்டுக்கறியோடு மேலும் கொஞ்சம் சேர்த்து வாங்கச் சொல்லி உங்கள் நாகரிகத்தை கோரிப் பெற்றிருக்கலாம். விவரம் தெரியாத மனிதர். வேங்கடசுப்ர மணியனைப் போன்று விவரமானவராக இருக்க அவருடைய ஐ. ஏ. எஸ். படிப்புகூட உதவவில்லையே.

தாழ்த்தப்பட்டோருக்கும் நலிந்த பிரிவினருக்கும் இட ஒதுக்கீட்டை முறைப் படுத்திய முதல் மாநிலம் தமிழ் நாடு. இந்த ஒதுக்கீடு பதவி உயர்விலும் கடைப்பிடிக்கப்படும் ஒன்று. தலித் மக்களைப் பொறுத்தவரை ஒரு குறிப்பிட்ட பிரிவில் பதவி உயர்வுக்குத் தகுதியான பணியாளர் ஓராண்டில் கிடைக் காமல் போனால், அந்த ஒதுக்கீட்டை அடுத்த ஆண்டு ஒதுக் கீட்டோடு சேர்த்து வழங்குவதற்கு வகை செய்யப்பட்டு இருந் தது. இப்படித் தொகுத்தளித்தாலும்கூட, தலித்துகள் அந்தத் துறைகளில் தங்கள் பங்கினைப் பெற்றுச் சமத்துவம் தேடப் பல காலம் ஆகும் என்பதால்தான் அந்த ஏற்பாடு.

இட ஒதுக்கீட்டுக்கான உச்சவரம்பில் கேள்வி எழுந்த போது, உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டது. அந்த விபத்தில், தமிழகம் நடைமுறைப்படுத்திக் கொண்டி ருந்த 69 சதவீத ஒதுக்கீடு 50 சதவீதமாக வெட்டப்பட்டது. சட்டத்தின் கண்களுக்கு சமூக நீதியெல்லாம் இரண்டாம் பட் சம்தான். ஆனால் அத்தோடு நில்லாமல், உச்ச நீதிமன்றம் தன் வரம்பை மீறி, அதன் பரிசீலனைக்கு வராத, யாரும் கேள்வி எழுப்பாத ஒன்றில் தன் மூக்கை நுழைத்து, தலித்து களுக்கான பதவி உயர்வைத் தொகுத்தளிக்கும் ஒதுக்கீட்டை வெட்டி நீக்கிவிட்டது. அதாவது, ஓராண்டில் பதவி உயர் வுக்குத் தகுந்த பணியாளர் இல்லையெனில் அந்த ஒதுக்கீட் டைத் தலித்துகள் இழந்துவிடவேண்டியதுதான். இந்த இழப் பின் பரிமாணம் தலித்துகளை ஒரு வகையில் வேரறுக்கும் முயற்சிதான். தெரியாதா உச்ச நீதிமன்றதுக்கு? தெரிந்த தனால்தானே ஐயா இந்த சட்ட சமத்துவம்? இதை தலித்து களுக்கெதிரான அராஜகம் என்று சொன்னால், 'இது நீதி மன்ற அவமதிப்பு' என்றொரு முள் தடியை நீட்டும். ஊமை களின் வாய்களை சட்ட ஊசியால் தைத்துக் காப்பதும் உச்ச நீதிமன்றத்தின் வேலைதான் போலும்.

படிப்பகம்

www.padippakam.com



இதை எதிர்த்து யாராவது குரல் கொடுத்தார்களா? கொடுத்தார்கள் அங்கொருவர் இங்கொருவராய். ஒருநாள் உண்ணாவிரதம், அரை நாள் தர்ணா, அரைமணி நேரம் கண்டனக் கூட்டம் என்று சில தலித் தலைவர்கள் குரல் கொடுத்தார்கள். ஆனால் தகவல் ஊடகங்கள் அதைக் கண்டு கொள்ளவே இல்லை. தலித்துகள் நட்டம் பற்றி அவர்களுக் கென்ன கவலை? 69 சதவீதம் 50 ஆனது பற்றிய - அதுவும் கூட அரசியல் ஆதாயத்தனமான கூக்குரலில் இப்படியொரு அராஜகம் நடந்துள்ளது யாருக்கும் தெரியாமலே போய்விட் டது. தலித் மக்களுக்கே, 'இது ஒன்றும் முக்கியமில்லாத விஷயந்தான் போலும்' என்று தோன்றியிருக்க வேண்டும். அப்படியொரு அவலம்.

1932இல் அம்பேத்கருக்கும் காந்திக்கும் இடையே ஏற் பட்ட பூனா ஒப்பந்தப்படி நாடாளுமன்ற, சட்ட மன்றங்க ளுக்குத் தலித்துகளுக்கான தனித் தொகுதிகள் உருவாக்கப் பட்டன. அவை மெய்யாகவே தனித் தொகுதிகளாகவே காக்கப்பட்டிருந்தால் இது போன்ற அராஜகத்தை எதிர்த்து பாராளுமன்ற, சட்டமன்ற நெருக்கடியை உண்டாக்கியிருக் கலாம். ஆனால் அவைகள் யாவும் கட்சித் தொகுதிகளாக அல்லவா மாற்றப்பட்டுவிட்டன. மக்கள் அரசு என்ற பெய ரில் கட்சி அரசு நடக்கிற நிலையில், பணத்தின் ஆதிக்கத் திற்கு மனிதர்கள் விலை போகிற கேவலத்தில், இன நலன்-இனக்குழு நலன் என்பதெல்லாம் வெறும் கற்பிதமாகிவிட் டதே. இந்துத்துவம் பேசும் பா. ஜ. க. வே தலித் தொகுதிக ளுக்கான வேட்பாளர்களை உற்பத்தி செய்ய தலித் பண்ணை வைக்க வேண்டிய கட்டாயம். இப்படியொரு கட்சியரசமைப் புக்காகத்தான் தலித்துகள் இந்துக்களாகப் பரிணாமப்படுத் தப்பட்டிருக்கலாம். 1938 இல்கூட ராஜகோபாலாச்சாரி இந்து வாக்காளர்களைப் பார்த்து, "உங்கள் ஓட்டுகளைப் பஞ் சமர்களுக்குக் கொடுங்கள். இல்லாத இடங்களில் இந்துக்க ளுக்கு கொடுங்கள்" என்றே கேட்கிறார். பஞ்சமர்கள் இந் துக்களல்லர் என்பது அவர்களைவிட நமக்கென்ன அதிகம் தெரிந்துவிடப் போகிறது. இந்த நரித்தனம் தெரிந்தல்லவா, இந்து சனாதனத்தை முற்றும் நிராகரிக்கிற புத்தமதத்தைத் தம் மக்களுக்குப் பரிந்துரைத்தார் அம்பேத்கர்.

தலித்துகளைப் பஞ்சமர்களாக ஒதுக்கியவர்களும் அவர் கள்தாம். இன்று இந்துக்களாகக் கணக்கிடுகிறவர்களும் அவர்

படிப்பகம்

www.padippakam.com



கள்தாம். 'இந்துத்துவம் என்பது மதவெறியன்று; புனிதமான வாழ்க்கைநெறி' என்று ஆர். எஸ். எஸ். நிறுவனர் கோல்வால்கர் சொன்ன வியாக்கியானத்தை அப்படியே மீட்டுச் சொல்ல ஒரு உச்ச நீதிமன்றம். பஞ்சமர்களும் இந்துக்களாக சமத்துவம் பெற்றுவிட்டதால், பதவி உயர்விலும் சட்ட சமத்துவம் பெறுவதற்காக அவர்கள் உரிமையைப் பறிப்பதும் அதே நீதிமன்றம்.

இதன் அடங்கல் என்ன? தலித் மக்களை யாருக்காகத் தாலியறுக்கச் சொல்கிறார்கள் இவர்கள்?

வெகுகாலத்துக்கு முன்னால் குடியரசுத் துணைத் தலைவராயிருந்தவர் பி.டி. ஜாட்டி. ஆக மூத்தவர். இன்னும் இருக்கிறார். அவரிடம் கேட்கப்பட்ட ஒரு கேள்வியையும் அதற்கான அவர் பதிலையும் 'புதியபார்வை' 1-15, பிப்ரவரி 96 இதழில் படிக்க நேர்ந்தது.

கேள்வி: இளைஞர்கள் இன்று ஜனநாயகத்தில் நம்பிக்கை இழந்துவிட்டார்கள். அவர்களிடம் நாட்டுப் பற்றும் இல்லை. ஏன்?

பதில்: இதற்கு நமது இட ஒதுக்கீட்டுக் கொள்கையும் ஒரு காரணம். சமூக, கல்வி, பொருளாதார அடிப்படையில் பின்தங்கிய மக்களுக்குப் போதிய வாய்ப்பு வழங்குவதற்கு நான் எதிரியில்லை. அதற்காக திறமையுள்ள - தகுதியுள்ள இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு மறுக்கப்படுவதில் எவ்வித நியாயமும் இல்லை. இட ஒதுக்கீடு திறமையை ஒதுக்கிவிட்டுச் செயல்படுவதாக இருக்கக்கூடாது. இதுதான் இட ஒதுக்கீடு குறித்த என் கொள்கை.

எல்லா அரசியல்வாதிகளும், மேல்சாதிப் பிரியர்களும் 'இட ஒதுக்கீட்டை நான் எதிர்க்கவில்லை' என்றுதான் சொல்கிறார்கள். ஆனால் அதற்கப்பால் வரும் விளக்கெண்ணெய் வியாக்கியானங்கள் இருக்கின்றனவே — அவர்களின் கோர முகங்களின் குறுக்குவெட்டுத் தோற்றம்- அது இடஒதுக்கீடு ஒழியும்போதுதான் பார்க்கச் சகிப்பதாய் புன்முறுவல் பூக்கும். நிலத்தடி நீர் உற்ற மாசுபோல 'இட ஒதுக்கீட்டால் தான் இந்த நாடே நாறிப்போய்விட்டது' என்பதாக எப்போதும் அவர்களுக்குள் ஓர் ஆழ் மனப் புலம்பல். அதன் உள்ளை வெளியாக்கிப் புரட்டிப்போட்டுச் சொல்வதானால்,

படிப்பகம்

www.padippakam.com



'தலித்துகளை ஒரு பொருட்டாக அடையாளப் படுத்துவது தான் இந்த நாட்டின் நாசத்துக்குக் காரணம்' என்னும் பொறுமலாக இருக்கும். இந்த தேசத்தில் ஒரு கோடிப் பேர் அரசுப் பணியில் இருக்கிறார்கள். அவர்களில் தலித்துகள் 20 லட்சம் தேற வேண்டும். ஆனால் இல்லை. பாதிகூட இல்லை. அந்தப் பாதியும்கூட அதிகாரமற்ற எடுபிடிப் பணியில்தான். அவர்கள் தங்கள் இலக்கைப் பெற இன்னும் வெகு காலம் பிடிக்கும். மாடு மேய்ப்பதிலும் மலம் அள்ளுவதிலும் தலித்துகள் ஏகபோக ஆதிக்கம் செலுத்துவதுபோல் தனியார் துறை முழுதும் தலித் அல்லாதோரின் ஏகபோகம்தான். தனியார் துறையெனில் நூறு சதம் தனியார் உடமையே அல்ல. அரசும் அரசுடமை வங்கிகளும் கொள்ளை கொடுப்பதில் கொழுப்பவைதான். ஆனாலும் தலித்துகளுக்கு அங்கே விதிவிலக்கு வேலை வாய்ப்புத்தான். ஆக, அரசுப் பணிகளில் இந்த அரைக்கால் சதவீதத்துக்கும் குறைவான மனிதர்களால் தான் இளைஞர்கள் நாட்டுப்பற்றை இழந்து, ஜனநாயகத்தில் நம்பிக்கையற்றுப் போய்விட்டார்கள் என்பது தலித்துகளுக்கு வழங்கப்படும் எவ்வளவு பெரிய கௌரவம்.

'திறமை திறமை' என்று இவர்கள் எதைத்தான் தூக்கிப் பிடிக்கிறார்கள்? ஏன், ஹர்ஷத் மேத்தா, எஸ். கே. ஜெயின், இவ்விருவராலுமே ஆள்காட்டி விரல் நுனியில் தொங்கவிடப் பட்ட ஆனானப்பட்ட நரசிம்மராவ் - இவர்களைப் போன்ற திறமைசாலிகளால் இளைஞர்கள் ஜனநாயகத்தின்பால் நம்பிக்கையும் நாட்டின்பால் பற்றும் பெறக் கூடாதா?

இதுபற்றி இவர்கள் யோசிக்கவே மாட்டார்களா?

மாட்டார்கள்தான். திருடன் தன்னைக் குற்றம் சொல்லிக் கொள்வதில்லை. தெருவில் கிடக்கிற கல்லைத்தான் தன்னை இடித்துவிட்டதற்காகக் குற்றம் சொல்வான். அவன் பிடிபட்ட திருடன். பிடிபடாத திருடர்களுக்கு இடிக்கத் தெரியாமல் மிதிபடுகிற கல்லாய்த் தலித் மக்கள் புண்ணியம் கட்டிக் கொள்கிறார்கள்.

இது அராஜகம் என்பது எப்போது உணரப்படும்?

நடைபாதையில் கடைவிரித்து சிறுசிறு காய்கறி வியாபாரம் செய்து கொண்டிருப்பார்கள் பெண்கள். வங்கிக் கடன் பெறும் வாய்ப்பு மறுக்கப்படும் தலித்துகள் அவர்கள். ஈடு

படிப்பகம்

www.padippakam.com



வைக்க அவர்களிடம் ஏதும் இல்லை என்பதால் கடன் மறுக்கப்படுகிறவர்கள். வியாபாரத்திற்குப் பணம் வேண்டுமே. கந்துவட்டிக்காரனிடம் கடன் வாங்குகிறார்கள். காலையில் ரூ.90 வாங்கி மாலையில் ரூ. 100 திருப்பிக் கொடுக்கிறார்கள். ஒரு பகற் பொழுதுக்கான கடனை முழு நாளுக்கானதாகவே வைத்துக் கொண்டாலும் அவர்கள் கொடுக்கும் வட்டி வீதம் என்ன தெரியுமா? 4056 சதவீதம். அதாவது ரூ. 100க்கு ஓராண்டுக்கு அவர்கள் செலுத்தும் வட்டி ரூ. 4056. குளிரூட்டப்பட்ட அறையில் பனிக்கரடிகளைப் போல உலாத்திக் கொண்டு டாட்டா, பிர்லாக்களும் வியாபாரம்தான் செய்கிறார்கள். அவர்களுக்கு வங்கிக் கடன் உண்டு. ஈடு வைக்க அவர்கள் பெயர் ஒன்றே போதும். அவர்கள் செலுத்தும் வட்டி என்ன தெரியுமா? வெறும் 16 சதவீதம். அதாவது ரூ. 100க்கு ஓராண்டுக்கு அவர்கள் செலுத்தும் வட்டி ரூ.16 தான். இந்த லட்சணத்தில் இவ்வகை கடன்களில் வசூலாகாமல் தள்ளுபடி செய்யப்படும் கடன் எவ்வளவு தெரியுமா? முப்பத்தையாயிரம் கோடி ரூபாய். வங்கியாளராயிருந்த நண்பர் பா. இராமமூர்த்தி இதைச் சொன்னார். இவர்களைப் போல 253½மடங்கு அதிக வட்டி கட்டும் நடைபாதை கிழவிகளுக்குத் தள்ளுபடி ஏதேனுமுண்டா? வட்டியோடு அசலையும் சேர்த்துக் கட்டாமல் போனால் அவர்களே இந்த உலகத்திலிருந்து தள்ளுபடியாக வேண்டியதுதான்.

ஜனநாயகத்தில் மிகுந்த நம்பிக்கை கொண்டு, 53 கிரேடு சிமிட்டியால் கெட்டிக்கப்பட்ட வலிமையான நாட்டுப் பற்றோடு, இந்தியாவே விற்பனையாகிக் கொண்டிருக்கும் இந்தச் சந்தையில் தலித்துகள் எங்கே இருக்கிறார்கள்? காலம் போன காலத்தில் ஜாட்டி இதையெல்லாம் யோசித்திருக்கலாம்.

இன்று வரை, எல்லாக் கொம்பர்களின் இழிமனப் போக்கிற்கும் தலித்துகளே உரை கல்லாய் இருக்கிறார்கள்.

ராஜஸ்தானில் 'பன்வாரி' என்னும் பெண்ணைச் சில கயவர்கள் கெடுத்து விட்டார்கள். அந்தப் பெண் நீதி கேட்டு வழக்கு மன்றம் சென்றாள். ஜெய்ப்பூர் நீதி மன்றம் தீர்ப்பு வழங்கியது. "வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் உயர் சாதிக்காரர்கள் என்பதால் கீழ்ச் சாதியைச் சேர்ந்த பன்வாரியை அவர்கள் கெடுத்திருக்க மாட்டார்கள்," என்பதுதான் தீர்ப்பு.

படிப்பகம்

www.padippakam.com



இப்படியொரு தீர்ப்பை வழங்க இன்றைக்கும் ஒரு நீதிபதியால் முடிகிறது. அதை சகித்துக் கொள்கிற கையறு நிலையில்தான் தலித்துகளும் இருக்கிறார்கள். தீர்ப்பை எதிர்த்து மகளிர் அமைப்புகள் கண்டனப் பேரணி நடத்தியுள்ளனர்.

விந்துச் சீழை வெளியேற்றத் துடிக்கும் பன்றிகளெல்லாம் சாதி பார்த்து, முகர்ந்து பார்த்துதான் மலம் தின்கின்றன என்றொரு தீர்ப்பை வழங்குவதற்கு அந்த நீதிபதி வெட்கப்படவே இல்லை. போலீஸ்காரர்கள் திருட்டைத் தடுக்கத்தான் நியமிக்கப்படுகிறார்கள். ஆனால் இப்போதெல்லாம் அவர்களே திருடர்களாகக் கைதாவதை நாம் பார்க்கிறோம். நீதிமான்கள் யாவரும் குற்றவாளிகளைத் தண்டிக்கத்தான். ஆனால் அவர்களும் சோரம் போகிறவர்கள்தாம் என்பதை அந்தக்காலத்திலேயே ராஜாஜி அமைச்சரவையில் இருந்த ஜோதி வெங்கடாசலம் தன் அதிரடி வேட்டையில் கையும் களவுமாகப் பிடித்திருக்கிறார். "இந்தக் கீழ்ச்சாதிப் பெண்ணை மேல் சாதிக்காரர்கள் தொட்டுக் கெடுத்ததற்காக இவள் பெருமைப்பட வேண்டும்," என்று தீர்ப்பு வழங்குகிற மன நோயாளிகளும் இருக்கக் கூடும்; அல்லது இனிமேலும் பிறக்கக்கூடும். அப்படித் தீர்ப்பு வழங்குகிறவன், காலோடு மூத்திரம் போகும் அந்தக் கிராமத்துப் பெண்களின் உப்புத் தடத்தை நக்கிய கிறக்கத்தில் சொல்கிறவனாயிருக்கும்.

புத்திகூர்மைக்கும் மனிதச் சீர்மைக்கும் ஒரு தொடர்பும் இல்லையென்றே தோன்றுகிறது இருக்குமானால் கோட்சே ஒரு கொலைகாரனாகவும், திலகர் ஒரு பெண்ணடிமையாளராகவும், வ. வே. சு. ஐயர் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்குத் தனிப்பந்தி போட்டவராகவும், உலகின் மிகச் சிறுவயது டாக்டரானவன் வரதட்சிணைக் கைதியாவதும், சத்தியமூர்த்தி ஒரு தேவதாசிப் பிரியராகவும், ராஜாஜி ஒரு குலக்கல்வியாளராகவும், மதமென்னும் பேய் பிடியாதிருக்க வரம் வேண்டிய அந்த இராமலிங்க அடிகளாரே மக்களில் கீழ்ச் சாதி பற்றிக் கேள்வியற்றவராகவும் இருந்திருக்கக் கூடுமோ. புத்திகூர்மை என்பது தன்னலம் கேள்விக்குள்ளாகாதவரைதான்.

தமிழின் மேன்மை குறித்து அந்த நாள் காஞ்சி சங்கராச்சாரியுடன் சொற்போர் நிகழ்த்தத் துணிந்த இராமலிங்க அடிகளார், பிராமண வேதம் வரம்புகட்டிய நாற்பாலுக்கப்பால் 'பஞ்சமர்' என்றதோர் ஐந்தாவது பிரிவு வந்த அபத்தம் பற்றி

படிப்பகம்

www.padippakam.com



யும், தமிழோடு அதற்கென்ன தொடுப்பு என்பது பற்றியும் கேள்வி எழுப்பியிருக்கலாம். அவர் என்றில்லை. சூத்திரனாய்த் தன்னைச் சபித்துக்கொண்ட எந்தத் தமிழனும் தன் தமிழ்த் தேசிய வார்ப்பில் தலித் மக்களின் பங்கு பற்றியோ இருப்பு பற்றியோகூட இன்றுவரை கவலைப்படவில்லைதான்.

உதாரணமாக, இங்குள்ள தீவிர தமிழர் அமைப்புகள் ஈழத்துக் கொடுமையைக் கண்டித்து அறிக்கைகள் விடுகின்றன; அறைகூவல் விடுக்கின்றன; சிறப்பிதழ் வெளியிடுகின்றன. இதில் தலித் அமைப்புகளும் அடக்கம். 'நிறப்பிரிகை' கூட 'புலம் பெயர்ந்த தமிழர் நல மாநாடு' நடத்தித் தன் பொது அக்கறையை வெளிப்படுத்தியது. ஆனால் இதே தமிழர் அமைப்புகள் கொடியன்குளத்தில் தலித்துகளுக்கு நேர்ந்த கொடுமையைப் பற்றி, தென் மாவட்டங்களில் தொடர்ந்து நடந்த கொலைகள் பற்றி ரத்தம் கொதித்தனவா என்பது பற்றித் தலித்துகளுக்கு சந்தேகங்கள் உண்டு. ஈழத் தமிழர்கள் இங்கிருந்து போன தலித்துகள் அடங்கிய மலையகத் தமிழர்களை ஒரு பொருட்டாகவே கருதியதில்லை என்பதும் தலித்துகள் மனதில் உறுத்தலாய் நெருடத்தான் செய்கிறது.

இதுபோல் அர்த்தம் குவிக்கப்படுகிற தமிழரின் செயல்பாடுகள் அனைத்திலும் தலித்துகள் புறக்கணிக்கப்படுகிறார்கள் என்பது அவர்களுக்கெதிரான அராஜகம்தான்.

கொஞ்சம் யோசித்துப் பார்த்தால், இந்த மேல் சாதிச் சூத்ரப் போக்கில் ஓர் உண்மை பளிச்சிடுகிறது. தலித்துகளின் விழிப்புணர்வுடன் கூடிய இன்றைய மாறிவரும் சூழலில், தலித்துகளைச் சகித்துக் கொள்வதே அவர்கள் செய்யும் மகத்தான தலித் சேவை என்பதாக அவர்களிடம் ஓர் எழுதப்படாத கோட்பாடு இருக்கும் போல் தெரிகிறது. அதிலும்கூட அவர்களுக்கு இசைவான, ஒரு இறுக்கமான முடிச்சைத் தங்கள் இடுப்புக் கயிற்றில் போட்டு வைத்துக் கொண்டுள்ளார்கள். அதாவது, தலித்துகளைச் சகித்துக் கொள்வதுகூட இந்தப் பார்ப்பனர்களுக்கும் பார்ப்பனர்களாகத் துடிக்கும் சூத்திரர்களுக்கும் ஒரு பொருட்டல்ல. ஆனால் தலித்தாக அடையாளப்படுகிற ஒருவன் சுய சிந்தனையாளனாக, சுய செயல்பாடுள்ளவனாக, சுயமரியாதை காப்பவனாக, முரண்படும் மரபுகளைக் கேள்விக் குள்ளாக்குகிறவனாக இருப்பதைத்தான் அவர்களால் சகித்துக் கொள்ளவே முடிவதில்லை.

படிப்பகம்

www.padippakam.com



இந்தச் சகிப்பின்மையில் எல்லா புத்தி ஜீவிகளும், இலக்கிய வாதிகளும், சிந்தனையாளர்களும் அடக்கம்தான். இதில் விதி விலக்குகள் மிகவும் சொற்பம்தான். மேல் சாதிக்காரன் காட்டும் பரிவுக்கும் உதவிக்கும் தலித்தானவன் பணிவும் நன்றியும் காட்டி, அடங்கி நின்று, கும்பிடு போட்டு, அவன் மேலாண்மைக்குக் குந்தகம் வராமல் நடந்து கொள்ள வேண்டும் என்பதுதான் அவன் உள்ளார்ந்த எதிர்பார்ப்பு. தலித் ஒரு நல்ல அடிமையாயிருந்தால் மேல்சாதிக்காரன் தன் அனுதாபத்தை வெகுமதியாக வாரி வழங்கத் தயார். அடிமைச்சியை சிங்காரித்து படுக்கையறை வக்கிரத்தில் போட்டு அமுக்கி விளையாடுகிற ஆட்டம் அவர்களுக்கு எப்போதும் பிடிக்கும்.

"தலித் மக்களுக்கு இன்னமும் இரத்தம் கசிந்து கொண்டிருக்கும் பச்சைப் புண்கள் உண்டு; அவற்றில் இன்னமும் நாம் உப்பை வைத்துத் தேய்த்துக்கொண்டுதான் இருக்கிறோம்," என்ற உள்ளார்ந்த திடுக்கீட்டுணர்வு எந்தத் தமிழனுக்கும் அல்லது தமிழ் அமைப்புக்கும் இருப்பதாகத் தெரியவில்லை. 'தலித்தியம்' என்பதைத் தங்கள் வசதிக்கேற்ப ஒரு விவாதப் பொருளாக்கி மென்று துப்புவதையே தங்கள் இருப்புக்கான நிகழ்காலக் கடமையாகச் செய்து கழிக்கின்றனர். (அண்மையில் தலித்திய நவீனவாதிகளும் இதைத்தானே செய்துகொண்டிருக்கின்றனர் என்றொரு ஐயத்தை முன் வைக்கவும் இவர்கள் தவறவில்லை.) இவர்கள் காட்டும் பார்ப்பன எதிர்ப்புகூடத் தங்களை ஒன்றரைப் பார்ப்பானாக உயர்த்திக் கொள்ளத்தானே தவிர, தலித் மக்களையும் கை கொடுத்து உயரத் தூக்கி ஒருங்கிணைத்துக் கொள்ள அல்ல என்பது நன்றாகவே தெரிகிறது.

தலித் மக்களுக்கெதிரான இழிந்த மனப்போக்குகளின் எழுத்துருவம் ஏறக்குறைய இதுதான். இதை நேர்ப் படுத்துகிற வழி என்ன?

சமூகத்தின் சகல தரப்பினரும் தலித்துகளுக்கெதிரான கீழ் மனப்போக்குகள் கொண்டவர்களாய் இருப்பது ஒரு புறம் இருக்கட்டும். தலித்துகளே தங்களுக் கெதிரான அராஜக மனப் போக்குகளை நம்புகிறவர்களாய் இருப்பதுதான் அதைவிடக் கொடுமை.

படிப்பகம்

www.padippakam.com



இந்த விஷயத்தில் தலித்துகளும் பெண்களும் ஒரே மாதிரி யாகவே வெளிப்படுகிறார்கள்.

பெண்கள் தங்கள் ஆண்களின் ஆதிக்கக் கருத்துகளை உள்வாங்கி எதிரொலிக்கும் ரசம் பூசிய கண்ணாடியாகச் செயல்படுகிறார்கள். இதுதான் அவர்கள் விடுதலையைத் தள் ளிப் போடும் முதற் காரணியாகிறது. இவர்கள் போலவே தலித்துகளும் அவர்களைப் பற்றிய பிற சாதிக்காரர்களின் கணிப்புகளை உள்வாங்கி எதிரொலிக்கும் வெறும் மண் பூசிய கண்ணாடிகளாகக் குழம்புகிறார்கள். பெண்களுக்குத் தெளி வான பிம்பங்களாவது உண்டு. இவர்களுக்கு அதுவும் இல்லை.

சமூகத்தின் அத்தனை கேவலப் போக்குகளும் தலித்துக ளிடம்தான்— தலித்துகளிடம் மட்டும்தான் உள்ளன என்று தலித்தல்லாத ஒவ்வொருவனும் கற்பிக்கிறான்; பரப்புகிறான். இப்படிப் பரப்புகிறவனின் தந்தை பற்றிய சந்தேகத்தை அவனே மறந்து போகிறான். குறிப்பாக, பாலியல் உறவு மீறல் களில் எல்லா குப்பைகளையும் தலித்துகள் மேலேயே —தலித் பெண்கள் மேலேயே ஏற்றி வைத்து சந்தோஷப்படுகிறான். அவன் கற்பிக்கும் கற்பு தலித்துகள் கேட்டறியாத பண்பு என்று ஆணவமாகப் பேசுகிறான். இவைதான் அராஜகத் தின் உச்சம்.

இந்த நாட்டில் வேசிகள், அவிசாரிகள், கூட்டிக் கொடுப் பவர்கள், பொய்யர்கள், திருடர்கள், குடியர்கள், குடிகெடுப் பவர்கள் போன்றவர்களில் 99 சதவீதம் பேர் தலித்துகள் இல்லை. மாநகரங்களின் நடைபாதை குடிசைகள்தான் தலித் துகளுக்கான 'மாதிரியாக' எடுத்துக்கொள்கிற கிறுக்கன்கள் இருக்கக்கூடும். எல்லாசமூகப் பிரிவுகளையும் சேர்ந்த மீறல் களின் சங்கமமாய் அந்தக் குடிசைகள் இருப்பதுண்டு. ஆனால் மெய்யான தலித்துகள் கிராமங்களில் வாழ்ந்து மடிகிறார்கள். ஒருவனுக்கு ஒருத்தியாய் வாழ்கிறவர்கள்; மானத்தைப் பெரி தாய் மதிக்கிறவர்கள், நாணயத்தைக் காப்பாற்ற உயிரையும் கொடுக்கிறவர்கள், சொன்ன சொல் காக்கிறவர்கள் ஆகி யோர் பிற சாதிகளில் எத்தனை சதவீதம் தேறுவார்களோ அதைவிடக் கூடுதலாகவே தலித்துகளில் இருக்கிறார்கள். மனி தர்களிடத்தில் இப்போது மனிதாபிமானம் அருகி வருகிறது. ஆனால் தலித்துகளிடம் அதுதான் இன்னும் தலையாய பண்

படிப்பகம்

www.padippakam.com



பாக இருக்கிறது. இந்த மனிதாபிமானத்தை ஓம்புவதில் தங்கள் மானாபிமானத்தையே இரண்டாம் பட்சமாக்கிக் கொள்கிறார்கள். 'பகைவனுக்கருள்வாய்' என்பது மற்றவர்களுக்கு ஒரு தத்துவம். ஆனால் தலித் மக்களுக்கு அதுவே வாழ்க்கை. அல்லாமற் போனால் அவர்கள் அழிந்தே போயிருப்பார்கள். பிற சாதிக்காரனின் அயோக்கியத்தனமும், அடிமைப்படுத்தலும் தலித்துகளிடையே விளைவிக்கும் சீர்குலைவுகளையெல்லாம் அவர்களின் பண்பாக வர்ணிக்கும் புறம்போக்குத் தனம் தான் ஒருவேளை மேலோரின் கற்புநெறியாய் இருக்கக்கூடும். சொல்ல வெட்கமாய்த்தான் இருக்கிறது.

நாம்தான் பார்க்கிறோமே. படித்த தலித் இளைஞன் ஒரு பாப்பாத்தியைக் கட்டிக் கொண்டு ஒரு பார்ப்பானாகவே மாறிவிடுகிறானே. இது ஒன்றும் மந்திரத்தால் விளைவதல்ல. அப்படி மாறுவதற்கேற்ற ஒத்திசைவான பண்புகளில் அவன் ஏற்கனவே ஊறியிருப்பதால்தான் இது சாத்தியமாகிறது. (இப்படி அவன் தொலைந்து போவது சரிதானா என்பது வேறு விஷயம்.) சோழியன் குடுமி சும்மா ஆடாது என்பார்கள். குடுமி வைத்த சோழியன் மேல்சாதியில் மட்டும் தான் இருக்கிறான் என்பதில்லை. தலித்துகளிலும் அந்தத் தன்மானச் சோழியன் உண்டு. அவனை அடையாளம் காண்கிற ஒருதற்செயல் பக்குவம்கூட - ஒரு ரகசிய யோசனைகூடப் பிற சாதிக்காரனிடம் இல்லை.

இந்த உண்மைகளைக் குறைந்தபட்சம் தலித்தியர்களும் தலித் இலக்கியவாதிகளும் புரிந்து வைத்திருந்தால் நல்லது.

'மலத்தைப் பற்றி எழுதினால் அது தலித்தைப் பற்றி எழுதியதாகும்' என்று காட்சிப் படுத்தும் அராஜகப் போக்கை முதலில் தகர்த்தெறிந்தால், அதுவே தலித்துகளைச் சரியான வெளிச்சத்தில் முன் நிறுத்தும் முதல் படியாய் இருக்கும்.

---

குறிப்பு:

சகோதரர் வல்லிக்கண்ணனின் பவள விழா 15 - 11 - 1995இல் நடந்தது. கட்டுரையின் தொடக்கத்தில் நேர்ந்த அச்சுப் பிழையை திருத்தி வாசிக்கவும். படிப்பதிலும் படைப்பதிலுமாக எழுத்தையே சுவாசமாக்கிக்கொண்ட சகோதரர் நீடுவாழ வேண்டுகிறோம். -ஆர்.

படிப்பகம்

www.padippakam.com

# கோடு

(தமிழ் இயல் மீட்சிப் பேரவை)

'கோடு' சிறப்புக் கூட்டம் சைதை, திருவள்ளுவர் குருகுலம் பள்ளியில் 7 - 1 - 1996 ஞாயிறு காலை 10 - 30 மணிக்கு நடை பெற்றது.

## தமிழன் — ஒரு சித்திரம்

என்னும் தலைப்பில் 'நிறப்பிரிகை' தோழர்கள் பொ. வேலுசாமி, அ. மார்க்ஸ், ரவிக்குமார் மூவரும் தங்கள் கருத்துகளை வழங்கினார்கள். கவிஞர் இன்குலாப் தலைமை ஏற்றார். கூட்டத்திற்கு 72 நண்பர்கள் வந்திருந்தனர். பேச்சுகளும், புரிதலும், கலந்துரையாடலும் நண்பர்களிடையே ஒரு நான்கு மணி நேரம் அறிவார்ந்த கணங்களை அரங்கேற்றின.

கவிதாசரண் தன் வரவேற்புரையில், "தமிழ்நாட்டில் 500க்கும் மேற்பட்ட தமிழர் அமைப்புகள் இருக்கின்றன. அவை ஒன்றுகூடி யோசித்தாலே தமிழர் அடையாளம் பற்றிய சிக்கறுத்து ஒரு தெளிந்த முடிவெடுத்திருக்கலாம். ஆனால் எல்லாரும் இன்னமும் தமிழின் பேரால் ஒளிந்து கொள்ளத்தான் ஓர் இடம் தேடிக் கொண்டிருக்கிறார்கள்," என்றார்.

இன்குலாப் தன் தலைமையுரையில் 500க்கும் மேற்பட்ட அமைப்புகள் குறித்து 'சூழ்கின்ற பேதம் அத்தொகையிருக்கும்' என்னும் பாரதிதாசனின் கவிதை வரியை நினைவு கூர்ந்து, "இரண்டாயிரம் மூவாயிரம் ஆண்டுப் பழமையான நம் பண்பாடு பல சமயங்களில் நம்மை அழுத்தும் சுமையாக மாறியுள்ளதைப் பார்க்க முடிகிறது. நம் சீரழிவிற்கும் அடிமைத் தனத்துக்கும்கூட நம் பண்பாடுகளிலேயே அதற்கான கூறுகள் இருப்பதை நம்மால் பார்க்க முடிகிறது. தலித்துகள் மத்தியில் தமிழன் என்னும் அடையாளத்தை ஏற்பதா இல்லையா என்ற கேள்வி கடுமையாக எழுகின்றது. அதற்கான நியாயமும் இருக்கிறது. இதில் 'நிறப்பிரிகை' தொடர்ச்சியாகச் சில கருத்துகளைச் சொல்லிக் கொண்டு வருகிறது. அதற்கு ஆதரவாகவும் எதிராகவும் விவாதங்கள் தொடர்கின்றன. அவர்கள் கருத்தைப் பகிர்ந்து கொள்ளவே இங்கே கூடியிருக்கிறோம்," என்று சொல்லி அவர்களைப் பேச அழைத்தார்.

முதலில் வேலுசாமி பேசினார்.

படிப்பகம்

www.padippakam.com



அவரது பேச்சில் நிறைய செய்திகள் —நிறப்பிரிகையில் பல சொல்லப்பட்டிருந்தாலும் — பார்வையாளர்களைச் சிந்திக்க தூண்டு பவையாய் இருந்தன. தமிழன் - தமிழ்க்கலாச்சாரம், பண்பாடு பற்றியெல்லாம் நிறப்பிரிகை மாறுபட்ட கருந்துகளைச் சொல்வ தேன் என்பதற்கான அடிப்படையை விளக்கினார். இலக்கியம், வரலாறு என்பனவெல்லாம் மையம் சார்ந்த ஆதிக்க சாதியின் பெருமை பேசுதலாகவே இருக்கின்றன. ஓரஞ்சார்ந்துள்ள மக்க ளைப் பற்றி இருட்டடிப்பு செய்யப்பட்டுள்ளன. இந்த இருட்ட டிப்பு மையம் சார்ந்த நூல்களின் சில குறிப்புகளிலிருந்தே அறிய முடிகிறது. அவற்றைத் திரட்டி முன்வைப்பதாலேயே நிறப்பிரிகை மற்றவர்களிலிருந்து மாறுபடுகிறது. உதாரணமாக களப்பிரர் காலத்தை இருண்ட காலம் என்கிறார்கள். ஆனால் அக்காலத்தில் தான் பதினென் கீழ்க் கணக்கு நூல்கள் பலவும், காப்பியங்கள் பலவும் எழுதப்பட்டன. அவர்கள் காலத்தில்தான் ஏற்கனவே விளிம்பு மக்களின் பயன்பாட்டிலிருந்து பின்னர் அவர்களிடமிருந்து பிடுங்கி பார்ப்பனர்களுக்குப் ‘பொது நீக்கி’ அளித்த நிலங்கள் திரும்பவும் அவர்களுக்கே வழங்கப்பட்டன. அவர்கள் காலத்தைச் சார்ந்த சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டலகேசி, நீலகேசி போன்ற நூல்களில் பெண்கள் முதன்மைப் படுத்தப்பட்டனர். அப் படி பிருந்தும் அவர்கள் காலம் இருண்ட காலமாகக் கணிக்கப்பட் டதற்குக் காரணம் அவர்கள் பார்ப்பனர்களையும் உள்ளூர் தலை வர்களையும் அனுசரித்துப் போகவில்லை என்பதுதான். அதனா லேயே அவர்கள் ஆளத் தகுதியற்றவர்களாகவும் கலகக்காரர்களா கவும் ஒதுக்கப்பட்டனர். எனில், தமிழ்ப் பண்பாடு, கலாச்சாரம் ஓங்கியிருந்த காலம் என்ன? வேதங்களையும் யாகங்களையும் போற்றி, பிராமணமயமாக்கலை வரவேற்ற காலம்தான். தமி ழக வரலாற்றில் கல்வி வரலாறு என்பது வடமொழிப் பாடசாலை கள் நிறுவுவதும், வேதங்கள் போதிப்பதும் அவற்றுக்கு நிவந்தங் கள் எழுதி வைப்பதும்தான். இதை அழித்தவர்களும் மறுத்தவர் களும் களப்பிரர்கள், மற்றும் புத்த, சமண சங்கங்கள். ஆகவே மையங்களால் போற்றப்படுவது பார்ப்பன மயமாக்கப்பட்ட கலாச் சாரம்தான். அது மெய்யான தமிழ்க் கலாச்சாரம் ஆகாது.

வேலுசாமியின் பேச்சை மேற்கண்டபடி திரட்டலாம். மேலும் அவரது பேச்சின் பல குறிப்புகள் ஆழ்ந்து சிந்திப்பதற்கானவை.

அடுத்து ரவிக்குமார் பேசினார்.

‘இப்போது இதுபோன்ற கலந்துரையாடலுக்கான சுமுகமான சூழல் இல்லை’, என்னும் முன்னுரையோடு பேசத் தொடங்கினார்.

—இதன் தொடர்ச்சி 67 ஆம் பக்கம்—

படிப்பகம்

www.padippakam.com

# ஆதிக்கம்

ஜி. காசிராஜன்

அந்த மரநிழலுக்கு நடந்து போய்க் கொண்டிருந்தேன். ஏப்ரல்மாத காலை நிழல் குளிர்ச்சியாகவும் இதமாகவும் இருக்கும். இன்னும் வெயிலால் சூடேறாமல் கரிசல் மண் குளிர்ச்சியாக இருந்தது. அங்கு உட்கார எனக்கு மிகவும் பிடிக்கும். உட்காரும்போது நிம்மதியாகவும், பயமின்றியும், ஆரோக்கியமாகவும், மனது குளிர்ச்சியாக மிளிரும்.

அந்த ஆலமரம் பழைய காலத்ததாகவும் படர்ந்தும் இருந்தது. அது கண்மாயின் கீழ்க் கரையில் இருந்தது. விழுதுகள் விட்டு, அந்தக் கரை முழுவதும் மரங்களாக இருந்தன. கண்மாய்க்குள்ளும் விழுதுகள் விட்டு இருந்தது. கூடாரம் போன்ற மரத்திலிருந்து ஏராளமான விழுதுகள் தொங்கிக்கொண்டிருந்தன. பழைய தலைமுறைகள் மாதிரி, எளிதில் விழுதுகள் தரை ஊன்ற முடியவில்லை. கரைக்கு வெளியே விளைச்சல் நிலமாதலால், நிலத்துக்காரன் தரையில் ஊன்ற முயன்ற விழுதுகளை வெட்டித் தள்ளினான். விழுதுகளைப் பற்றி அவனுக்குக் கவலை இல்லை. அவனுக்குத் தேவை பணப்பயிர்களின் விளைச்சல் மட்டுமே. வெட்டிய இடத்திலிருந்து, விழுதுகள் பாதியோடு தழும்புகளாக, இயலாமையோடு நின்றன. கரைக்குள் சின்னப் பையன்களும், இளவட்டங்களும் ஊஞ்சல் ஆடி ஊஞ்சல் ஆடி, அவைகளின் வளர்ச்சியைத் தடுத்தனர். தரையிலிருந்து ஒரு ஆள் உயரத்திற்குத் தொங்கிக் கொண்டிருந்தன. விழுதுகள் ஊஞ்சலாக சிறுவர்களைத் தாங்கி ஆடிக்கொண்டே இருக்கின்றன காலம் காலமாக.

இப்பொழுதும் ஊஞ்சல் ஆடிக்கொண்டிருக்கிறார்கள். முன்னாடி மாதிரி அதற்கான சூழ்நிலை இல்லை என்றாலும், இப்பொழுதும் மரம் கம்பீரமாகத்தான் இருக்கிறது. மிக ஆழத்தில்—தலைமுறை தலைமுறையாக — வேர் போட்டு இருப்பதுதான் காரணமாக இருக்கலாம்.

முன்னாடி பெரியவர்கள் என்று சொல்லப்பட்டவர்கள், விழுதுகளை ஜாக்கிரதையாகப் பாதுகாத்து, கரையில் ஊன்ற வைத்தார்கள். இப்பொழுது யாருக்கும் அதைப் பற்றிக் கவலையில்லை. விழுதுகளைப்பற்றி அக்கறை கொள்ள யாரும் முடியாமல் இருக்கிறார்கள். இருக்கிற மர நிழலில் இருந்துகொண்டே, விழுதுகள் ஊன்ற முடியாமல் தொங்கிகொண்டு இருக்கிற மாதிரி, குளிர் பிரதேச கொழு கொழு செடிகளைப் பற்றி எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். மரத்தின் தன்மையை வியாபார தந்திரம் மாற்றிக் கொண்டே இருக்கிறது. செயற்கைத் தன்மை பெருகிப்போச்சு.

படிப்பகம்

www.padippakam.com



கண்மாய்க் கரையில் ஏறியவுடன், கரையை ஒட்டிய நிலத்தைப் பார்த்தேன். ஒட்டு வீரிய கம்பு விதைத்து, தட்டையை அறுத்து இருந்தார்கள். வெயிலுக்கு ஆட்கள் உட்கார்ந்து உட்கார்ந்து மரநிழலில் தரை சுத்தமாக இருந்தது. கரையில் ஒரு பக்கம் இருந்து, கரையின் கடைசிக்கு பார்வையை விட்டபொழுது, அங்கே இரண்டு பேர் உட்கார்ந்து இருந்தார்கள். அவர்கள் மங்கலாகத் தெரிந்தார்கள். கூர்ந்து பார்த்தபொழுது, நானும் என் மனைவியும் உட்கார்ந்து இருப்பது மாதிரி தெரிந்தது. பிறகு கண்ணுக்கும் அவர்களுக்குமான தூர மங்கலில் ஒரு ஆணும் பெண்ணுமாகத் தெரிந்தார்கள். விடுமுறையில் ஊருக்கு வந்தால், நானும் என் மனைவியும் அங்குதான் உட்கார்ந்து பேசிக்கொண்டிருப்போம். இப்பொழுது அவர்கள். இப்படி நாங்களும் அவர்களுமாக மாறி மாறி இருந்தோம்.

மரத்தில் நிறைய காகங்கள் இருந்தன. எல்லாக் கிளைகளிலும் காகங்கள் கரைந்துகொண்டிருந்தன. பக்கத்திலிருந்த வேப்ப மரங்களுக்கும் ஆலமரத்திற்குமாகப் பறந்துகொண்டிருந்தன. மைனாக்களின் சத்தம் இருந்தாலும் காகங்களின் இருப்பே அவைகளின் குரலின் மேலாதிக்கத்தின் மூலம் உணர முடிந்தது.

காகங்கள் சுறுசுறுப்பாக இருந்தன. இறக்கைகளை மேலே தூக்கித் தூக்கிக் கரைந்தன. ஒவ்வொரு கிளைக்கும் தாவின; தத்தின. மிகுந்த ஜாக்கிரதையுடன் இருந்தன. ஒன்றையொன்று சண்டையிட்டுக்கொண்டு விரட்டிக்கொண்டிருந்தன. சின்ன கை அசைப்பிற்கும் பறந்து மறைந்தன. மத்தியான வெயிலுக்கும் ராத்திரிக்கும் தவிர அவைகளால் சும்மா இருக்க முடியாது.

நடுக்கரைக்குப் போனவுடன் அவர்கள் பேசுவது கேட்டது. பேசியது கூட போன வருஷம் இதே இடத்தில் நானும் என் மனைவியும் பேசியது மாதிரியே இருந்தது. தாத்தா காலத்துப் பேச்சுக்கள் காற்றில் கலந்து மீண்டும் எங்களால் பேசப்படுகிறது. கணவன் சந்தோஷமாகவும் மிடுக்குடனும் இருந்தான். ஒளிவு மறைவற்றுப் பேசினான். எதையும் செய்ய அவனுக்கு உரிமை உண்டு என்பது மாதிரி பேசினான். அவனுக்கு மட்டுமே நிறைய விஷயங்கள் இருக்கிற மாதிரி பேசினான். அவனால் செய்ய முடிந்தவைகளே ஆகக் கடைசித் திறமை என அவளை நம்ப வைத்துக் கொண்டிருக்கிறான்- அவளுக்கான திறமைகள் அவளுக்கும் அவனுக்கும் மறந்து போயிருந்தன. என்னால் அமைக்கப்பட்ட கூடாரமே உன்னைக் காப்பாற்றும் என்றான் அவளிடம்

நல்ல வெயில் அடித்தது. லேசான காற்றும் வீசியது. அது அவனுக்கு ஊக்கம் அளித்திருக்கலாம். மனைவி அவன் சொல்

படிப்பகம்

www.padippakam.com



வதைக் கேட்டுக் கொண்டே இருந்தாள். ஊம் கொட்டினாள், அல்லது கேள்வி கேட்டாள். அதற்கு அவன் பயமின்றியும், அவளைப் பற்றிக் கவலைப் படாமலும் பதில் சொன்னான். அவள் மாமியாரையும், நாத்தனார்களையும் குறை சொல்லிக் கொண்டே இருந்தாள். வாங்கப் போகும் சொத்துக்கள் தன் பெயரில் இருக்கட்டும் என்று மிகவும் கெஞ்சினாள். இப்பொழுதும் பேசிக்கொண்டு இருக்கிறார்கள்.

"காக்கைகள் ரொம்ப எச்சரிக்கையாயும் தைரியமாயும் இருக்கே."

"தலைமுறை தலைமுறையாக காக்கைகள் சூழலை தங்களுக்கு சாதகமாக்கிக் கொண்டன. அதனால் தைர்யமா இருக்கு. அவைகளுக்குள்ளே ஒன்னுக்கொன்னு எச்சரிக்கையா இருந்துக்கும்."

"எக்கச்சக்கமாயிருக்கே."

"காக்கைகள் ஜனத்தொகைமாதிரி பெருகிக்கொண்டே இருக்கு. அதுவும் போக, காக்கைகளை யாரும் சாப்பிடுவதில்லை. காக்கைக் கறி நல்லா இருக்காது என்று வலுக்கட்டாயமாக நிறுவப்பட்ட கருத்து. அதுவும் அவைகளுக்கு சாதகமாய்ப் போச்சு."

அவனுடைய எண்ணங்களாகவும், பேச்சுகளாகவும் இருந்தன காக்கைகள். அவனுடைய மனத்தில் வெயில் அடித்தது. அதில் பிரம்மாண்டமான ஆலமரம் இருந்தது. அதில் காகங்கள் இருந்தன. அவனுக்கு வெளிச்சமே முக்கியம். வெளிச்சத்தில்தான் காக்கைகள் வாழும். ஆலமரங்களிலிருந்த பொந்துகளைப் பற்றி அவன் அதிகம் கவலைப்படாமல் இருந்தான். அதிலிருந்த இருட்டும், இருட்டுக்குள் மறைந்து இருந்தவையும், அவனுக்கு ஒரு பொருட்டில்லை. அவை இல்லாதது மாதிரியே நம்பினான். அவனுடன் பேசிக்கொண்டிருந்த அவள்தான் ஆலமரங்களை உற்றுப் பார்த்தாள். விழுதுகள் பின்னிப்பிணைந்ததில் பொந்துகள் விழுந்திருந்தன. காலங்கள் பொந்துகளை உண்டாக்கி இருந்தன. மரம் ஒவ்வொரு இடத்தில் இற்றுப் போய் பொந்துகள் உண்டாகியிருந்தன. இரண்டு கிளைகள் பிரியும் இடத்தில் இருந்த பொந்தில் இருந்து ஒரு ஆந்தை எட்டிப் பார்த்தது. அவள் அதை ரசித்தாள். அவள் முகம் பிரகாசம் அடைந்தது. ஆந்தைகளையே அவளுக்கு மிகவும் பிடிக்கும். ஆனால் காக்கைகளைத்தான் எனக்குப் பிடிக்கும் என்று மௌனமாகச் சொன்னாள். திருதிரு என்று விழித்தது ஆந்தை. அழகாக உட்கார்ந்திருந்தது. தரையில் சயனித்துப் படுத்திருந்தவன் அவன் கால்களுக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருந்தவளைக் காலால் தடவி என்ன பேச்சைக் காணோம் என்றான். படக்கென்று இவன் பக்கம் திரும்பி என்ன என்றாள். பயந்து

படிப்பகம்

www.padippakam.com



போய் இருந்தாள். இருட்டில் இருந்து விட்டு உடனே வெளிச்சத்தைப் பார்க்கிற கூச்சம் முகத்தில் இருந்தது. நடுங்கிப் போனாள். எங்கே அவன் ஆந்தையைப் பார்த்து விடுவானோ என்று பயந்தாள். அவன் கண்களில் காக்கைகளின் கூரிய அலகு தெரிந்து நடுங்கினாள். பின், இருட்டு அவள் மனத்திற்குள்ளாகவும், வெளிச்சம் வெளியேயாகவும் சமனப்பட்டுச் சரியானாள்.

"நான் மரத்தில ஒன்னைப் பார்த்தேன். என்னன்னு கண்டு பிடிங்க பாப்போம்," என்றாள்.

"என்ன அதிசயத்தைக் கண்டுட்டே மரத்திலே?" என மரத்தை நோட்டம் விட்டான். மரமே அவனாக இருந்தது அவனுக்குத் தெரியவில்லை. அவன் பார்த்துக் கொண்டிருந்த போதே அவன் கண்களிலிருந்து ஒரு காக்கை பறந்து அந்த பொந்துக்குப் பக்கத்தில் போனது. ஆந்தை பயந்து உள்ளே இருளில் மறைந்தது. காக்கை பொந்தின் மேலே, கிளையில் அமர்ந்து கொண்டது.

"ஒன்னும் தெரியலையே," என்றான். "காக்கைதான் பறந்திட்டு இருக்கு."

"அப்ப நல்லதுதான்," என்றாள் அவள். அவளை மெல்ல சீண்டினான் அவன். இருவரும் மன நினைவுகளிலும், உணர்ச்சிகளிலும் வெந்தார்கள். மரநிழலின் காற்றில் மிதந்தார்கள். விழுந்துவிடாமல் ஒருவரை ஒருவர் கட்டிக்கொண்டார்கள். முத்தமிட்டுக் கொண்டார்கள்.

நான் காகங்களைப் பார்த்துக்கொண்டிருந்தேன். வேப்பமரங்களில்தான் பெரும்பாலும் காக்கைகள் கூடு கட்டி இருந்தன. இப்ப வேப்பமரங்கள் காய்ந்துக் குலுங்கின. சரம் சரமாக வேப்பங்காய்களும் பழங்களும் காக்கைகளுக்கு நல்ல வேட்டை. பழங்களைத் தின்று விதைகளாக எச்சமிட்டன. சிறுவர்கள் காக்கைகள் சிந்திய வேப்பங்கொட்டைகளைப் பொறுக்கினார்கள். எல்லா வேப்ப மரங்களிலும் சிறுவர்களும், சிறுமியர்களும் செரட்டையுடனும் ஓலப்பொட்டியுடனும் குனிந்த வண்ணம் இருந்தார்கள். சில கிழவிகளும் இருந்தார்கள். சிறுவர்களுக்கு ஆலமரத்தின் பிரம்மாண்டம் கவர்ச்சியற்று இருந்தது. அவர்கள் அவர்களாக இருந்தார்கள். கொக்குகளைப் பிடித்த அளவுக்கு காக்கைகளைப் பிடிக்கவில்லை. வேப்பமரங்களில் ஏறி விளையாடினார்கள். விளையாட்டின் உச்சத்தில், நாலைந்து பேர் சேர்ந்த கூட்டத்தின் சுருதியில், காக்கைகூடுகளில் இருந்த குஞ்சுகளை எடுத்து விளையாடினார்கள். தூர வீசி வேடிக்கை பார்த்தார்கள். காக்கைகள் கூட்டமாக கத்தின. ஒப்பாரி வைத்தன. கூட இவர்களும் ஒப்பாரி வைத்தார்கள். வேப்பங்கொட்டைகளை பொறுக்கிக் கொண்டிருந்த கிழவி

படிப்பகம்

www.padippakam.com



இவர்களை சத்தம் போட்டுக் கொண்டிருந்தாள். "டேய், வெளங்க மாட்டீங்க. அந்தப் பாவமெல்லாம் ஒங்களைப் புடிக்கும்." குஞ்சுகளின் மேல் கல் வீசினார்கள். குஞ்சுகள் இறந்தன. காக்கைகள் கூட்டமாகக் கத்தி விட்டுப் பின் மறைந்தன. வேறிடத்தில் கூடு கட்ட ஆரம்பித்தன.

நான் அவர்களைப் பார்த்தேன். இன்னும் அவள் கேள்வி கேட்டுக் கொண்டிருந்தாள். இருட்டில் அவளுக்கான ஆந்தைகள் வாழ, காகங்களைப் பற்றியே கேள்வி கேட்டாள். வெளிச்சத்தில் காக்கைகள் வாழ்ந்ததால், அவைகளைப் பற்றித்தான் பேச முடிந்தது. அவள் ஆந்தைகளைப் பற்றி ஒரு பேச்சு பேசவில்லை. இது அதற்கான நேரமில்லை. பேசினால் காக்கைகள் ஆந்தைகளை விரட்டி விரட்டிக் கொத்தும். அவனும் ஆந்தைகளின் இருப்பைப் பற்றிக் கவலைப் பட்டதாகவே இல்லை. ஆந்தைகளை அவன் ஒரு பறவையாகவே எண்ணவில்லை. அவைகளைப் பேய்களாகவும் பிசாசுகளாகவும் எண்ணினான்.

அவள் கேட்டாள்:

"காக்கைகளுக்கு வெளிச்சத்துல எவ்ள ஆளுமை இருந்தாலும், சில சமயம் ஏமாந்து போகும் தெரியுமா?"

"யாருகிட்ட?" என்றான்.

அவளுக்கு மிகச் சிரிப்பாக இருந்தது. சந்தோஷமாக அவனுக்குச் சரிசமமாக இருந்து சொன்னாள்:

"குயிலு லேசா ஏமாத்திரும் தெரியுமா காக்கைளை?"

"இருக்கலாம்," என்றான். பிறகு நிதானமாகச் சொன்னான்:

"ஒனக்குப் புரியுமோ என்னமோ. இருந்தாலும் சொல்றேன். இருக்கிற நிலைமையில குயிலுன்னு ஒன்னு இல்ல தெரியுமா? ஒரு காக்கையே தன் கூட்டுல காக்கையாகவும், இன்னொரு கூட்டுல குயிலாகவும் மாறும். ஆனால் காக்கை காக்கையே."

அவள் மனதில் பெரிய பாறாங்கல் விழுந்தது. அதிர்ச்சி அடைந்தாள். அவமானமாக இருந்தது. இருந்தாலும் முகத்தில் சலனமற்று இருந்தாள். அவன் இவளைப் பார்த்துச் சிரித்தான். பிறகு சொன்னான் சயனித்து சாய்ந்து கொண்டே, "ஏமாந்தது கூடு தானே தவிர காக்கையல்ல. எல்லா காக்கையும் ஒரே மாதிரி தான். காலை கொஞ்சம் அமுக்கி விடு. படுத்துக்கிட்டே இருந்தது மரத்துப்போச்சு."

அந்த வார்த்தைகள் காற்றில் அலைந்து என்னையும் என் மனைவியையும் மெல்ல அந்த இடத்தில் மாற்றி உட்கார வைத்தது. நாங்களாக இருந்தாலும் அவர்களாக இருந்தாலும் வெளிப்பட்ட பேச்சுக்கள் ஒன்றாயிருந்தன. அந்தப் பேச்சு எப்படி ஆரம்பித்தது என்று எனக்கே ஆச்சரியமாக இருந்தது. அப்பொழுதும் இப்படித்தான் ஆலமரங்களில் காக்கைகளே இருந்தன. சற்று

படிப்பகம்

www.padippakam.com



முன்னர் வீட்டில்,யாருமற்ற தனிமையில் இருவரும் இணைந்த உற்சாகமும் ஆயாசமும்தான் எங்களது பேச்சுக்குக் காரணமாக இருக்கலாம். அல்லது தற்செயலாக அந்த வழியாக மேலக்காட்டுக்குப் போன என் அத்தை மகளாகவும் இருக்கலாம். என் மனைவிதான் ஆரம்பித்தாள்.

"ஒங்க அத்தைப் பொண்ணு, ஒங்க மேலே ரொம்ப பிரியமா இருக்கா."

"அவ எப்பவும் அப்படித்தான். ரொம்ப பிரியமா இருப்பா."

"அவளத் தொட்டுருக்கீங்களா? அய்ய்ய்ய."

"ரெண்டு பேருக்கும் தொடுவதற்கான சந்தர்ப்பங்களும் ஆசையும் இருந்தன. ஆனா முடியாமப் போயிடுச்சு."

காக்கைகள் சுதந்திரமாய்ப் பறந்தன. எங்கள் தலைக்கு மேலே ஐந்தாறு காக்கைகள் அமர்ந்திருந்தன. கரைந்தன.

"ஏய், எங்கிட்ட மறைக்காமச் சொல்லுங்க."

"இதிலென்ன பயம்? நான் காலேஜில் படிச்சுக்கிட்டிருக்கிறப்ப திருவிழாவுக்கு வந்திருந்தேன். சொந்தக்காரங்க நிறைய வந்ததுனால நான் அவங்க வீட்டு மாடியில படுக்கப் போனேன். எங்கூட எங்க சித்திப் பையனும் வந்திருந்தான். நான் மட்டும் மாடிக்கு ஏறினதைத்தான் அவ பார்த்தா. பத்துமணிக்கு மேலே அவ தனியா வந்துட்டா. நாங்க யாரும் ஒன்னும் பேசல. எங்க சித்தி பையன் கூட இருந்தவுடனே அவ எறங்கிப் போய்ட்டா. இன்னைக்கும் அந்தப் பாசம் இருக்கு எம்மேலே"

"அவ கல்யாணம் முடிஞ்சப்பிறகும், அவ வீட்டுக்கு அடிக்கடி போவீங்களாமே."

"ஆமா. அவ புருஷன் இல்லாதப்போ போவேன் பிரியமா பேசுவா. கொழந்தைங்க இருக்கிறப்ப தொட முடியுமா? அன்பா சாப்பாடு போடுவா. நான் சாப்பிட்ட தட்டுலேயே அவளும் சாப்பிடுவா. பக்கத்தூர்ல எங்க மாமா பொண்ணு கவிதா இருக்காள்ல அவளைத்தான் தொட்டுருக்கேன்."

"எப்ப?" என்றாள். அவள் மனசுள் ஆந்தைகள் சிறகடித்தன.

"மாமா வீட்டுக்கும் எங்களுக்கும் அவ்வளவு ஆகாதில்ல. அதனால நான் மட்டும் எப்பவாச்சும் வீட்டுக்குப் போவேன். ஒரு தடவை போனப்ப, மாமா அத்தை தோட்டத்துக்குப் போயிருந்தாங்க. அவ மட்டும் தான் இருந்தா. பார்வையிலேயே எனக்கு தெரிந்துபோச்சு. எனக்காக ஸ்பெஷலா சமைச்சா. சாப்புட்டுத்தான் போகனும்ங்கறா. பேசிக்கிட்டே இருந்தோம். ஒலகத்தில நாங்க மட்டும்தான் இருக்கிறதா நெனப்பு. அவ தம்பி கூடவே இருக்கான். விளையாடப் போனவன் வந்துட்டான். நான் காசு கொடுத்து கடைக்குப்போய் பிஸ்கட்டு வாங்கிட்டு வான்னுட்டு அனுப்

படிப்பகம்

www.padippakam.com



பினேன். நாங்க ரொம்ப நெருங்கினோம். கையைப் பிடித்த வுடன் கூச்சப்பட்டுட்டு அடுப்பங்கரை ஓடிட்டாள். அப்பப் பார்த்து அவ தம்பி போன வேகத்தில் கிக்கீக்கீன்னு பஸ் ஓட்டிட்டு வந்துட் டான். எனக்குன்னா ஒரே கடுப்பு. பொறகு அவதான் பேய் தோட்டத்துக்குப்போய் அம்மாவைக் கூப்பிட்டுவான்னு அனுப்பி வைச்சா. பொறகென்ன, முடிச்சு சாப்பிட்டு இருக்கிறப்ப, அத்தை யும் அவனும் வந்தாங்க.''

அவள் முகம் ஒரு மாதிரி ஆனது. வெறுப்பென்று சொல்ல முடியவில்லை. ஆனால் வெறுப்பும் இருந்தது. கண்களும் முக மும் சூடேறியிருந்தன. நான் மிகுந்த யோசனையுடன் அவளைக் கேட்டேன். இந்தக் கேள்வி கேட்பதற்கு இடைவெளி தேவைப்பட் டது. பின் கேட்டேன். ஆம் என்று பதில் வந்துவிடுமோ என்று பயந்தேன். நூறு வருடங்களுக்கு முன்னால் நான் இப்படி கேட் டதில்லை. இப்பொழுது கேட்டேன்.

“நான் மட்டும் சொல்லிட்டிருக்கேன். நீ ஒன்னப்பத்திச் சொல் லேன்.''

படாரென்று சுவிட்ச் போட்டு லைட் எரிவது மாதிரி பதில் வந் தது: “சத்தியமா அந்த மாதிரி அனுபவமே இல்லப்பா,'' என் றாள். எனக்கு மனசு நிம்மதியாய் இருந்தது. பின் நீண்ட மௌ னம் நிலவியது. ரெண்டு பேருக்கும் பேசுவதற்கான வார்த்தைகள் இல்லாமல் இருந்தன. அவள் தரையைக் கீறிக்கொண்டு இருந்தாள், தரையைப் பார்த்தாள் கரிசல் மண்ணிற்குள் அவள் மன இருள் இருந்தது. அதில் பொந்து பொந்துகளாக இருந்தன. அதில் ஆந் தைகள் இருந்தன. வெளியே வரப் பயந்தன ஆந்தைகள். வந் தால் காக்கைகள் கொன்றுவிடும். ஆந்தைகள் பொந்துகளின் வாச லில் நின்று எட்டிப் பார்த்தன. எங்கே வெளியே வந்துவிடுமோ என்று பயந்தாள். வராது என்றாலும் அவளுக்குப் பயம். ஆந்தை கள் முழித்தன. கண்கள் முட்டை முட்டையாக இருந்தன. பய மாக இருந்தது அவளுக்கு. ஆந்தைகளின் அமைதியே அவளுக்கு அச்சத்தை ஊட்டியது. ஆந்லதகள் வெளியே எட்டிப் பார்ப்பது அவளுக்குக் கிளர்ச்சியாகவும் இருந்தது.

மௌனம் இருவருக்கும் இடையில் இருந்து வாட்டியது. அதை உடைக்காவிட்டால், அவளால் நிலை கொள்ள முடியாது. எனவே கேட்டாள்:-

“காக்கைகளுக்குத்தான் பகலில் அதிகாரமெல்லாம். சுதந்திர மாக வரலாம் போகலாம். ஆந்தைகளுக்கில்ல.''

“ஆந்தைகள் கெட்ட பறவைகள். பார்த்தாலே சகிக்கல. பய மா இருக்கும். அதன் முழியைப் பாரு பேய் பிசாசு மாதிரி.''

“பேய் பிசாசுகளைப் பார்த்திருக்கீங்களா? பேய் பிசாசுகள் அப்படித்தான் இருக்குமா?''

“பயப்பட வைக்கிறது எல்லாம் பேய் பிசாசுதான். ஆந்தை யைப் பார்க்கவே பயமாதானே இருக்கு. அதைப் பார்த்தாலே கெட்ட சகுனம்தானே.''

படிப்பகம்

www.padippakam.com



"ஆந்தை வெளியே வந்தா காக்கா கொன்னுடுமோ?"

"அவ்வளவுதான். கொன்னே போடும் அம்புட்டா. நானும் பார்த்திருக்கேன். ஒரு நா மதிய நேரம். ஒரு ஆந்தையை காக்கைப் பார்த்திருச்சு. எல்லாக் காக்கைகளும் சேர்ந்து விரட்டி விரட்டி கொன்னே போட்டுடுச்சு."

"அவ்வளவு பகையா?" என்றாள் பயத்துடன்.

"ரெண்டுக்கும் ஜென்மப்பகை," என்றான் தைரியமாக.

அவள் மௌனமாகத் தலை குனிகிறாள். அவளின் மன இருளில் ஆந்தைகள் நடுங்கின. பகலெல்லாம் ஆலமரப் பொந்துகளில் பதுங்கி இருக்கும் ஆந்தைகள். தனிமைப்பட்டுத் தனிமைப் பட்டு, அதன் சத்தம்கூட ஒரு மாதிரியாக இருக்கும். அலறலாகத்தான் இருக்கும். அதைக் கேட்டாலே ஆண்களுக்கு பயம்தான்.

இரவுவரை காத்திருக்கும் ஆந்தைகள். இருட்ட ஆரம்பித்தவுடன் காக்கைகள் அடைய ஆரம்பிக்கும். இருட்டு மாதிரி அதுவும் அடங்கிப்போகும். அடங்கியவுடன் ஆந்தைகளுக்கான உலகம் ஆரம்பிக்கும். ஆந்தைகளுக்கான உலகம் காக்கைகளுக்குத் தெரியாது. ஆந்தைகள் இரவில் சுதந்திரமாக இயங்கும். இரவும் பகலுமாக இருந்தாலும், ரெண்டுக்கும் சம்பந்தமுண்டு. காக்கைகளே பகலில் ஆதிக்கம் பண்ணின. ஆந்தைகள் இருட்டில் வாழப் பழகிக் கொண்டன. ஆந்தைகள் எப்பவும் இருட்டையே விரும்பும். யாருமற்ற தனிமையையே விரும்பும். யார் கண்ணிலும் கண்டிப்பாகப் படவிரும்பாது எளிதில் பார்க்க முடியாது ஆந்தைகளை. கண்ணில் பட்டால் ஆந்தைகளுக்கே ஆபத்து. சுயபாதுகாப்பு கருதியே ஆந்தைகள் அப்படி இருக்கலாம். அல்லது காலங்களின் நீட்சியில் அதுவே பண்பாகியும் இருக்கலாம். இரவில் தூங்கும் ஆந்தைகளை காக்கைகள் ஒன்றும் செய்வதில்லை.

இங்கு அதிசயம் என்னவெனில் ஒரு பறவையே பகலில் அதிகாரம் பண்ணும் காக்கையாகவும், அடங்கி ரகசியப் பொந்துகளில் வாழும் ஆந்தையாகவும் மாறுகிறது என்பதே.

நானும் என் மனைவியும் அங்கேயே உட்கார்ந்திருந்தோம். ஆலமரம் எனக்கு மிகவும் பிடித்திருந்தது. ஆலமரக் கிளைகள் மிகவும் அடர்ந்திருந்தன. விழுதுகள் காற்றுக்கு ஆடின. பெரும் புயல் அடித்தால் விழுதுகளின் கனம் தாங்காமல் ஆலமரக் கிளைகள் ஒடியலாம். விழுதுகள் தரை ஊன்றி மரத்திற்குப் பாதுகாப்பு கொடுப்பது போக மரமே விழுதுகளைச் சுமந்து கொண்டிருந்தது. காக்கைகள் வாழ பெரிய கோட்டை மாதிரி இருந்தது. பகலில் பொந்துகளில் ஆந்தைகள். இரவில் ஆலமரத்தில் காக்கைகள் உறங்க, அதற்குத் தெரியாமல் ஆந்தைகள் காட்டில் அலைந்து விட்டு விடியலில் பொந்துகளில் அடையும்.

நான் எங்கு போனாலும் இந்த ஆலமரம் இருக்கும். நான் ஒய்வெடுக்கலாம். ●

படிப்பகம்

www.padippakam.com

தெலுங்கு மூலம்:
ஜ்வாலா முகி

தமிழில்:
சாந்தா தத்

# பிளிறும் குயில்

"பாடு குயிலே பாடு
உன் வசந்தக் குரலெடுத்துப் பாடு
வேப்பம்பூ சலசலப்பு உனக்கு சுருதி
மாந்தளிர் உனக்கு மங்கள ஆரத்தி
இயற்கைக்கு இன்று பிறந்ததினம்
உனக்கு இது மதுர கணம்..."

"யாரது...?
என் இருப்பு உணர்ந்தது யார்?
இசை மீது இத்தனை லயிப்பு!
என் பாடல் மீது இத்தனை உரிமை!
யார்...? யாரிந்த கலாரசிகர்?..."

"நான்தான் குயிலே நான்தான்
பருவங்களின் பரவசத் தென்றல்
ரசானுபவக் கலைஞன்
பிரேமையின் நாயகன்
ஐங்கணையின் தலைவன்
பாடு குயிலே பாடு..."

"வசந்தத்திற்குரியவனா... ஓ மதனா!
ஏன் பாட வேண்டும் நான்
எதை நினைத்துப் பாடவேண்டும்
எல்லாம் முடிந்துபோயிற்று..."

"குயிலே...!
இருளுக்கு ஒளியூட்டும்
என் கேளிக்கை லீலைகள் பார்க்கவில்லை...?
பூந்தோட்டங்களின் பூரிப்பு
உன் விழிகளுக்கு விருந்தாகவில்லை...?
இவ்வசந்த காலப் பசுமை
உன் பாடல்களுக்கு உயிர்ப்பாக இல்லை?

படிப்பகம்

www.padippakam.com



பிறவியெடுத்ததே நீ பாடத்தான் என
உன் முன்னோர் உணர்த்தவில்லை...?"

"ஓ மதனா... பூ வதனா...!
வசந்தம் உயிர்ப்பிக்கும் ரசிகனே
ஊமை ஜீவன்கள் சோக ஓலங்கள்
கேட்கவில்லையா உனக்கு?
நறுமணச் சூறாவளியில்
மூச்சுத் திணறும் உயிர்கள் தெரியவில்லையா?
எம் விழிநீர் பிரவாகம் நீ உணரவில்லையா?
உன் மதுர கணங்களுக் கெட்டாத
அபாக்கிய ஜீவன்களை அறிவாயா?"

"என்ன பேசுகிறாய் குயிலே?
ஏதோ ராஜத் துரோகம் தொனிக்கிறதே!
பஞ்சம சுருதிக் குரலினின்று
அபஸ்வரம் தெறிக்கிறதே...!"

"ஐம்பூதங்களுக்கும் ஆணையிடும்
அகிலாண்ட நாயகனே
உடைந்த உள்ளங்களின் ஓலம்
உணர முடியாது உன்னால்
கரைந்துபோன கதைகளின் சோகம்
காணவியலாது உன்னால்
ஆதலால் என் வினா
ராஜத் துரோகமாய்ப் படுகிறது
சத்தியம் அசத்தியமாகிவிட்டது.
வசந்தம் உல்லாசமா...?
யார் சொன்னது
அவ்வளவும் பூவிருள்
அத்தனையும் நறுமண நெடி
கபட நெஞ்சுகளின் மாயாஜாலம்
வேதனைகளின் வான வேடிக்கை
பாடல்களின் வேட்டுவனே...!
உணர்வுகளைக் கடைந்து உல்லாசம் திரட்டும்
உன் குணம் புரிந்துவிட்டது
நிஜம் மறைத்து நிழல் காட்டும்

படிப்பகம்

www.padippakam.com



கேடுகெட்ட காலம் இது
உன் ரஸ உலகில் உண்மைகளுக்கு இடமேது?
இதயம் சிந்தும் உதிரம்
உன் உற்சாகப் பாற்கடல்
தேன்மலர் காட்டில்
உங்கள் கள் வெறிக் கூட்டம்

ஓ! வேட்டைக்காரா...
மாங்கிளையில் மதுர விளையாட்டில்
இணை சேர்ந்த
எம் வாழ்க்கையில் அம்பெய்தி
என் துணையை ஒரே வீச்சில்
நிலம் சாய்த்து
நிலா விருந்து நடத்தினாய்

அன்று
உன் சுகந்தத் தேவைகளை
தேடல்களை நான்
உயிர்ப்பித்த காலம் உண்டு
ஆனால் என் கதறல்கள் உனக்கோ
ஆனந்த கீதங்கள்

என் துணையின் உடலுடன்
உறக்கமற்ற இரவுடன்
நான் ஊமையாகி
வாழ்வே வெறுத்திருக்கையில்
கவிகளுக்கு என் காயம் காவியமானது
ஒருவர்... ஒருவர்கூட
உயர்த்தவில்லை குரல்
'எய்ய வேண்டாம் அம்பு' என்று
உன் வசந்தோற்சவத்தில்
என் காதலன் காலனுக்கிரையானான்
அந்த அதர்மம் கண்டு
கிளைகள் முறிந்தன
இலைகள் உதிர்ந்தன
மரங்கள் அதிர்ந்தன
நதிகள் உறைந்தன
சோகச்சுமை தாங்காது

படிப்பகம்

www.padippakam.com



கொடிகள் வளைந்தன
பூக்கள் காம்பு விடுத்து
இறகுகளாய் இறைந்தன
அத்தனையும் அத்தனையும்
வேட்டைக்காரன் குரூரக் கொலை கண்டு
தலை கவிழ்ந்து துக்கித்தன
ஆற்றுநீரில் அல்லிப்பூக்கள்
விழிமுனை நீர் மொட்டுக்கள்
அத்தனையும் ஒன்றுகூடி
அனுதாபக் கூட்டம் நடத்தின
ஆனால்... ஆனால்... ஆனால்
முள் மட்டும் தோல்வியறியா வீரனாய்
கண் சிவந்து காலத்துடன் கலந்தது
ஆவேச ஆகாயம் அகால மழை விடுத்து
கரைகட்டிய சோகத்தை
துளித்துளியாய்ச் சொட்டி
வயல் வரப்புகள் மீது
அனுதாபக் கையொப்பமிட்டது
எரிச்சலுற்ற வான் நிலவு
அந்த அராஜகம் கண்டித்து
அலைகடலாய் ஆர்பரித்துன்
அழிவை எச்சரிக்கின்றது..."

"... ஐயோ...குயிலே...!
நடந்ததற்கு வருந்துகின்றேன்
அபயக்கரம் அருளுகின்றேன்
சோககீதம் இன்னும் இனிமை
ஆக நீ பாடு குயிலே..."

"மதனா...!
போதும் உன் விண்ணப்பம்
அக்கிரமங்கள் அரங்கேற்றி
ஆதரவு காட்டும் கபடதாரி
அபயக்கரப் போர்வையில்
பலி கேட்கும் வஞ்சகன் நீ
சோகங்கள் கேளிக்கையாகும்

படிப்பகம்

www.padippakam.com



காலம் கடந்துவிட்டது
அழகா... பூரங்கா!
உனக்காகப் பாடமாட்டேன் நான் இனி
உயிர்க்கொல்லியாம் உன் வசந்தம்
நிராகரிக்கின்றேன் இதோ இன்று...!
மதனா...!
மனப்பசுமை அற்ற மன்மதா
மாமுனியுள் மாயாவியை
இனம் கண்டோம்
கனவுகளைக் கலைப்பதில்
கைதேர்ந்தவன்
கண்ணீர் வியாபாரத்தில் கைகாரத்தரகன்
வேட்டைக்காரர்களின் இருப்பிடம்
வசந்த ராஜ்ஜியம்
உன் அகிம்சா வேடம் அத்தனையும்
நச்சுக்கமண்டலம்
காலம் சொல்லட்டும் என
காத்திருக்கும் பூமண்டலம்
நதிகள் கரை சேர்க்கும் உன் கதையை
ஊர் ஊராய் உணர்த்தும்
உன் பாரம்பரியம்
ஈரேழுலகமும் எச்சரிக்கப்படுகின்றன
மன்மதா...!
புயலுக்கு முன்னான நிசப்தத்தில்
நிற்கிறாய் நீ
புரட்சியின் யுத்த பேரிகை
அதோ... கேட்கின்றதா?
காலொடிந்த ஜீவன்போல் ஊளையிடும்
ஊமத்தை ஊமை அழுகை
ஏழை எருக்கம்பூ
விழிநீர் துடைத்தாயா ஒருமுறை
என்றேனும்?
காற்றுப் புக இடமின்றி
ஒன்றன் மீது ஒன்றாகி
வாழ வகையற்ற கள்ளிச் செடிகளின்
வறுமை வரலாறு கண்டதுண்டா?

படிப்பகம்

www.padippakam.com



நீ ஏன் பார்க்கப் போகிறாய்...
விழிகளின் விருந்துக்கென்றே
பொழுதுகள் கழிப்பவன் நீ
வண்ணமலர் பிழிந்து வாசம் எடுப்பவன்
இலைத்துளிரில் துயின்று
பரவசப்படுபவன் நீ
உன் உரிமைகளை
ஊர்க்குரலாக்குகின்றாய்

ஆனால் கந்தர்வா!
அநீதி எத்தனை நாள்
அரசாங்கம் நடத்தும்
கத்தி போன்ற சத்தியம்
இருள் பள்ளங்கள் மீது
புரட்சியொளிப் பாலம் கட்டும்

மதனா...!
வசந்தம் உன் ஒருவன் உரிமை இல்லை
சிலருக்கேயான பிறப்புரிமை இல்லை
அகிலம் மொத்தம் ஆனந்தம் காணும்
விடியல் வேண்டும்.
களங்கம் கண்ட வசந்தம்
காணவேண்டும் அக்கினிப்பிரவேசம்

இன்னும் கேள் மதனா...
இந்த என் பாடல் பஞ்சம ஸ்வரமின்றி
ஆரவாரக் குரலெழுப்பி
அகண்ட வானம் தொடும்

அண்ட சராசரம் என்னுடன் பாடும்
கனிகள் செறிந்த கிளைகள் ஆட்டி
தங்கக்கூண்டு திறக்கின்ற
உன் கபட நாடக ரகசியம்
பறவைகளுக்குப் புரிந்து விட்டது

இம்முறை வண்ணத்துப் பூச்சிகள்
நாடும் என்னைத்தான்
அவைகளின் இறக்கைகள் பிழிந்து
வசந்தமாடும் வஞ்சக ரசிகனே
இயற்கை மொத்தமும் உதிரக் குழம்பாகி

படிப்பகம்

www.padippakam.com



உக்கிரம் கக்கும்
தேனீக்கள் என்னுடன் அணிவகுக்கும்
புழுக்கள் நசித்துப்
பட்டிழை எடுக்கும் உன்
கலைவேடம் கலைந்து போனது
துடுக்குத் தும்பிகள்கூட புரட்சி நடத்தும்
அவைதம் வால்கள் பிய்க்கும்
உன் அலங்கோல ரசனை
உன் சிருங்கார வீதியில்
அறுவெறுப்பு கிளப்பும்
உன் நளின நாகரிகம்
நச்சுப் பொய்கை என
இனம் கண்டோம் நாங்கள்

காயங்கள் மீது களியாட்டம் போடும்
உன் ராசலீலை
காலத்தின் கிளர்ச்சியில் அழிந்துபோகும்
உன் சொர்க்க பூமி நரகமாகும்
அதற்காகவே என் பாடல்
என் நாவில் என் நாவில்
அக்னி ஊற்றாய்க் கனன்று
நயவஞ்சகர்களின் நித்ய வசந்தத்தைத்
தகனம் செய்தாலன்றி ஓயாது
வேட்டைக்காரனையே வேட்டையாடும்
மகாசக்தி
பட்டமரத்து இறுகிய பிடிக்குள்ளின்று
உயிர்த்தெழும்
உன் பருவ ராஜ்ஜியத்தைத்
தரைமட்டமாக்க
வாடைக் காற்று
மலைகளினின்று பாறைகளினின்று
வெறிகொண்டு வீசுகின்றது
பட்டமரங்கள் சளசளவென
உதிரப்பூக்கள் உதிர்க்கின்றன
வெடிப்பு நிலங்கள் சடசடவென
பூகம்பம் அனுப்புகின்றன
மரங்கள் உன்னை
நிலம் நோக்கி வீழ்த்துகின்றன
கொடிகள் நீ அசையாது கட்டிவிட்டன

படிப்பகம்

www.padippakam.com



விழிநீர் சிந்தும் அற்ப ஜீவிகள்
நெருப்புமழை பொழிகின்றன
வேட்டைக்குப் பலியாகும்
வேதனை வாக்சம்
சமத்துவ நாற்றுகள் நடுகின்றன
இனி எம் சமூகத்தில்
விழிநீருக்கு விதிவிலக்கு
கண்ணீரை மொத்தமாய்த்
துடைத்துவிட்டோம்
இருட்டுக்கு இங்கினி இடமிருக்காது
வழியிருக்காது வேட்டைக்கு
அழுகை இருக்காது துன்பம் இருக்காது
உதயகீதம் உலகையெல்லாம்
புரட்சிமயமாக்கும்
மதனா... மன்மதா!
எம் சமூகம் ஒன்றுபட்டது தெரிகின்றதா
உதிர்ந்த இறக்கைகள் ஆயுதங்களாயின
அறிந்தாயா
உன் வசந்தப் பின்னணியில் எம்
வசமான யுத்தம் இது
காமதேவா...!
இனி உன்னால் இயலாது எதுவும்
தப்பிக்க முடியாது
உன் சிருங்கார ஆதிக்கத்தின்
முடிவு இதோ... ஆரம்பம்
வேட்டைக்கார வஞ்சகம்
நெருங்கிவிட்டது
சர்வநாசம்
ஏகாதிபத்திய நாகரிகம்
எண்ணிக் கொண்டிருக்கிறது
நாட்களை...!
வஞ்சிக்கப்பட்ட வம்சங்கள்
விடுதலைக் குரல் எழுப்புகின்றன
எம் ஒருங்கிணைப்பு
புரட்சி யாத்திரை நடத்துகின்றன
எல்லைகளெல்லாம் இதோ
எரியத் தொடங்கிவிட்டன
சின வெம்மையிடை சிறைப்பட்டுவிட்டாய்

படிப்பகம்

www.padippakam.com



கொல்வதற்கு வந்த துரோகியே
சொல்வதற்கு எதுவுமில்லை இனி
செல்லுபடியாகாது உன்
வசந்த நாடகம் இனி
எம் இனத்திற்கு மன்மதர்கள்
ஜன்ம விரோதிகள்!
இதோ என் புதுப்பாட்டு
ஜன்மாந்திர அடிமைகள் உரிமைக்குரல்
இத்தனை காலம் பாடப்படாதவர்களின்
யுத்தகீதம்
இந்த யுகத்தை உயிர்ப்பித்து
வெற்றிவழி நடத்தும் வீரப்பாடல்
உன் வசந்தத்தைப் பொசுக்கி இருளாக்கும்
ஆவேசப்பாட்டு
மன்மதா... பிரபஞ்ச வஞ்சகா...!
உன் ராசலீலைகள் முடிந்தன இன்றோடு
வீழ்ந்துபட்ட ஜீவன்கள் துணையோடு
குரலெடுக்கும் எம் கிளர்ச்சிப்பாட்டு
மரம் செடி கொடி அத்தனையுமிணைந்து
விடுதலை கீதங்கள் முழங்கும்
எண்திசை எதிரொலிக்க
இம்முறை எம் பாடல்
நித்ய வசந்தத்தின் தலைமீது
தகிக்கும் கோடை அனல்
இம்முறை எம் பாடல்
உன் யுகாதி இதயம் மீதான
தீவட்டிக் கொடியேற்றம்
ஆதிக்க வர்க்கம் தன் அடையாளமிழந்து
பொசுங்கிச் சாம்பலாகும்
தீப்பந்தக் கொடியேற்றம்!
அடிமைத்தனம், அடக்குமுறை மீது
போர் தொடுத்த உரிமைகளின் வெற்றி
ஆணவ வர்க்கத்தின் அதிகாரப் பிடியில்
அடங்கிக் கிடந்த பறவைகளின்
சுதந்திரக்கொடி பறக்கின்றது இதோ
இதோ இக்கொடியின் கீழ்
இக்குயிலின் தேசிய கீதம்...!

படிப்பகம்

www.padippakam.com

# தேவிபாரதியின் 'பலி'

## ஒரு குறுக்குவெட்டுப் பார்வை

—ந. ஸ்ரீ நகேசபாண்டியன்

'அப்படியே கொண்டு வருகிறேன்' என்று விடை பெற்றுக்கொண்டு மகாவிலாசம் பொருந்திய வனாந்தரத்தில் முருங்கை மரத்தைத் தேடிப் போகையில், அம்மரத்தின் உயர்ந்த கிளையில் தலைகீழாய்த் தொங்குகின்ற வேதாளத்தைக் கண்டு பிடித்துத் தோளின் மேல் வைத்துக்கொண்டுவருகையில் வேதாளமானது கேளுமையா ராஜரே, நமக்கு வழி தொலைய வேண்டும். ஆகையால் தேவிபாரதியின் 'பலி' கதை சொல்லுகிறேன். நீர் விமர்சிக்க வேண்டும். விமர்சிக்காதிருந்தால் உமது சிரசு வெடித்துப் போகும்படி சாபமிடுவேன் என்று சொல்ல, விக்கிரமாதித்தனும் சம்மதிக்க...

கதவைத் தள்ளிக்கொண்டு வெளியே வந்த விக்கிரமாதித்தன், 'விமர்சனம் முடிந்தது' என்று சொல்லிச் சிரிக்கிறார். வேதாளம் கை தட்டிக் குதூகலிக்க, 'பலி' குறித்துப் பட்டியல் வெளியிடுகிறார்.

பெயர்ப் பட்டியல்: 1. அவள் 2. அவன் 3. கதை சொல்லி

அவள் எப்படிப்பட்டவள்?

1. பூனைக்குட்டி 2. நல்ல அழகி 3. சிவந்த நிறம் 4. குழந்தை முகம் 5. கன்னிமை எழில் 6. பொலிவிழந்த புராதனச் சிற்பம் 7. செயலில் குழந்தை 8. வண்ணத்துப் பூச்சிபோல் படபடக்கும் கண்கள் 9. ஆசார பிராமணக் குடும்பத்தினள் 10. கடவுள் தூதரின் வாரிசு.

அவன் எப்படிப்பட்டவன்?

1. வேசி வீட்டுக்கு வாடிக்கையாளன் 2. தொடர்ந்து சிகரெட் பிடிக்கிறவன் 3. மலத் தொட்டியைச் சுத்தம் செய்கிறவனின் வாரிசு.

கதை சொல்லி எப்படிப்பட்டவர்?

1. வாசகரிடம் மன்னிப்புக் கேட்கிறவர். 2. திடீரென கதை சொல்ல மறுக்கிறவர் 3. புதிராகப் பேசுகிறவர் 4. சுயேச்சையாக தன்புத்தியுடன் கதை சொல்கிறவர் 5. வாயில் பதமாகச் சூப்பானைச் சூப்புகிறவர் 6. கதை கேட்கிறவன் கையை வைத்து அவனது காதில் பூச்சூட்டுகிறவர்.

"ஒரே ஒரு ஊரிலே மலம் அள்ளுகிற / மலத்தொட்டி சுமக்கிற தாழ்த்தப்பட்ட குடும்பத்தின் வாரிசு அவன். வெறுமன மலம் கழிக்கத் தெரிந்த(!) ஆசார பிராமணக் குடும்பத்தின் வாரிசு அவள். தற்சமயம் காசுக்காக உடலை விற்கிறவள்."

போதும் போதுமெனத் தலையசைக்கும் விக்கிரமாதித்தன் மேலும் கூறுவான்: "சூப்பர் ஐடியா, தலைவா... தேவிபாரதியே! எம்புட்டு பெரிய்ய முரண். அவன் வேசியைப் புணர்வதை விட்டு விட்டுப் பாலியல் வன்முறைக்குள்ளாக்குகிறான். அதுவும் பழிவாங்கலில். தூள் கிளப்பிட்டிங்க தலைவா!"

படிப்பகம்

www.padippakam.com



அவன் × அவள், தோட்டி வாரிசு × பிராமணர் வாரிசு

காலம் மாறுகிறது.

அவன் × அவள், நாகரிக இளைஞன் × வேசியான பிராமணப் பெண்

இரண்டு சொட்டு கண்ணீர் வாசகனின் கன்னத்தில் உருண்டு, சிவந்த நிறமுடைய, குழந்தை போன்ற, புராதனச் சிற்பம் போன்ற பிராமணப் பெண் காசுக்காக வேசியாவது, மயிலு மலம் தின்பது மாதிரி, நயினா! என்ன மாதிரி தேவிபாரதி, 'டச்' பண்றாரு. காசுக்காக எல்லா உறவுகளுமே பொருள் அடிப்படையில் பண்டமாகிப் போகிற அமைப்பில், பெண் மட்டும் விதிவிலக்கா என்ன? காசுக்காக தனது உடலை விற்று அவல வாழ்க்கை வாழும் பெண், எந்தச் சாதியைச் சேர்ந்தவள் எனினும் இரக்கத்திற்குரியவளே! நூற்றுக்கணக்கான தளிச்சேரி பெண்களை தஞ்சை கோயிலுக்குத் தேவடியாளாக்கிய யோசனை எந்த மூளையிலிருந்து உதித்தது? 193ல் சென்னை மாநில சட்ட சபையில் 'தேவடியாள்' முறைக்கு வக்காலத்து வாங்கிய சத்தியமூர்த்தி குழுவினர் விவகாரம் வெறுமன விரல் சூப்புகிற செய்தியா? கதை சொல்லி எதுவுமே தெரியாத அப்பாவி. தேவிபாரதியும் அப்படியே ஒன்னும் தெரியாத பச்சை மண்ணு.

பழிக்குப்பழி! ரத்தத்திற்கு ரத்தம். இதுதானப்பா தலித்துக்குள் ஊறிக் கிடக்கு. வரலாற்றில் முன்னோர்கள் செயலுக்கு இன்றைய வாரிசுகளைப் பழிவாங்குவது எந்த வகையில் நியாயம்? பிராமணப் பெண் வேசியானதுக்குக்கூட, தலித்தின் பழி வாங்கும் மனம்தான் காரணம். இதெல்லாம் அக்கிரம்ப்பா.

சூத்திரம் புரிகிறதா?

பெண்ணியம் × தலித்தியம்

இதில் நீங்கள் யார் பக்கம்? கதை சொல்லியோ ஜென்டில்மேன். "எல்லோரும் மாறிக்கிட்டு இருக்காங்க. அப்ப நீங்க... மை டியர் வாசகரே!" ஆனால் திடீரென தேவிபாரதி முழங்குகிறார். "உயர்ந்த ஆன்மாக்களென்று உங்களைச் சொல்லிக் கொள்கிறீர்களே, இதற்கெல்லாம் என்ன பிராயச்சித்தம்? எங்கே நீதி?" நிசமாகவே புல்லரிக்கிறது. தேவிபாரதியின் தலித் ஆதரவு வேசம், கோஷம்... மெய் சிலிர்க்கிறது.

காடு மேடுன்னுகூட இல்லாமல் 'படு' என்று சொன்ன இடத்தில் எல்லாம், உடலைப் பலியாகத் தந்த தலித் பெண்களின் உடல் மீது நடந்த ஆக்கிரமிப்புதான் வரலாற்றின் பக்கங்களில் பதிந்துள்ளது. உடல் ரீதியான அடக்குமுறையில் தலித்தாக ஒதுக்கப்பட்ட வேளையிலே, பெண்ணாக உடல் மீது அத்து மீறலுக்கு உட்படுத்தப்பட்ட செயலை நியாயப்படுத்தும் சமூக அமைப்பு இன்று வரை வெவ்வேறு விஷயங்களில் தொடர்கிறது என்பதுதான் உண்மை. தன் மனைவியை, வயசுக்கு வந்த மகளை சில பணத்திற்காக, ஆண்டையிடம் விற்ற செயல், வரலாற்றில் சாதாரணப் பதிவு. இவை குறித்து எதுவும் தெரியாது கதை சொல்லிக்கு...

படிப்பகம்

www.padippakam.com



பெண்ணை வேசியாக மாற்றும் சமூகச் சூழல் மற்றும் வேசி குறித்து கேள்வி எதுவும் இல்லை தேவிபாரதிக்கு. ஆனால் பிராமணப் பெண் வேசியாக மாறியதுதான் தேவிபாரதியின் உள்ளத்தை உலுக்கி விடுகிறது. அப்படி வேசியாக மாறியவள், போயும் போயும் தலித்துடன் காசுக்காகப் படுப்பது என்பது, அடக்கடவுளே! லோகம் இப்படியா கெட்டுப் போயிடும். ராத்திரி முழுக்க தூங்காமல் தவிக்கிறார் தேவிபாரதி. சிவந்த தோலு மேல அப்படியொரு அபார பிரேமையா? ரிக், யஜுர், சாம, அதர்வண வேதப் பரம்பரையினருடனான புணர்ச்சி குறித்து தாழ்வு மனமா அல்லது குற்ற மனமா? வணிகப் பாலியல் தொழிலாளியான வேசியின் சாதி குறித்து இத்தனை மனவருத்தமா? ஓ மை டியர் தேவிபாரதி, என்னவொரு யுகாந்திர துக்கம் உங்களுக்கு?

வேதாளம் பாட ஆரம்பிக்கிறது.

"இட்லி மேல சட்டினியப் போடு
சட்னி மேல இட்லியப் போடு
பெண்ணு மேல ஆணைப் போடு
ஆணு மேல பெண்ணைப் போடு
பிராமணன் மேல தலித்தைப் போடு
தலித் மேல பிராமணனைப் போடு
பிராமணப் பெண் மேல தலித் பையனைப் போடு"

அட போங்கப்பா! ஞானி முதலாகப் பலரும் தேவிபாரதிக்குள் கலைஞனைக் கண்டறிந்த வேளையில், இதென்ன மறுதலிப்பு? பிறகென்ன? சொல்ற கதையில நம்பகத்தன்மையும் தர்க்கமும் இருக்க வேண்டாமா? செயற்கைத்தனத்தில் கதை மொன்னையாக உள்ளது. அப்புறம் சில முகங்கள்:
1. தலித்தின் கொடூர முகம் 2. வேசியான பிராமணப் பெண்ணின் சோகமுகம். 3. வன்முறைக்குள்ளாகி பலியான பெண்ணின் வதைபடு முகம் 4. தலித்தின் பழி வாங்கும் முகம்

இந்த முகங்கள் தேவிபாரதியின் சுயமான முகத்தைக் காட்டுகின்றன. தேவிபாரதி, எதப்பத்தி வேணும்னாலும் கதை விடுங்க. அங்கீகாரம் தர கையில் ரப்பர் ஸ்டாம்புடன் ஆசாமிகள் அலைகிறார்கள். அதுக்காக?

தலித், தலித் இலக்கியம் போன்ற சொலாடல்கள் தமிழில் வந்து ஒரு கைவிரல் ஆண்டுகள்தான் ஆகியிருக்கு. அதுக்குள்ள இடுப்பு வேட்டி அவிழ்றதுகூடத் தெரியாமல் எம்பிக் குதித்து, பரவலாகத் தவளைக் கூச்சல். கலையில பிரச்சார நெடி கூடவே கூடாது. கதைப் பாத்திரம் குரலை ஓங்கி ஒரு வார்த்தைகூடப் பேசக்கூடாது. ஆனால் தலித் / பெண் என்று வந்துவிட்டால், எதுவும் பொருட்டல்ல. இதுதாண்டா தமிழிலக்கியம்! என்று விக்கிரமாதித்தன் முடிவாக விமர்சிக்க, அவனது பதிலால் மௌனமான வேதாளம், கட்டவிழ்த்துக்கொண்டு மீண்டும் முருங்கை மரம் நோக்கித் தாவலாயிற்று. ●

படிப்பகம்

www.padippakam.com

# வ. ரா. வுக்கு வந்த கடிதங்கள்

## 2. பாரதிதாசன் கடிதம்

15 – 1 - 38
புதுவை

ஸ்ரீ வ. ரா. அவர்கட்கு. நமஸ்காரம்.
நலன் விரும்புவதும் அஃது!

நான் கோவிந்தராஜலு என்னும் பிள்ளையாண்டானிடம் தங்கட்கு ஒரு புத்தகமும், தங்கள் மூலம் ஸ்ரீ சாமிநாதன் அவர்கட்கு ஒரு புத்தகமும் ஆக இரு புத்தகங்கள் கொடுத்துவிட்டு வந்தேன். ஸ்ரீ சாமிநாதன் அவர்கட்கு அதைச் சேர்ப்பிக்க விரும்புகிறேன்.

கோவிந்தராஜலுவை நான் அங்கு விட்டு வந்தது சரியல்ல என்பது தங்கள் அபிப்பிராயம். நான் என்ன செய்வது? நான் குடும்பத்தோடு புதுவைக்கு வருவதற்குத் தங்களைப் பணம் கேட்டேன். உங்களிடம் இல்லை. குழந்தையின் காப்பை வைத்ததில் 6 பேருக்குத்தான் டிக்கட் வாங்க முடிந்தது.

"ரமாநுஜர்" கம்பெனியில் 4 நாளைக்குக் கோவிந்தராஜ னுக்கு இடமில்லை என்றால் நூதனமாகவே இருக்கிறது. ஆனால், இது நான் எதிர்பார்த்ததுதான். என்னை லீவு சம்பளமில்லாமல் வாங்கிக் கொண்டு வரச் சொன்னீர்கள். அப்படி வரச் சொன்னதால், நான் வந்திருக்கிறேன் என்பது ராமானுஜர் கம்பெனிக்குத் தெரிந்திருந்தும் என்னை ராமானுஜர் கம்பெனியானது அங்கு சாப்பிடாதிருக்கும்படி விரட்டிற்று. நான், சென்னையில் உங்களை நம்பிக் கால்வைத்த தேதியிலிருந்து கடைசிவரை "எங்குச் சாப்பிடுகிறாய்? சாப்பிடுமிடத்தில் வசதி எப்படி?" என்று நீங்கள் விசாரித்ததே கிடையாது.

மனித வாழ்க்கைக்கு இன்றியமையாத தர்மங்களில் சில தங்களிடமிருந்து நீங்கி வருவதை நான் கண்டு வருந்துகிறேன்.

கோவிந்தராஜனுக்கு நீங்கள் 2 ரூபாய் கொடுத்ததாக எழுதியிருக்கிறான். அவன் திரும்பவும் உங்களிடத்தில் வருகிற மாதிரியில் நீங்கள் நடந்து கொள்ளவில்லை. சில சமயம் வந்தால் செலவுக்குப் பணம் கொடுக்கலாம். நான் ஏற்றுக் கொள்ளுகிறேன்.

நான் நாலைந்து தினங்களில் அங்கு வந்து, நீங்கள் கொடுக்க வேண்டிய பணத்தை வாங்கி, குருசாமி மாமனார் வழியில் அடகு வைத்திருக்கும் (75 ரூபாய்க்கு) அட்டிகையையும், நான் மவுண்ட் ரோட் மார்வாரியிடம் 25 ரூபாய்க்கு அடகு வைத்திருக்கும் காப்பையும் மீட்டுக் கொண்டு புதுவைக்குத் திரும்ப வேண்டும். உங்கள் வார்த்தையை முதலில் நம்பிய குற்றத்தால், நான் அடைந்த இன்னல்களும் அவமானங்களும் அளவற்றவை. அதன் பிறகு நீங்கள் ஜனவரி மீ முதல் தேதி 40 ரூபாயும், 20ந் தேதி 100 ரூபாயும் கொடுப்பதாகச் சொன்னதை நம்பியதானது நான் இழைத்த இரண்

படிப்பகம்

www.padippakam.com



டாவது பெருங் குற்றம். அதனால் படாத இன்னல்கள்! அவமானங்கள்!

நீங்கள் எனக்குத் தருவதாகச் சொன்ன 300 ரூபாய்க்கு எனக் கேற்பட்டுள்ள செலவு, கஷ்டம் அவமானம் ஆகியவற்றில் எந்த ஓர் இம்மியையும் நீங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. போனால் போகிறது. உங்கள் பெரிய பீடம் என் நிலையை நான் இரண்டு வார்த்தை சொல்லிக் காட்டுவதைக்கூட கேட்கக் காது கொடுப்பதில்லை. ஆனால் உங்களுடைய இந்தக் கொடூரமான செய்கைகள், என்னிடமுள்ள எனது சிநேக தர்மத்தை ஓர் அணுகூட மாற்றிவிடமாட்டா.

நான் இன்றைய ஐந்தாம் நாள் அங்கு வருகிறேன். பணம் தயாரித்து வைக்கவும். நீங்கள் தவறினால் எனக்குக் கஷ்டம்.

விலாசம்: பிற பின்
பாரதிதாஸன் பாரதிதாஸன்.
28, அம்பலத்தாடு ஐயர் மடம் வீதி
புதுச்சேரி

## 3. நாமக்கல் கவிஞர் கடிதம்

நாமக்கல்
13 - 2 - 45

அன்புமிகு ஸ்ரீ வ. ரா அவர்களுக்கு,
நமஸ்காரம்.
இனிய நண்ப,

தங்களுடைய 9- 2- 45 தேதியிட்ட கடிதம் இன்றுதான் வந்தது.

அதைப் படித்து நான் அடைந்த ஆனந்தம் அளவிட முடியாது. உடலோடு சொர்க்கம் புகுந்துவிடுவது என்று சொல்லுவார்களே அந்த இன்பம் கூட இன்று நான் உங்கள் கடிதத்தைப் படித்ததனாலுண்டான இன்பத்துக்கு ஈடாக இருக்குமோ என்பது சந்தேகம்தான்.

இன்றுதான் நான் ‘கவிஞன்’ ஆனேன்.

இன்றுதான் என் புலமை வெற்றி பெற்றது. என்னுடைய வாழ்க்கையும் எழுத்துக்களும் வீணாகப் போகவில்லை என்பதை இன்றைக்குத்தான் கண்டு களித்தேன். குணத்தைக் குணம் என்று பாராட்டிப் பரவசப்பட்டு புகழ்வதற்கும், குற்றத்தை குற்றமென்று கூசாமல் சொல்லிக் கண்டிப்பதற்கும் ஒரு உதாரண புருஷனான உங்கள் புகழ் மாலைதான் எனக்கு உண்மையான பரிசு. இலக்கியத்தின் பெருமையையும் கவிதையின் தராதரத்தையும் அளந்து பார்க்க அருகதையில்லாத எத்தனை பேர் என்னை எவ்வளவு புகழ்ந்தால் என்ன? இன்றைய இலக்கியங்களையும் கதைகளையும் கவிதைகளையும், கவிஞர்களையும் நிறுத்துப் பார்க்க ஒரு ‘தராசு’

படிப்பகம்

www.padippakam.com



போன்ற தங்களுடைய பாராட்டிற்குப் பாத்திதன் ஆனது என்னுடைய பாக்கியம்தான்.

என்னுடைய புலமையும் இலக்கியத் திறமையும் எல்லாம் நீங்கள் கொடுத்த பிச்சை. சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்னாலேயே என் வீட்டிற்கு வலிய வந்து என் திறமைகளைப் பாராட்டி என்னுடைய பிற்கால வாழ்வு மிகவும் சிறப்புடையதாகவும் பயனுடையதாகவும் புகழத்தக்கதாகவும் இருக்கும் என்று நீங்கள் வாழ்த்தினதை இப்போது தாங்கள் மறந்து போயிருக்கலாம். ஆனால் நான் அதை ஒரு நாளும் மறந்ததில்லை. (அந்த சம்பவத்தை 'என் கதை'யில் எழுதியிருக்கிறேன். இப்போது வெளியாகியிருக்கிற 'என் கதை' நான் எழுதியிருக்கிற 'என் கதை'யின் ஒரு சிறு பகுதிதான். காகிதப் பஞ்சத்தை எண்ணி மிகவும் ரஸமான பகுதிகள் என்றும் மிகவும் அவசியமான பகுதிகள் என்றும் கருதப்பட்ட நிகழ்ச்சிகளை மட்டும் இப்போதைக்கு வெளியிட்டிருக்கிறேன். இன்னும் இதைப்போல் இரண்டு புத்தகங்கள் அச்சானால்தான் 'என் கதை' ஒருவாறு பூர்த்தியாகும்.)

அன்றைக்கு நீங்கள் அசரீரி வாக்கு போல என்னை உத்ஸாகப்படுத்திவிட்டதின் பயன்தான் என்னுடைய கவிதையும் கட்டுரைகளும். ஆதலின் என் இலக்கியங்களின் பெருமையில் வ. ரா. வுக்குப் பெரிய பங்குண்டு. உங்கள் வாக்குதான் பலித்ததோ, உங்களுக்கு ஜோசியந்தான் தெரிந்திருந்ததோ, அல்லது உங்கள் அன்புதான் பரிணமித்ததோ. அது எப்படியிருந்தாலும் நான் இப்படி 'ஒரு புகழத்தக்க புலவன் ஆவேன்' என்று 25 வருடங்களுக்கு முன்னால் வாழ்த்தியது வ. ரா.வின் வாய்ச்சொல் என்பது வெறும் உண்மை.

இவ்வளவு சந்தோஷத்தின் இடையில் தங்கள் சரீர சௌக்கியம் சீர்கெட்டிருக்கிற விஷயம் எனக்கு மிகவும் துண்பமுண்டாக்குகின்றது. என்னுடைய உடல் நலமும் ஏறத்தாழ அப்படித்தான் அல்லது இன்னும் கொஞ்சம் அதிக மோசமாகத்தான் இருக்கிறது.

என்னை ஆசீர்வதிக்க உங்களுக்கு வயசில்லை என்று எழுதுகிறீர்கள். உங்களை ஆசீர்வதிக்க என் வயசு மட்டும் போதாது. ஆதலின் எனக்காகத் தாங்கள் பிரார்த்தனை செய்வதுபோல தங்களுக்காக நான் பிரார்த்தனை செய்கிறேன்.

அன்பர் நாகராஜய்யங்கார் உங்களைப் பற்றி ரொம்ப ரொம்ப சொன்னார். அது என்னப் பற்றிய உங்கள் ரகசியம். அதைப் பற்றி எழுத இது சமயமல்ல.

தங்கள் மனைவியவர்களுக்கு என்னுடைய வந்தனங்களைச் சொல்ல வேண்டும். நமஸ்காரம். நலம்.

அன்பன்

வெ. இராமலிங்கன்.

படிப்பகம்

www.padippakam.com



**தெலுங்கானா சொல்லும் கதைகள்**
(தெலுங்குச் சிறுகதைகளின் தொகுப்பு)
தமிழாக்கம்: **சாந்தா தத்**
வெளியீடு: தாமரைச்செல்வி பதிப்பகம், 31/48 ராணி அண்ணா நகர், சென்னை-600078.
பக்கங்கள்: 208 விலை: ரூ. 45.

வரலாறு என்பது வைட்டமின் மாத்திரைகள் என்றால் கலை இலக்கியம் சமைக்கப்பட்ட உணவு எனலாம். ஒரு பொருளின் சாராம்சத்தில் ஒரு பகுதியை மட்டும் தேவைக்கேற்ப வடித்துத் தருவது வரலாறு. ஆனால் கலை இலக்கியத்தில் வைட்டமினும் உள்ளிருக்கும். அதிலும் கதை, நெடுங்கதை, நவீனம் என்பவை வேகவைக்கப் படாத உயிருள்ள இயற்கை உணவுபோல அந்தக் கதை நடக்கும் காலகட்டத்தின் உயிரோட்டத்தைக் காட்டும். மேலும் புதிய வரலாறு படைப்பவர்களுக்கான எடுத்துக்காட்டாகவும் அமையும். விடுதலைப் போராட்ட இலக்கியங்களில் 'தெலுங்கானா சொல்லும் கதைகளுக்கு' தனி இடம் உண்டு. அரசைப் பற்றியும், ஆளும் வர்க்கங்களைப் பற்றியும், வர்க்க அணி சேர்க்கை பற்றியும் வெளிவந்துள்ள தத்துவங்களுக்கு நடைமுறை விளக்கம்போல இந்நூல் அமைந்துள்ளது

தெலுங்கானாவின் கூலி ஏழை உழவர்களும் கைவினைஞர்களும் நிஜாம் அரசின் கீழும், ஆளும் வர்க்கத்தின் கீழும் பட்ட பாட்டை எழுத்தில் படிக்கிற நமக்கே குருதி கொதிக்கிறது. மானுடம் அவ்வளவு குரூரமாக அங்கே சிதைக்கப்பட்டிருக்கிறது. இவ்வளவு ஒடுக்கு முறைகளையும் காலங் காலமாக ஏற்று அடங்கிக் கிடக்கிற இந்த மக்களை என்ன என்பது? ஒடுங்கி, நசுங்கி, உணர்விழந்து கிடந்த அந்தத் தெலுங்கானா மக்கள் ஆந்திர மகா சபை மற்றும் பொதுவுடைமைக் கட்சியின் கீழ்த் திரண்ட பின்னர், அவர்களுடைய வறுமைக்கும் வாட்டத்துக்கும் உரிமையின்மைக்குமான 'காரணம் இன்னதென்ற அறிவு' ஊட்டப்பட்ட பின்னர் அவர்கள் மாபெரும் சக்தியாக மாறி மலை போல் எழுகின்றனர். வெடித்துக் கிளம்பும் போராட்டத்தின் முதல் தேவை போராளிகளின் மன எழுச்சிதான். அத்தகைய மன எழுச்சி இருக்கும் போது அவர்களுடைய கையில் கிடைப்பதெல்லாம் ஆயுதமாகிவிடுகிறது. எதிரி முகாமைத் தாக்கிப் பறித்த துப்பாக்கிகளிலிருந்து, வெங்கம்மாவின் கவண்கல் வரையில் அவர்களுடைய ஆயுதமாகிவிடுகிறது.

பொருளியல் அல்லது சமூகக் காரணங்களுக்காகத் தனித் தனியாக நடக்காமல் சமூகத்தின் அனைத்தும் தழுவிய ஒட்டுமொத்த விடுதலைக்காக இந்தப் போராட்டம் நடந்ததை இக்கதைகளிலிருந்து காணமுடிகிறது. 'கொரில்லா' கதையில் அடிப்படை

படிப்பகம்

www.padippakam.com



வர்க்க உணர்வு பெற்ற நிலப்பிரபு தன் சொத்து சுகத்தை மட்டுமின்றி உயிரையே புரட்சிக்காகத் தியாகம் செய்கிறார். கொரில்லாப் போரில் மனைவி இறங்கி, குழந்தைகளையும் இழந்து உயர்கிறார். அவருடைய ஆன்ம வலிமை மேலும் மேலும் அதிகரிக்கிறது. உடனிருக்கும் தோழரை விரும்பி மறுமணம் புரிகிறார். ஒரு புரட்சிப் பெண் வாழ்வில் சந்திக்கக் கூடிய எல்லாச் சோதனைகளையும் எதிர்கொள்கிறார்.

இக்கதைகளில் வரும் உறும்பினர்களும், நிகழ்ச்சிகளும் உண்மையானவை. இவற்றை எழுதியவர்களும் இவற்றில் தொடர்புடையவர்கள். எனவே அப்போது பிறந்த குழந்தையைக் கையிலெடுக்கும் உணர்வு தோன்றுகிறது. சில கதைகளில் வடிவக் குறைவு உள்ளதையும் அந்த உணர்வு மறக்கடித்துவிடுகிறது. தெலுங்கானாப் போராட்டம் நடந்து முடிந்த நாற்பத்தைந்து ஆண்டுகளுக்குப் பிறகும் இந்த வரலாற்றுக் கலைப் பதிவு மொழிபெயர்ப்பிலே கூட நம் குருதியைக் கொப்பளிக்க வைக்கிறது. அண்டை ஈழத்திலும், ஆந்திர மலைக்காடுகளிலும் நடக்கும் போராட்டங்களை நமக்கு நினைவூட்டுகிறது.

தமிழகத்தில் தேசிய உணர்வும், சர்வ தேசியப் பாட்டாளி வர்க்க உணர்வும் உயிரோட்டமுடன் பிணைக்கப் படாமையால் இங்கே நாம் தோற்றோம். ஆந்திர மகாசபையும் பொதுவுடமைக் கட்சியும் இணைந்ததால் அங்கே வெற்றி பெற முடிந்தது. கட்சியும் எழுத்தாளர், கலைஞர் போன்வர்களைச் சரியாகக் கையாளத் தவறிவிட்டது. இதனால் மக்களுக்காக உயிரை ஈந்த பல தியாகிகளின் அண்மைக்கால வரலாறுகள்கூடத் தொகுக்கப்படவில்லை. தர்மபுரியிலிருந்து மட்டுமல்லாது, மானுடம் சிதைக்கப்பட்ட வரலாறுகளையும், அதை எதிர்த்து மனிதநேயம் கொண்டோர் அமைப்பு ரீதியாகவோ, தனியாகவோ போராடியதையும் தொகுத்துப் போராட்ட உணர்வு மரபைக் கண்டறிய வேண்டும். அதற்கு இக்கதைகள் தூண்டுகோலாக அமையும்.

சாந்தாதத் அவர்கள் இக்கதைகளை நல்ல வழக்குத் தமிழில் மொழி பெயர்த்துள்ளார். பாட்டாளி வர்க்க இலக்கியங்களை வெளியிடுவதையே வாழ்க்கைப் பணியாகக் கொண்ட இனிய அன்பர், தாமரைச் செல்வி பதிப்பக ப. திருநாவுக்கரசு குறைந்த விலையில் இக்கதைகளை வெளியிட்டுள்ளார். குழு மனப்பான்மைகளை விட்டொழித்து இலக்கிய ஆர்வலர்கள் எல்லாரும் இதை வாங்கிப் படித்து, விமர்சித்துப் பரப்ப வேண்டும்.

—கோ. சடை

படிப்பகம்

www.padippakam.com



மா. அரங்கநாதனின் 'காடன் மலை'

# அடையாளம் குறித்த அக்கறைகள்

த. பழமலய்

இவருடையவை சமீப ஆண்டுகளில் தமிழில் வந்திருக்கும் சிறுகதைத் தொகுப்பு என்பதோடு நவீன சிறுகதைத் தொகுப்பு என்றே சொல்லத் தோன்றுகிறது. இப்போது அறிந்து கொள்ளப்பட்டதை விட இன்னும் பல ஆண்டுகள் கழித்து அதிகமாக உணர்ந்துகொள்ளப் படும் என்பது குறைந்தபட்ச மதிப்பீடாகாது என்றே சொல்ல வேண்டும்.

— மா. அரங்கநதன் கதைகள் பற்றி
சா. கந்தசாமி - முன்னுரையில்.

(தாமரைச் செல்வி பதிப்பகம், பக்கங்கள் 112 விலை ரூ. 20)

— மீன் பிடிப்பதும் மோட்டார் பழுது பார்ப்பதும் தவநிலைதான் என்று எங்கோ படித்தது அவன் ஞாபகத்தில் வந்தது (பக். 11).

— மாட்டை அடிச்சுச் சாப்பிட நாங்க என்ன பரத்வாஜ முனியா ஓய் (68).

— சாமிகள் சாதாரணமாகச் சாவதில்லை(72).

— பனை தனிமையைக் குறிக்கும். தென்னையோ வாழையோ அப்படி அல்ல (21).

— எனக்கும் பறவைக்கும் ஏதாவது சொந்தமுண்டா (91).

இப்படித் தகவல்களையும் கவனிப்புகளையும் சிந்தனை முடிவுகளையும் இட்டு எழுதப்பட்டுள்ள மா. அ. வின் கதைகளுள் மாய மாங்கனியும் மாய மயிலும் வருகின்றன (மாய எதார்த்தம்?)

அடிக்கோடுகளோடும் கேள்விக் குறிகளோடும் படித்து முடிக்கப் படும் மா. அ.வின் கதைகளுள் அவரின் 'அடையாளம் குறித்த அக்கறைகள்' மிகவும் கவனிக்கத் தக்கனவாக இருக்கின்றன.

முகமும் முகவரியும் இல்லாமல் போவதில் உள்ள சோகத்தைப் பற்றிப் பேசுகிறோம். 'அனாதை'யாவது யாருக்கும் உவப்பாகாது.

இதே நாம்தான் 'படிமங்களைக்' காட்டுவதில் உள்ள அநாகரிகத்தையும், படிமங்களைக் கலைத்துக்கொள்வதில் உள்ள நாகரிகத்தையும் பேசுகிறோம். ஒருவரின் / ஒன்றின் விசுவ ரூபம், புராணம் அருவெறுப்பே தருவதாகிவிடுகிறது. இது ஒரு முரண்பாடா? இது எப்போது ஒரு முரண்பாடு ஆகிறது? இதில் சகித்துக் கொள்ளக் கூடிய / முடியாத எல்லை இருக்கிறதா?

அடையாளம் - அப்படி ஒன்றும் அகர முதலியிலிருந்து நீக்கப் பட வேண்டிய அசிங்கமான / கேவலமான / கெட்ட வார்த்தையல்ல. தவறாமல் இருக்க வேண்டியது.

நாம் விரும்பினாலும், விட்டாலும் நமக்கு அடையாளங்கள் இருக்கின்றன; சொல்லப்படுகின்றன. 'பிராமண ஜாடை' என்று

படிப்பகம்

www.padippakam.com



ஓரிடத்தில் (69) எழுதுகிறார். 'அவன்' என்று அழைப்பதில்கூட ஓர் உரிமையின் அடையாளம் இருக்கிறது (96). இப்படியான அடையாளங்களைக் கண்டு காட்டும் முயற்சியாகவும் மா. அ.வின் கதைகள் உள்ளன.

அவரது பெயர் எந்தக் குழப்பத்தையும் தரவில்லை. கறுப்பன் என்பதும் முத்து என்பதும் அங்கு வழங்கப் பெறும் சாதாரணப் பெயர்கள் (91). இந்தச் சொற்றொடர்களில் மா. அ. சொல்ல வருவது, அடையாளங்கள் இயல்பாகவும் இசைவாகவும் இருக்க வேண்டும் என்பதை. அடையாளம்– காட்டுவதாக இருக்க வேண்டும். மறைப்பதாக அல்ல. ஒளிந்து கொள்வது வெற்றியாகாது.

முத்துக்கறுப்பனை எம். கே. என்று ஆங்கிலமாக்கிப் பிறகு சுருக்குவதில் மா. அ.வுக்கு இசைவில்லை (22). இது ஓர் அடிமைத்தனத்தை விடுதலையாகப் பிறழ உணர்வதே ஆகிறது. அடிமைத்தனமே விடுதலையாக உணரப்படுகையில், விடுதலை என்பதே சாத்தியம் இல்லாததாகி விடுகிறது. இது மனப்பான்மையளவில் தாழ்வே ஆகிறது. தானே தனக்குத் தாழ்வாகி விடுவது அவலந்தான்!

பரோட்ட்டாவைப் பார்க்கையில், 'ஓ தோசை என்னவாயிற்று' (22) என்று கவனிப்பது பத்தாம் பசலித்தனமாகாது. ஒவ்வொன்றாக இழப்பவர் கடைசியில் என்னவாக ஆவார் — என்கிற கவலையின்பாற்பட்டதாகும் இது.

முத்து, முக்தா ஆவதில், பொற்கொல்லர் விசுவகர்மா ஆவதில் உள்ள அபாயம் எல்லாம் ஒருவர் தன்னை — தன் அடையாளங்களை — சுயசார்பை — இழப்பதில் உள்ள அபாயந்தான். இதற்காகவே முத்துக்கறுப்பன் தங்கள் அம்மன் கோவில் பொங்கலையும் மிளகு வடையையும் கொண்டாடுகிறான்.

வேப்பமரம், நாகமரம், பனை என்றும், மயில் என்றும் குறிப்புகள் (நானிலக் குறிப்புகள்) விரவிவர எழுதிச் செல்லும் ஆசிரியர் மரங்களும் பறவைகளும் மக்களின் அடையாளங்களின் கூறுகளாக இருப்பதை உணர்த்துகிறார். நிலம் இல்லாமல் ஒருவருக்கு அடையாளங்கள் இல்லை. பண்டைய தமிழ் இலக்கியத் திறனாய்வில் நிலம் முதற் பொருளாய்ப் பேசப்பட்டு வந்தது இதனால்தான். முதல், கரு, உரி – என்று பேசப்பட்டவை அடையாளங்கள் அல்லாமல் வேறில்லை. இந்தப் புரிதலில்தான் "பிள்ளைப்பாசம், கற்பு, நாட்டுப்பற்று இவையெல்லாம்தான் என்ன?" (92) என்று கேட்டு, இவை 'அடையாள விஷயம்' என்கிறான் முத்துக்கறுப்பன். இவற்றை ஓர் இனத்திற்கு மட்டுமே சார்த்திப் பேச முடியுமா? இவை மாந்தருக்குப் பொது அல்லவா? மாந்தர் என்பது பொது தான். மக்கட்பண்பு பொதுதான். இந்த இனத்திற்கு இவை இருக்கின்றன- என்பதுதான் 'அடையாள விஷயம்'.

அடையாளங்கள் பொதுவானவையாயும் சிறப்பானவையாயும் இருக்கின்றன. மொழி உறுதியாகச் சிறப்பு அடையாளந்தான்

படிப்பகம்

www.padippakam.com



மொழி அடையாளம் தவிர பிற அடையாளங்களால் நாம் ஒருவருக்கொருவர் மிலேச்சராகப் போவதில் மு. க. வுக்கு உடன்பாடில்லை. இப்படி அந்நியராவது என்பதும் அந்நியப்படுவதும் தற்கொலைதான். ஓர் இனத்தின் தற்கொலை!

''தமிழிலே பேசி இரந்துண்டா அவன் பிச்சைக்காரன் - பண்டாரம் இல்லையா! (13). பிறமொழிப் பேசிப் பிழைப்பவர்கள் உயர்த்தவர்களாகிவிடுவது எப்படி? இந்த இடத்தில் மா. அ. தமிழனுக்குத் 'தமிழ்' என்கிற ஒரே அடையாளம் கூடக் கவுரவக் குறைச்சலானதாகப் போயிருக்கிற வரலாற்று விபரீதத்தை நினைவுபடுந்துகிறார். மண்ணின் மைந்தராகிய ஊரின் 'மூத்த பிள்ளை' யைக்கூட ஒரு 'அம்பி' ''என்ன ஓய்'' என்று கேட்கிற துணிவைத் தந்தது எது? பிள்ளை தன்னைத்தானே தாழ்த்திக்கொண்டதா? அம்பி தன்னைத்தானே உயர்த்திக்கொண்டதா? அடையாளங்களைக் காப்பாற்றிக்கொண்டு வருவதில்தான் யாவும் உள்ளன. அடையாளங்களின் ஆற்றல் அப்படி!

அடையாளம் — மரபு — வெறும் மயிராகக்கூட இருக்கலாம். இதனைத் தலையில் சுமப்பது சிறுமை ஆகாது. அடையாளங்களை இழப்பதால் உண்டாவது வெறுமை. உரியவை என்று ஒருவருக்கு இருக்கும்போதுதான் ஒருவர் இருப்பதே உறுதியாகிறது. இருப்புக்கே பொருள் உண்டாகிறது. இருப்பு முழுமை பெறுகிறது.

சாதி, மதம், இனம், மொழி என்று பேசுவது— மீண்டும் சொல்லலாம்- அநாகரிகந்தான். ஆனால் நாம் அவாவும் மனிதகுல பரிணாம வளர்ச்சியில் — இக்கால கட்டத்தில், இவற்றை நியாயப் படுத்துகிற அளவுக்கு இவற்றில் நியாயம் இருக்கிறது என்பதை மறுப்பதற்கில்லை. வெறும் நியாயப் படுத்துகிற அளவுக்குத்தான்! (30). மனிதனுக்கு நியாயத்தைப் பெற அதனை நியாயப்படுத்த வேண்டியிருக்கிறது! 'அது (சாதி) 'தெரியாது' என்ற பதிலல்ல, வேண்டாம் என்பது (65) என்று முத்துக்கறுப்பன் பேசுகிறான். இது இருப்பைப் புரிந்து கொண்டு இலக்கை எட்டுகிற முயற்சி.

ஒன்றை உயர்வானது அல்லது தாழ்வானது என்று அடையாளப்படுத்துவது திட்டமிட்டுக் கட்டமைப்பதேயாகும். ''தமிழன் என்று சொல்லடா! தலை நிமிர்ந்து நில்லடா!'' என்பது அவனுக்கு உயர்வு மனப்பான்மையைக் கட்டமைப்பதுதான். தலை நிமிர்வு என்பது ஓர் அடையாளம். தன்னம்பிக்கையின் — தன்மானத்தின் தன் உயர்வின் அடையாளம்.

இந்தப் பன்னிரெண்டு கதைகளிலும் வேறுபட்ட சாதியினன் ஆக வரும் முத்துக்கறுப்பன் இன்றைய தமிழரிடையில் காணும் சாதி, மதங்களின் ஊடாக வந்துகொண்டிருக்கும் வேளாளத் தமிழனே(தமிழர் நாகரிகம் வேளாளர் நாகரிகம்?) ஆவான். முத்துக் கறுப்பன் கிறிஸ்துவனாகச் சம்மதிப்பதாகக் கதை சொல்லும் மா. அ. அவன் முசுலீமாகச் சம்மதிப்பதாக ஒரு கதை எழுதவில்லை. இது ஏன்? இது கவனம் ஈர்க்கும் விடுபடலாக இருக்கிறது.

படிப்பகம்

www.padippakam.com

# மீண்டும் கடவுளும் கந்தசாமிப் பிள்ளையும்

— ஜெயந்தன் —

இருபது ஆண்டுகள் கழித்து மீண்டுமொரு முறை பூலோகத்தைப் பார்ப்பதற்காக சென்னை வந்தார் கடவுள்.

புறப்படும்போது பார்வதி தேவியானவள் "அங்கே என்ன வாழ்கிறதென்று சும்மாசும்மா புறப்பட்டு விடுகிறீர்கள்?'' என்று சலித்தபடி கேட்டதற்கு, "என்ன செய்வது. பெற்றபாசம். பிள்ளை எவ்வளவுதான் கெட்டுக் குட்டிச் சுவராய்ப் போனாலும், தாய் மனசு கேட்கிறதா?'' என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டார் அவர்.

இம்முறையும், திருவல்லிக்கேணி, வெங்கடாசல முதலி தெரு, ஏழாம் நம்பர் வீடு, மேலகரம் மே. க. ராமசாமிப் பிள்ளை அவர்களின் ஏக புத்திரனும் செல்லப்பா என்பவருமான மேலகரம் மே.க.ரா.கந்தசாமிப்பிள்ளை வீட்டிலேயே சில நாட்கள் அதிதியாகத் தங்கவும் திருவுள்ளம்.

ஆனால், மானுட உரு எடுத்துக்கொண்டு கடவுள் மேற்படி விலாசத்திற்குப் போனபோது மேற்படியார் அங்கு தற்போது குடியில்லையென்பது தகவலாய்ச் சொல்லப்பட்டது. அங்கே அடுத்து குடித்தனம் வந்திருந்தவர்களுக்குப் புதிய விலாசம் தெரியவில்லை.

ஆகவே கடவுள் மேற்படி ஸ்ரீமான் பிள்ளை அவர்களின் பத்திரிகையான 'சித்த வைத்திய தீபிகை' காரியாலயம் உள்ள பவளக்காரத் தெரு போனார். அங்கேயும் ஏமாற்றம். மேற்படி பத்திரிகை காரியாலயம் கொஞ்சம் மாற்றங்களோடு 'மதுரை முனியாண்டி விலாஸ் பிரியாணிக் கடை'யாக ஆகியிருந்தது. ஆனால் அங்கே ஸ்ரீமான் பிள்ளை பற்றி ஒரு தகவல் மட்டும் கிடைத்தது. அவர் இந்தப் பத்திரிகையையும் வைத்தியத் தொழிலையும் கை கழுவிவிட்டு சினிமாக்காரராகப் போய்விட்டதாக. இத் தகவல் கிடைத்தபோது உண்மையில் கடவுளின் மனசு கொஞ்சம் ஆடிவிட்டது.

மனுஷன் வைத்தியத்தையே ஒரு வியாபாரம் என்று தத்துவம் சொன்ன ஆசாமி. 'வைத்தியம் செய்தால் வியாதியும் கூடுமான வரை அகன்றுவிடக்கூடாது. ஆசாமியும் தீர்ந்து விடக்கூடாது. அப்போதுதான் சிகிச்சைக்கு வந்தவனிடம் வியாதியை ஒரு வியாபாரமாய் நடத்த முடியும். ஆள் அல்லது வியாதி என்று முரட்டுத்தனமாக சிகிச்சை பண்ணினால் தொழில் நடக்காது. வியாதியும் வேகம் குறைந்து படிப்படியாகக் குணமாக வேண்டும். மருந்தும், வியாதிக்கோ மனுஷனுக்கோ கெடுதல் தந்துவிடக் கூடாது,' என்று அதற்கு விளக்கவுரையும் சொன்ன ஆள். இப்போது மேற்படியார் சினிமாவுக்கே போய்விட்டால் ஊர் உலகம் என்னாவது? சினிமாதான் என்னாவது?

படிப்பகம்

www.padippakam.com



அவர் 'போஸ் ரோடு' வந்து நின்றபோது ஒரு பஸ் வடபழனி போர்டு மாட்டிக்கொண்டு வந்தது. அதில் 'பழனி'யைப் பார்த்ததும் பிள்ளைப்பாசமும் சுரக்க, சந்தோஷத்தோடு அதில் ஏறி உட்கார்ந்து கொண்டார் கடவுள். உட்கார்ந்ததும் சட்டென ஞாபகம் வந்தது. அடடே, வடபழனி சினிமா ஏரியாவாயிற்றே. இப்போது சினிமாக்காரராகப் போய்விட்ட கந்தசாமிப் பிள்ளை அந்தப்பக்கம் தட்டுப் பட்டாலும் படலாமே!

அது அப்படித்தான் நடந்தது. ஏ. வி. எம். ஸ்டுடியோ வாசலில், உள்ளிருந்து வருகிற கார் ஒன்றிலிருந்தும், உள்ளே நுழைய வேண்டிய கார் ஒன்றிலிருந்தும் இறங்கிய நான்கைந்து ஆசாமிகள், ஆர்ப்பாட்டமாக ஓடிவந்து கை குலுக்கி, கட்டித் தழுவி சிரித்துக்கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருவர் கந்தசாமிப் பிள்ளை.

அவரைக் கண்டதும் கடவுள் சட்டென்று ஓடும் பஸ்ஸிலிருந்து குதித்து அங்கே போனார். ஆனால் அங்கு நடந்துகொண்டிருந்த ஆர்ப்பாட்டத்தைப் பார்த்ததும் தயங்கியவராகக் கொஞ்சம் ஓரமாகவே நின்றுகொண்டார். அவர்களிலும் யாரும் அவரைக் கவனிக்கவில்லை.

கடைசியாக கந்தசாமிப் பிள்ளை "நல்லது அண்ணா, சுருக்கா வந்துடுங்க," என வெளியேறும் கோஷ்டிக்கு சொல்லிவிட்டு உள்ளே போக தன் காருக்குப் புறப்பட்டபோது கடவுள் மெதுவாக "மேலகரம் பிள்ளைவாள்!" என்று கூப்பிட்டார்.

கந்தசாமிப் பிள்ளை திரும்பிப் பார்த்தார்.

"ஞாபகம் இருக்கா? பழைய பரமசிவம்," என்றார் கடவுள்.

எப்படி ஞாபகம் இல்லாமல் போகும்? அதுமட்டுமல்ல, ஒரு அரைநொடிக்குள் கந்தசாமிப் பிள்ளை மண்டைக்குள் ஒரு ஏழெட்டு விஷயங்களே கூடு கட்டிவிட்டன.

அடப்பாவி கடவுளே, என்ன இப்படி திடீர்னு! போயி இருபது வருஷம்தானே ஆச்சு. அதுக்குள்ள என்ன பிரளயம் வந்து பெரிய மாறுதலாகிப்போயிருக்கும்னு திரும்ப உலகத்தைப் பார்க்க வந்திருக்காரு. போன தடவ 'ஒன் வீட்ல அதிதியா தங்குறேன்'னு சொன்னப்ப, வீட்ல அரிசி இல்லாட்டியும் மனசுல வஞ்சன இல்ல. இப்ப பங்களாவுல எல்லாம் இருந்தாலும் மனசு சுத்தம்னு சொல்ல முடியுமா? இப்பவும் இந்த சாமி அப்ப மாதிரியே 'நான் இன்னும் சில நாட்களுக்கு உம்முடைய அதிதிதான்'னு சொல்விட்டா? தவிர இந்தக் காமராமேனும் எடிட்டரும் வேற கூட இருக்காங்க.

இருந்தாலும் எல்லாவற்றையும் முரட்டடியாக உதறிவிட்டு வெகு சாமார்த்தியமாக, பலமாக, "என்ன பெரியப்பா, அப்பன் பிள்ளைக்கு அறிமுகமா?" என்றார்.

"சொல்ல முடியாதப்பா. யுகத்தின் குணாம்சம் எங்கு இருக்கும் எங்கே இருக்காது என்று எப்படிச் சொல்ல முடியும்?"

படிப்பகம்

www.padippakam.com



சொல்லிவிட்டு கடவுள் பலமாகச் சிரித்தார். அந்தச் சிரிப்பைக் கேட்ட காமிராமேனும் எடிட்டரும் எதனால் மிரட்சி என்றே தெரியாமல் மிரண்டார்கள்.

“எப்ப வந்திங்க பெரியப்பா?”

“இப்பதான்.”

“ஊர்ல இருந்துதானே?”

“ஆமா. நேரா கைலா...”

அய்யோ போச்சே என்று பதறிய கந்தசாமிப்பிள்ளை கடவுள் வாக்கியத்தை சட்டென்று முறித்து, “ஒன் மினிட் பெரியப்பா. இவங்கள அனுப்பிட்டு வந்திடுறேன்” என்று அவர்களிடம் அவர்கள் காரை எடுத்துக்கொண்டு போய் உள்ளே வேலைகளைப் பார்க்குமாறும் தான் பத்து நிமிஷத்தில் வந்துவிடுவதாகவும் சொன்னார்.

காமிராமேன் தயங்கி, “சார், பூஜைக்கி இன்னம் இருவது நிமிஷம்தான் இருக்கு,” என்றார் கைக்கடிகாரத்தைப் பார்த்தபடி.

“பரவாயில்ல, நான் பத்து நிமிஷத்துல வந்துடுறேன்.”

சரி, பெரியவர் ஏதோ வந்திருக்கும் கிழடைத் தட்டிக் கழித்துவிட்டு வரப்பார்க்கிறார் என்று அவர்கள் காரை எடுத்துக்கொண்டு புறப்பட்டார்கள்.

அவர்கள் போனதும் கந்தசாமிப் பிள்ளை, “என்ன சுவாமி, கைலாயம் அதுஇதுன்னு குட்டை உடைச்சுடுவீர்போல இருக்கே. போன தடவையே, நீங்க என்கிட்ட இருக்கும் வரை மனுஷ அத்துக்குக் கட்டுப்பட்டுதான் நடக்கணும்னு வாக்குறுதி வாங்கியிருக்கேன் இல்லையா?” என்று உரிமையோடு கோபித்துக்கொண்டார்.

“அடடா, மறந்து போய்விட்டது. இனி மீறமாட்டேன்,” என்றார் சிவன்.

“அங்கே தேவியார், பிள்ளைகள் எல்லாம் சுகமா?”

“நல்ல சுகம்.”

“என்ன விசேஷம் மறுபடியும்?”

“சும்மா பார்த்துவிட்டுப் போகத்தான்.”

“யாரைப் பார்த்துவிட்டுப் போக சுவாமி?”

“பூமியை, பூமியிலுள்ள மக்களை, உம்மை, உம் சகதர்மினியை, உம்முடைய கருவேப்பிலைக் கொழுந்தை.”

கடவுள் ‘கருவேப்பிலைக் கொழுந்து’ என்று சொன்னது கந்தசாமிப் பிள்ளையின் மகள் வள்ளியை. போன தடவை கடவுள் வந்திருந்தபோது நாலு வயது சிறுமியான அவளை அப்படித்தான் ‘ஆசைக்கு என்று காலம் தப்பிப் பிறந்த கருவேப்பிலைக் கொழுந்து’ என்று அறிமுகப் படுத்தியிருந்தார் கந்தசாமிப் பிள்ளை.

கடவுள் இன்னமும் அதை ஞாபகத்தில் வைத்திருந்தது குறித்து கந்தசாமிப் பிள்ளைக்கு வியப்பும் சந்தோஷமும். அப்புறம்தான் அவராக நினைத்துக் கொண்டார்: ‘சரி சரி. அவரோ கடவுள்.

படிப்பகம்

www.padippakam.com



கல்லினுள் தேரைக்கும் கருப்பைக்குள் உயிர்க்கும் நல்லுணவே தந்து புரந்திடும் ஈசன். அவருக்குப் போய் ஞாபகத்திற்கு என்ன பஞ்சம் இருக்க முடியும்?''

''சித்த வைத்திய தீபிகை நின்றுவிட்டது போலிருக்கிறதே, பிள்ளைவாள்.''

''ஆமாம் சுவாமி.''

''ஏன்''

''எல்லாம், கடை விரித்தோம் கொள்வாரில்லை என்ற கதை தான் கடவுளே. அமுதத்தையே கொண்டு வந்து விற்பதாக இருந் தாலும் வாங்க ஆள் இருந்தால்தானே.''

''ஏன் வியாபாரம் கெட்டது? எதற்கும் ஒரு காரணம் இருக்க வேண்டுமல்லவா?''

''இந்த அலோபதி மருந்து மற்ற எல்லா மருத்துவங்களையும் விழுங்கி ஏப்பம் விடுகிறது சுவாமி.''

''சரி, அதற்காக வேறு தொழிலே இல்லையா? சினிமாதான் கிடைத்ததா?''

''ஏன், சினிமாவுக்கு என்ன சுவாமி?''

சிவன் கொஞ்சம் தயங்கினார். ''அது அவ்வளவு நல்ல தொழில் இல்லை போலிருக்கிறதே.''

''எதை வைத்துச் சொல்கிறீர்கள்?''

''போன தடவை வந்தபோதே மக்கள் பேசிக்கொள்வதைக் கேட்டேன்.''

''அதெல்லாம் சும்மா சுவாமி. கலைஞர்கள் இருக்குமிடங் களை மக்கள் அருசையாகப் பார்ப்பது தொன்றுதொட்டு இருந்து வரும் பழக்கம்தானே.''

''அப்படியில்லை பக்தா. முன்பிருந்த நிலை வேறு. அது வெறும் கலைஞர்கள் சம்பந்தப்பட்ட விஷயம். கலைஞர்கள் எந்த அமைப்புக்கும் கட்டுப்பட முடியாதவர்கள். அதனால் எப்போதும் சுதந்திரமானவர்கள். ஆகையால் அமைப்பின் கட்டுக்குள் சிக்கிக் கொண்டு சுதந்திரமாக வாழ முடியாதவர்கள். இவர்கள் மேல் கொண்ட பொறாமையால் கண்டபடி பேசி சந்தோஷப் பட்டுக் கொண்டது வேறு விஷயம். ஆனால் இன்றைக்கு சினிமா கலை ஞர்கள் சம்பந்தப்பட்ட விஷயம் மட்டுமல்ல. அது அவர்களைத் தாண்டிப் போய்விட்டது. இன்றைய சினிமா உலகத்தில் கலைஞர் இல்லாதவர்களே அதிகம். சொல்லப்போனால் சினிமாவில் கலை ஞர் இல்லாதவர்கள் கையில்தான் கலைஞர்கள் இருக்கிறார்கள். இந்தக் கலைஞர் இல்லாதவர்களுக்கோ சினிமா என்னும் எந்தி ரத்தில் பித்தளையைப் போட்டுத் தங்கத்தைக் கறக்க வேண்டும். ஆகவே அவர்கள் எதையும் செய்கிறார்கள்; ரசிகர்கள் மூளையில் கஞ்சாச் செடி பயிரிடுவது உட்பட என்று கேள்விப்பட்டேன்.''

''எனக்கு அப்படியெல்லாம் ஒன்றும் தோன்றவில்லை. செய் யும் தொழிலே தெய்வம் என்றால் சினிமாவும் எனக்குத் தெய்வம்

படிப்பகம்

www.padippakam.com



தான்,'' என்று ஓங்கியடித்தார் பிள்ளை. ஆனால் சொன்னதும் நாக்கைக் கடித்துக் கொண்டவராய்க் கொஞ்சம் வாக்கைத் திருத்தினார். ''தெய்வமென்றால் உங்களை மாதிரித் தெய்வமில்லை. ஒரு குட்டி தெய்வம் என்று வையுங்களேன், மதுரைவீரன் மாதிரி.''

சிவன் மீண்டும் வாய்விட்டுச் சிரித்தார்.

பிறகு கந்தசாமிப் பிள்ளை, இப்போதைக்கு இவரைக் கொஞ்சம் கழட்டிவிடலாமா என்ற யோசனையில், தயங்கியவராக, ''இன்றைக்கு ஒரு படத்துக்கு பூஜை,'' என்றார்.

''இன்றைக்கா? என்றைக்குமே நீங்கள் படத்துக்கு பூஜை போடுவதுதானே வழக்கம்?'' என்றார் நஞ்சுண்டர்.

கந்தசாமிப் பிள்ளை நாக்கைக் கடித்துக்கொண்டார்.

''இல்லை, சுவாமி. இன்றைக்கு ஒரு சினிமாப் படத்துக்கு பூஜை. அதாவது ஒரு படத்தின் ஆரம்ப விழா.''

''ஓகோ. சரி, அதை நானும் பார்க்கலாம் அல்லவா?''

பிள்ளைக்கு வேறு வழி இருக்கவில்லை. ''ஓ, தாராளமா.''

இருவரும் ஸ்டுடியோவுக்குள் நடக்க ஆரம்பித்தார்கள்.

ஒரு பத்தடி நடந்ததும் கடவுள் கேட்டார்: ''கருவேப்பிலைக் கொழுந்து எப்படியிருக்கா?''

''ஓ, நல்லா இருக்கா. கல்யாணம் ஆகி அவளுக்கும் நாலு வயசுல ஒரு பொண்ணுகூட இருக்கா ''

''மாப்பிள்ளை யாரு?''

''யுனிவர்சிட்டியில லெக்சரர். நல்ல பையன்.''

கடவுள் சிந்திப்பதாகத் தெரிந்தது.

''ஏன், சினி ஃபீல்டுல ஒரு நல்ல மாப்பிள்ளைப் பையன் கெடக்கலியா. அது நீங்க கும்பிடுகிற தெய்வ சந்நிதானம் ஆச்சே?''

கந்தசாமிப் பிள்ளை உள்ளே நடுங்கிவிட்டார். இது மூன்று கேள்வி கேட்டு மூன்றாவது கேள்வியில் தலையில் மிதிக்கிற திட்டமாகத் தெரிந்தது. ஆகவே தான் இந்த மூன்றாவது கேள்விக்கு பதில் சொல்லாமல் இருந்துவிடுவதுதான் பத்திரம், உத்தமம் என்று வாய் திறந்துவிடாமல் பார்த்துக்கொண்டார்.

துவக்க விழா நடக்கும் இடத்திற்கு வந்ததும், அங்கிருந்த கூட்டத்தையும் ஜோடனைகளையும் பார்த்து சிவன் வியந்து போனார்.

''இதென்ன பிள்ளைவாள், ஒரு கல்யாண வீடுபோல் இருக்கிறது!''

''ஆமாம் பெரியப்பா. கல்யாண வீடுதான். புரொட்யூஸர் தான் பெண்ணின் அப்பன். மற்றவரெல்லாம் மாப்பிள்ளை வீட்டுக்காரர்கள்.''

''நீர்?''

''நானும் புரொட்யூஸர்தான்.''

''அப்படியிருக்க இந்த அறுபத்தைந்து வயதிலும் உமது முகம்

படிப்பகம்

www.padippakam.com



எப்படி இவ்வளவு களையாக இருக்கிறது? வெற்றி பெற்ற புரொட் யூஸரோ?''

கந்தசாமிப் பிள்ளை சிரித்துக்கொண்டார்.

மறுநாள் காலை. கந்தசாமிப் பிள்ளை பங்களா. வரவேற்ப றையில் கடவுள் இருந்தார். பிள்ளை பூஜை அறையில் இருந்தார். அன்று அவருக்குப் பிறந்தநாள்.

அவர் பூஜை முடித்துவிட்டு வரவேற்பறைக்கு வந்தபோது கட வுள் அவரைப் பார்த்துப் புன்னகை செய்தார்.

கந்தசாமிப் பிள்ளை சொன்னார்: ''என்னடா நாம் நேர்லயே இருக்கப்ப இவன் போயி நம்ம சிலைக்கு பூஜை பண்ணிட்டு வர் றானேன்னு பார்க்கிறிங்களா? பழக்க தோஷம் சுவாமி. எனக்கும் கூட அப்படித்தான் தோணிச்சு. ஆனா வழக்கமா நித்தியப்படி செய்றதில வர்ற நிம்மதி எதுலயும் வராதுன்னு பூஜையறைக்குப் போயிட்டேன்.''

''பரவாயில்லை. எங்கும் நாமிருக்கும்போது நீர் எங்கிருந்து கும்பிட்டால் என்ன?'' என்று கடவுள் சமத்காரமாகப் பதில் சொன் னார். ''அப்புறம் ஒரு விஷயம். உம்மிடம் எமக்குச் சேர வேண்டிய நிலுவை ஒரு இருபத்தைந்து ரூபாய் இருக்கிறதே?'' என் றார் புன்னகை மாறாமல்.

''இருபத்தைந்து ரூபாயா? எப்படி சுவாமி?''

''சித்த வைத்திய தீபிகைக்கு ஆயுட்சந்தா இருபத்தைந்து வாங் கினீர் அல்லவா? இப்போது பத்திரிகையை நிறுத்தி விட்டீரே.''

''ஓ அதுவா. அதுக்கென்ன, கொடுத்தாப் போச்சு,'' என்றார் பிள்ளை சிரித்தவாறே.

''பணத்தைத் திருப்பிக் கொடுத்தால் போதாது பிள்ளைவாள். செய்த சத்தியம் மறந்ததற்கும் பதில் சொல்லியாக வேண்டும்.''

''சத்தியமா? என்ன சத்தியம் செய்தேன்?''

''நீர் ஆயுட்சந்தா கேட்டபோது, யாம் யாருடைய ஆயுள் என்று கேட்டோம். நீர் உடனே 'உங்கள் ஆயுள்தான். என் ஆயுளும் அல்ல; பத்திரிகையின் ஆயுளும் அல்ல. பத்திரிகை அழி யாத வஸ்து. நான் போனாலும் வேறு ஒருத்தர் சித்த வைத்திய தீபிகையை நடத்திக் கொண்டிருப்பார். அதற்கு ஏற்பாடு பண்ணி யாச்சு' என்று சொன்னீர். அப்படி இருக்க இப்போது அதற்கான வசதி வாய்ப்பு இருந்தும் யாரையும் ஏற்பாடு செய்யாமல், பத்தி ரிகை அலுவலகத்தையே பிரியாணி கடைக்கு விட்டுவிட்டு வந்து விட்டீர். இது என்ன நியாயம்?''

உண்மையில் கந்தசாமிப் பிள்ளை முகத்தில் பெரிய சோகம். அப்படியே சிறிது நேரம் யோசனையில் உட்கார்ந்து விட்டார்.

பிறகு சொன்னார்: ''மனிதன் மிஞ்சி மிஞ்சிப் போனாலும் மனிதன் மட்டும்தானே சர்வேஸ்வரா.''

படிப்பகம்

www.padippakam.com



உண்மையில் அப்போது ஈசனுக்கும் தான் யார் பக்கம் இருப்பது என்பதில் தெளிவில்லைதான்.

வாசலில் கார் வந்து நின்று கதவுகள் திறக்கும் சத்தம் கேட்டது. வேலைக்காரி வந்து 'அம்மாவும் சின்னம்மாவும் வந்தாச்சு என்று அறிவித்தாள்.

கந்தசாமிப் பிள்ளை மனைவி காந்திமதி அம்மையாரும் மகள் வள்ளியும் பேத்தி தேவானையும் வந்தார்கள்.

அவர்கள் மாப்பிள்ளையின் பெரிய தகப்பனார் சாவிற்கு மதுரை வரை போய்விட்டு திரும்பியிருந்தார்கள்.

பிள்ளை வரவேற்றார்: "வாங்க, திரும்பிட்டிங்களா? எங்கே பிறந்த நாளும் அதுவுமா வராம போயிடுவிங்களோனு பயந்தேன்."

"அய்யோ, ஒங்க டிரைவரு வெரட்டி அடிச்சுக்கிட்டு வந்ததப் பாக்கணுமே."

"அது சரி. இங்க வந்து யார் வந்திருக்காகன்னு பாரு."

அவர்கள் உள்ளே வந்தார்கள்.

"ஞாபகமிருக்கா, கைலாவரத்து பெரியப்பா. இருவது வருஷம் முன்னாடி நாம் திருவல்லிக்கேணியில இருந்தப்ப வந்தாக."

"ஆ ஆ, ஞாபகம் இருக்கு. சேவிக்கிறேன் மாமா," என்று கும்பிட்டாள் காந்திமதி அம்மாள். இப்போதெல்லாம் முன்பு போல் சாஷ்டாங்கமாக விழுந்து எழுந்திருக்க உடம்பு இடம் கொடுப்பதில்லை.

"பத்தும் பெருக்கமுமாக சுகமாக வாழ வேணும்" என்று ஆசீர்வதித்தார் கடவுள்.

அந்தம்மாளுக்கு இவர் போன தடவை இதைப் போல் ஆசீர்வதித்ததும், அப்போது தனக்கு என்றும் அனுபவித்திராத உள்ள நிறைவு ஏற்பட்டு மனம் குளிர்ந்ததும் ஞாபகம் வந்தது. அந்த ஆசீர்வாதம்தான் தங்களை இந்த நிலைக்கு மேலே கொண்டு வந்திருக்க வேண்டுமென்று அவள் அடிக்கடி நினைத்துக் கொள்வதும் உண்டு. இப்போதும் அதே ஆசீர்வாதம்! ஒரு சுமாரான கணக்குப்படி பார்த்தாலும் இன்னும் ஒரு நான்கு மடங்காவது தாங்கள் மேலே போகலாம். அவள் மனசு மூன்று மடங்கு குளிர்ந்தது.

"ஒனக்குத் தெரியுதா வள்ளி. வந்ததுல இருந்து கருவேப்பிலைக் கொழுந்து எங்கே எங்கேன்னு கேட்டுக்கிட்டு இருந்தாக."

"ஞாபகம் இல்லியே அப்பா," என்றாள் வள்ளி.

"அது சரி. அப்ப ஒனக்கு ஒன் மக வயசுதானே."

கடவுள் வள்ளியின் மகளைப் பார்த்து "சின்ன கருவேப்பிலைக் கொழுந்தா? வா வா," என்றார்.

குழந்தை அவரை யுகயுகமாகத் தெரிந்தது போல ஓடிவந்து மடியில் ஏறிக் கொண்டாள். உட்கார்ந்ததும் "தாத்தா பேரு என்னா?" என்றாள்.

படிப்பகம்

www.padippakam.com



"பரமசிவம்." —பரமசிவம் சொன்னார்.

காந்திமதி அம்மாள் 'பரமசிவம் பிள்ளை' என்று திருத்தினாள்.

"அது என்ன தாத்தா கழுத்துல கருப்பு?"

"அது இருக்கட்டும். தாத்தாவுக்கு ஒரு முத்தம் கொடு," என்றாள் பாட்டி.

குழந்தை முத்தம் கொடுத்த போது கடவுளின் உடலே குளுகுளுத்தது. அதே நேரம் இருபது வருஷங்களுக்கு முன் ஏற்பட்ட இந்த அனுபவமும் ஞாபகம் வந்தது. அவர் தேவானையையும் வள்ளியையும் மாறி மாறிப் பார்த்தார். அப்புறம் காந்திமதி அம்மாளையும் பார்த்தார். எல்லாம் ஒன்றுதான்! இன்று தேவானை மடியில் உட்கார்ந்துகொண்டு கழுத்தில் என்ன கருப்பு என்று கேள்வி கேட்கிறாள். இவளே இருபது வருஷங்களுக்கு முன் வள்ளியாக இருந்துகொண்டு கேட்டாள். நாற்பது வருஷம் முன் வந்திருந்தால் இவளே காந்திமதியாகவும் இருந்து கேட்டிருப்பாள்.

தான் மட்டும்தான் சாஸ்வதம் என்பது சரியில்லை என்று கடவுளுக்குத் தோன்றியது. அவர் உள்ளே சொல்லிக் கொண்டார்: 'பிரமதேவா, ஐந்தாறு ஆண்களையும் ஐந்தாறு பெண்களையும் மட்டும் படைத்துவிட்டு, அவர்களுக்குள் ஏதோ கிளை பிரியும் எந்திரத்தை வைத்துவிட்டு, காலமெல்லாம் ஜீவராசிகளைப் படைத்து அலுத்துப் போகிறது என்று கதையா அடித்துக் கொண்டிருக்கிறீர்? வந்து பேசிக்கொள்கிறேன்.'

வாசல் காவலன் உள்ளே வந்து பிள்ளையிடம், "அய்யா, அந்த கண்ணாடிக்காரர் வந்திருக்காரு," என்றான்.

"வரச் சொல்லு."

காந்திமதி, "சரி, நாங்க சோளிகளப் பாக்குறோம்," என்று உள்ளே நகர, வள்ளியும் தேவானையும் பின் தொடர்ந்தார்கள்.

போகும்போது காந்திமதி நினைத்துக் கொண்டாள்: 'என்னா இந்த மாமா இருவது வருஷம் போயும் அப்பிடியே அச்சு மாறாம இருக்காகளே! தேசாந்தரம் போனவுக சித்து வேல எதுவும் கத்துக்கிட்டாகளா?'

கண்ணாடிக்காரர் என்கிற நிருபர் சீனிவாசன் உள்ளே வந்து ஆர்ப்பாட்டமாக கந்தசாமிப் பிள்ளைக்கு பிறந்தநாள் வாழ்த்துச் சொன்னார்: "பல்லாண்டு பல்லாண்டு வாழ்க!"

பிள்ளை அவரிடம் ரொம்ப சொந்தமாக "சந்தை கூடுறதுக் குள்ள முடிச்சவிக்கி முன்னால வந்த மாதிரி நீர் வந்துட்டீராக்கும். வாரும். இப்படி இரியும்," என்றார்.

"முடிச்சவிக்கி இல்ல பிள்ளைவாள். முடிச்சு வெட்டி. நீங்களும் ஒங்க கூட்டாளிகளும் எங்க ஜனங்கள கட்டிப் போடுற முடுச்சுகள வெட்டுற ஆளு" என்று சொல்லிவிட்டு கடவுளைப் பார்த்தார் சீனிவாசன்.

படிப்பகம்

www.padippakam.com



"எங்க பெரியப்பா," என்றார் பிள்ளை.

பெரியப்பாவா, இருக்காதே என்கிற மாதிரி சீனிவாசன் மீண்டும் கடவுள் முகம் பார்த்தார். கடவுளும் பார்த்தார். இருவரும் ஒருவர் கண்ணுக்குள் மற்றவர் இறங்கிப் பார்ப்பதுபோலவும் ஒருவரையொருவர் தெரிந்துகொண்ட மாதிரியும் இருந்தது. கடைசியில் கடவுளிடம் 'உம்மை எமக்குத் தெரியும்' என்கிற மாதிரி இணக்கமான புன்னகை. சீனிவாசன் புன்னகையும் அதற்கு இளைத்ததாக இல்லை.

கந்தசாமிப்பிள்ளை கடவுளிடம் "ஆசாமி ஜர்னலிஸ்ட். நாங்க எடுக்கற படங்களையும் எங்களையும் கிழிகிழின்னு கிழிக்கறது தான் முழுநேர வேல" என்று அறிமுகப்படுத்தினார்.

"உங்க சிநேகம் பார்த்தா அப்பிடித் தெரியலியே."

"அது பூர்வாஸ்ரம உறவு. சித்த வைத்திய தீபிகைக்குச் சந்தா சேர்க்க ஆசாமி வீடுவீடா, கடை கடையா ஏறி இறங்கினதுல உண்டானது."

சீனிவாசன் கடவுள் பக்கத்திலேயே உட்கார்ந்து கொண்டார்.

"சரி, பிறந்த நாளுக்கு என்னா பரிசு கொண்டு வந்திருக்கே?" பிள்ளை கேட்டார்.

"பரிசா ஒரு நியூஸ்."

"என்ன நியூஸ்?"

சீனிவாசன் அந்த 'நியூசை'ச் சொன்னார்.

அன்று அரை மணி நேரத்திற்கு முன்னால் அவர் இங்கே வருவதற்காக பஸ் நிறுத்தத்தில் நின்றுகொண்டிருந்தார். அப்போது பெரிய வேன் ஒன்று அவர் பக்கத்தில் அவரை இடிப்பது போல் வந்து நின்றது. உள்ளே பார்த்தால் சிரித்தபடி வேம்பிலி. வேம்பிலி இவரது அந்தக் காலத்திய நெருங்கிய நண்பர். இவரைப் போலவே லட்சியவாதம் பேசிக் கொண்டிருந்தவர். இப்போது சினிமா வசனகர்த்தா. சினிமாவின் சகல தளங்களுக்கும் தன்னைத் தகுதியாக்கிக் கொண்டுவிட்டவர்.

அவர் கேட்டார்: "சீனு, எங்க போறே?"

இவர் பதில் சொன்னதும் "அடடே, நானும் அங்கதான் போறேன். ஏறிக்க" என்றார்.

இவர் ஏறி உட்கார்ந்ததும் பார்த்தால், ரொம்பப் பிரமாதமான வண்டி.

"இது யாரு வேன், வேம்பிலி?"

"என்னதுதான்."

"எப்ப வாங்கினே?"

"ஒரு வருஷம் ஆச்சு."

இவர் மௌனமாகிவிட்டார். இவருக்கு எப்போதுமே கபாலத்திலும் நாக்கிலும் சனி உண்டு என்று சொல்வார்கள். அது சம

படிப்பகம்

www.padippakam.com



யங்களில் நேரம் காலம் பார்க்காமல் வேலை செய்ய ஆரம்பித்து விடும். இப்போதும் அதுதான் நடந்தது.

வண்டி ஒரு மைல் தூரம் போனதும் சீனிவாசன் மெல்ல முணு முணுப்பது போலச் சொன்னார். "வேம்பிலி, உன் ஆத்மா உண் யில ரொம்பப் பெரிசாத்தான் இருந்திருக்கணும்."

"எதனால அப்பிடிச் சொல்றே, சீனு?"

"இல்லேனா அதுக்கு இவ்வளவு பெரிய வேன் கொடுப்பாங் களா?"

வேம்பிலியின் முகம் விழுந்து விட்டது. எதுவும் பேசாமல் மௌனமாகிவிட்டார். அடுத்த பஸ் நிறுத்தம் வந்ததும் வேனை நிறுத்தச் சொல்லி, "சாரி சீனி, ஒரு விஷயம் மறந்துட்டேன். நான் வாகினி வரையிலயும் போயிட்டு வந்துடுறேன் திரும்ப எப் பிடியும் பத்து மணி ஆயிடும். நீ முன்னால பஸ்ல போயிடு," என்று சொல்லிவிட்டார்.

'நியூஸ்' கேட்ட கந்தசாமிப்பிள்ளை, "ஓய், உம்மை சீனிவா சன் இல்ல, சனிவாயன்னு எல்லாரும் சொல்றது சரியாப் போச் சில்ல. ஒரு மனுஷன் காலங்கார்த்தால இப்பிடியாங்கானும் பேசு வான்?" என்றார்.

"நான் என்ன பேசக்கூடாததப் பேசிட்டேன்?"

பிள்ளைக்குக் கோபம் வந்தது. "என்னாருமய்யா நீர். ஈட் டிய குத்துன மாதிரி பேசிட்டு ஒண்ணும் தெரியாத மாதிரி நடிக்கி நீர். உம்ம ஆத்மா ரொம்ப பெரிசா இருந்திருக்கணும். இல் லேனா அதுக்கு இவ்வளவு பெரிய வேன் தருவானான்னு கேட்டா அவன் ஆத்மாவை வித்துட்டு சினிமா உலகத்துல சம்பாரிக்கி றான்னு இல்லய்யா அர்த்தம்?" என்றவர் தொடர்ந்து கடவுளிடம் "அந்த ஆளு ஆரம்பத்துல பத்திரிகைகள்ல எழுதுறப்ப ஆத்மா, கர்மா, காந்தி, டால்ஸ்டாய், கார்ல்மார்ராக்ஸ்னு ஏதோ சொல்லிக் கிட்டு இருந்தான். இப்ப சினிமா சான்ஸ் கெடச்சதும் கொஞ்சம் காம்ப்ரமைஸா எழுதுறான். அதுக்குப் போயி இந்தப் பிரகிருதி இப்பிடி கேட்டு வச்சிருக்கு."

கடவுள் புன்னகைத்தபடி சீனிவாசனைத் தட்டிக் கொடுத்தார்.

சீனிவாசன் நிமிர்ந்து கடவுள் முகம் பார்த்து "எனக்கும் உங் கள பெரியப்பான்னு கூப்பிடணும்போல இருக்கு," என்றார்.

"கூப்பிடு," என்றார் சிவன்

"அப்படின்னா என்னையும் நீங்க நீர்னு கூப்பிடக் கூடாது. நீன்னுதான் கூப்பிடணும்," என்றார் சீனிவாசன்.

"சரிடா," என்றார் கடவுள்.

குபீரென்று இருவரும் சிரித்தார்கள். கடவுளும் சிரித்தார்.

சிரித்து முடிந்ததும் பிள்ளை சீனிவாசனிடம் கேட்டார்: "அது சரி, அப்புறம் அவன் போகச் சொன்னதும் நீர் என்ன செய்தீர்?"

"என்ன செய்றது. எறங்கி அடுத்த பஸ் பிடிச்சு வந்தேன்."

படிப்பகம்

www.padippakam.com



"வேணும். தரை டிக்கட் ஆசாமிகள் மாதிரி நீங்கள்ளாம் டவுன் பஸ் டிக்கட் ஆசாமிங்க. அதுதான் ஒங்களுக்கு விதிச்சது. ஓசியில கார் சவாரி கெடச்சாலும் லபிக்காது. சனி வந்து மறிச்சுடும்."

போர்டிகோவில் ஒரு கார் சத்தம். அப்புறம் இரண்டு மூன்று.

ஒரு ஏழெட்டு பேர் திபுதிபுவென்று உள்ளே வந்தனர். நடிகர்கள், தயாரிப்பாளர்கள், டைரக்டர்கள், பைனான்சியர்கள். ஆர்ப்பாட்டமான வாழ்த்துகள். பூச்செண்டுகள், எலுமிச்சம் பழங்கள்.

அதில் ஒரு ஆள் சிவனைவிட அதிகமாக பட்டை அடித்திருந்தான். சிவனாருக்கு அவனைப் பற்றிய ஏதோ ஞாபகம் நிழலாடியது. ஆங்? அவன்தான். பெஞ்சாதிக்காரி 'வேணாங்க. சிவன் சொத்து குலநாசம்' என்று சொன்னபோது, 'ம், மசுரு நாசம்' என்று சொல்லிவிட்ட கோயில் தர்மகர்த்தா. இப்போது சினிமா உலகத்திலும் இருப்பான் போலிருக்கிறது.

சக படத்தயாரிப்பாளரான செல்வநாயகத்திடம் கந்தசாமிப் பிள்ளை கை குலுக்கியபோது, "அடுத்த வெள்ளிக்கிழமை ஒங்க பொறந்த நாள் இல்ல?" என்று கேட்டார்.

"ஆமா. ஆனா அப்ப நான் வெளியில இருந்தா," என்றார் செல்வநாயகம்.

"ஏன், என்ன விஷயம்?"

"அதுக்குள்ள இந்த சென்சார் போர்டுல இருக்க நாலு பயலையாவது சுட்டுத் தள்ளப் போறேன்."

எல்லாரும் சிரித்தார்கள்.

"சும்மா வெளையாட்டுக்கு சொல்லல. இவனுங்க என்ன அநியாயம் பண்றானுங்க தெரியுமா?"

உடனே இன்னொருவர் அவருக்கு ஆதரவாகக் கிளம்பினார். "உண்மைதான். நாம இவனுகளுக்கு எதிரா ஒரு போராட்டமே நடத்தனும்னு சொல்வேன். நாம பணம் போட்டு படம் எடுக்குறோம். மக்கள் பாக்குறாங்க. ஏதாவது சரியில்லே அப்பிடின்னா அவங்க நிராகரிச்சுட்டுப் போறாங்க. நடுவுல இவனுங்க யாரு?"

"அது சரி. இனிமே கடையில எல்லாம்கூட எடைக்கல்ல, எந்த அதிகாரியும் செக் பண்ண வேணாம். மக்கள் பாத்துட்டுப் போறாங்க. நடுவுல இந்த அதிகாரிங்க எதுக்கு?" என்றார் சீனு.

அப்போதுதான் மற்றவர்கள் அவர் அங்கு இருப்பதையே பார்த்தார்கள்.

நடிகர் சந்தான கிருஷ்ணன் கண் சிமிட்டி, "செல்வநாயகம், ஒங்க டார்கெட்ல ஒண்ணு இங்கேயே இருக்கு," என்று சொல்ல, மீண்டும் சிரிப்பலை.

"வேணாம் வேணாம். என்னதான் இருந்தாலும் சீனி நம்ம தோஸ்த்," என்றார் கந்தசாமிப் பிள்ளை.

யாரோ ஒருவர் கடவுளைப் பார்த்து, "சாமி, யாரு தெரியலியே?" என்றார்.

படிப்பகம்

www.padippakam.com



"எங்க பெரியப்பா," என்றார் க. பி.

'சிவன் பிச்சாண்டியா வர்ற வேஷத்துக்கு ரொம்பப் பொருத்தமா இருப்பார்" என்றார் முன்னவர்.

சிவன் வாய்விட்டுச் சிரித்தார்.

"அட, நம்ப பி. எஸ். வீரப்பா பிச்ச வாங்குனார் போங்க," என்றார் இன்னொருவர்.

"பெரியப்பாவும் நடிகர்தான், வயசுல," என்று க. பி. கடவுளைப் பார்த்துக் கண் சிமிட்டினார்.

"நடிக்கறதுக்கு வயசு என்ன? இப்ப நாங்க திரும்ப ஆயிரம் தலை வாங்கி அபூர்வ சிந்தாமணி எடுக்கப் போறோம். அதுல ஒங்க பெரியப்பாவ எம். ஆர். சாமிநாதன் ரோல் பண்ணச் சொல்றிங்களா? இப்பவே அட்வான்ஸ் வெட்றேன்," என்றார் டைரக்டர் ரங்கநாதன்.

"சிவ சிவ," என்றார் க. பி.

கடவுள் அந்த டைரக்டரிடம் கேட்டார்: "நான் நடிக்கறது இருக்கட்டும். எனக்கொரு சந்தேகம். சினிமா இப்ப இருக்கிறதிலேயே பெரிய மக்கள் தொடர்பு சாதனம். பெரிய பட்டணத்துல இருந்து குக்கிராமம் வரைக்கும் சுலபமா போகுது. அத வச்சு என்ன சாதிக்க உத்தேசம் உங்களுக்கெல்லாம்?"

"நீங்க என்ன கேக்குறிங்க, எதுக்கு கேக்குறிங்கனு தெரியல. இது ஒரு தொழில். நாங்க பணம் சம்பாதிக்க இந்தத் தொழில செய்றோம். இதுக்கு மேல நெனைக்க என்னா இருக்கு?"

"பணம் மட்டும்தான் குறிக்கோளா?"

"ஆமாம் சாமி. பணந்தான். பணம் மட்டும்தான். பணம் பணம் என்றறியாமல் வேறொன்றறியேன் பராபரமே," என்றார் தர்மக்கர்த்தா புரொட்யூஸர்.

சீனிவாசன், "பணம் வந்தா போதுமா? அது வர்றதுக்கு ஒரு நியாயம் வேணாமா?" என்றவர், நடிகர் பெருமாளைக் காட்டி, "இவரு பேசுற அசிங்கமான ரெட்டை அர்த்தங்களை பணத்தின் பேரால ஆசீர்வாதம் பண்ணிட முடியுமா?" என்றார்.

பெருமாள் உடனே, "அட நானும் நீயும் என்னய்யா ஆசீர்வாதம் பண்றது. அதுதான் பணமே ஆசீர்வாதம் பண்ணிடுதே. பணம் பண்ணா அது சாட்சாத் சிவபெருமான் பண்ணமாதிரி தானே?" என்று சொல்ல, ஏதோ யோசனையிலிருந்த சாட்சாத் சிவபெருமான் திடுக்கிட்டார்.

"இருந்தாலும் ஒரு மனிதனுக்கு சக மனிதன் பற்றிய கடப்பாடு இருக்கில்லியா?"

"என்ன கடப்பாடு? அவனவன் பாடுதான் அவனவன் கடப்பாடு. இதுல இன்னொருத்தன் நல்லா இருக்கானா, நாசமாப் போறானான்னு கவலப்பட நேரம் எங்க இருக்கு?"

"இப்ப நீங்க ஒரு நடிகரா இல்லாம இருந்து, நீங்க நடிக்க

படிப்பகம்

www.padippakam.com



றத வேறொரு மனுஷன் நடிக்கறதா வையுங்க. அப்பவும் நீங்க இந்த கோமாளித்தனங்களையும் இரட்டை அர்த்தங்களையும் ஆசீர்வதிப்பிங்களா?''

''ஒருவேள ஆசீர்வதிக்காம போகலாம். அப்ப நான் ஒரு போதகராவோ, உங்க மாதிரி ரிப்போர்ட்டராகவோ இருக்கலாம். அப்ப எனக்கு இத எதுத்துப் பேசறதுதான் என் தொழில் சுபாவமா இருக்கலாம். செய்யும் தொழில்தானே தெய்வம் சுவாமி. தெய்வம் எப்படியோ, அப்படியே பூசாரி, இல்லியா?''

''செக்ஸ், வன்முறை, மூளைச் சலவை மூணையும் ஒரு பார்முலாவா வச்சு படம் எடுத்துத் தள்றிங்க. இதனால நாடு எங்க போவுதுன்னு உங்களுக்குத்தெரியலியா? அதுல அக்கறையில்லியா?''

இதற்கும் பெருமாள் அழுத்தம் திருத்தமாகவே பதில் சொன்னார். பதில் வந்த சரளத்தைப் பார்த்தால், இந்த மாதிரி கேள்விகளை அவர் வெளியிலிருந்தோ அல்லது உள்ளிருந்தோ பலமுறை கேட்டுக் கேட்டு பல நாள் சிந்தித்து பதில் எழுதி வைத்திருப்பதாகவே பட்டது.

''நாடு எங்கே போகுதுன்னு எங்களுக்கு ஏன் தெரியணும்? எதுக்கு அந்த அக்கறை? நாங்க நடிக்காட்டி, படம் எடுக்காட்டி, எடுத்த படம் விழுந்துப் போயிட்டா, நாங்க எங்க போயிடுவோங்கிறதுதான் எங்க அக்கறை.''

அப்புறம் அவரே ஆவேசம் வந்தவர் போல் தொடர்ந்தார்: ''என்னமோ சினிமாக்காரன்தான் அணுகுண்ட தயாரிக்கிற மாதிரி வந்து கேக்குறிங்களே. அவ்வளவு படிச்ச அறிவாளி விஞ்ஞானிதான் அணுகுண்ட தயாரிக்கிறான். அதனால எத்தினி லட்சம் பேரு சாவாங்கன்னு அவன் நெனைக்கிறானா? ஒரு கரட்டான் முட்டையிடாத காட்டுக்கு ரெண்டு நாட்டு அரசியல்வாதியும் ஆயிரக் கணக்குல சோல்ஜர்கள பலி கொடுக்குறான். அவன் சிந்திக்கிறானா? அவனுக்கு லைசன்ஸ் தர்றவன் சிந்திக்கிறானா?''

இப்படி அவரது பட்டியல் துல்லியமாகவும் புள்ளி விவரத்தோடும் நீண்டுகொண்டே போனபோது, கடவுளுக்கு பெரும் வியப்பு. என்னவொரு மனித மூளை! அதற்குள் எப்படியொரு தர்க்க சாஸ்திர நுணுக்கம்!

பிறகு அவரே கேட்டார்: ''முடிவா என்னதான் சொல்றிங்க?''

''முடிவா சொல்றது என்னய்யா. நாங்க அப்படித்தான் இருப்போம். அப்படித்தான் படம் எடுப்போம். ஆனா இது திமிர் இல்லிங்க. இதுதான் சத்தியம் — இதுதான் சத்தியம். வேண்ணா நீங்க நெனைக்கிற உன்னதங்கள வச்சும் அப்பப்ப படம் எடுத்து அதுலயும் காசு பண்ணப் பாப்போம். அவ்வளவுதான்.''

''இது உங்க சொந்தக் கருத்தா? இங்க இருக்க எல்லாருடைய கருத்துமா?''

படிப்பகம்

www.padippakam.com



"என்னோட, இங்க இருக்க, மொத்த சினிமா உலகத்தோட கருத்தும் இதுதான்."

"அப்படியா?" என்ற கடவுள் மற்றவர்களைப் பார்த்தார்.

அவர்கள் எல்லாரும் ஒரே நேரத்தில் 'ஹுரே' என்று கை தட்டினார்கள்.

எங்கோ விளையாடிக்கொண்டிருந்த தேவானை இங்கே ஓடி வந்து பார்த்தாள்.

மாலை கடவுளும் கந்தசாமிப் பிள்ளையும் பங்களா காம்பவுண்ட் ஓரம் மாமரத்தடியில் நின்றுகொண்டிருந்தார்கள். கடவுள் புறப்படும் நேரம்.

கந்தசாமிப் பிள்ளை சொன்னார்: "சுவாமி, இனிமே நீங்க பூவுலகம் பார்க்க வராதிங்க."

"ஏன்?"

"இங்க எதுவும் உங்களுக்கு சந்தோஷமா நடக்கப்போறதில்ல. ஒவ்வொரு தடவையும் ஏமாந்துதான் போகப்போறிங்க. பிரபஞ்சத்துல எங்கயோ ஒரு முடிச்சு தொங்கிக்கிட்டு இருக்கு, உங்க கடவுள்கள் கண்ணுக்கும் தெரியாமகூட. அதுல மனுஷனோட த்லைவிதி சிக்கியிருக்கு. அந்த முடிச்சு உங்களுக்கும் ஏச்சம் காட்டுது. மகாவிஷ்ணு யுக யுகத்துக்கும் அவதாரம் எடுக்குறாரு. என்ன பிரயோஜனம்? எல்லை மீறிப் போய்விட்ட ரெண்டு மூணு பேர கழிக்கிறாரு– ராவணன், துரியோதனன் சகுனி வகையறாவ. ஆனா இதுல ராவணன், துரியோதனன், சகுனி ஆகியவர்கள் தான் சாகிறார்களே தவிர, ராவணியமோ, சகுனியமோ, துரியோதனியமோ அழியறதில்ல. அது அப்பிடியேதான் இருக்கு, கூடவோ கொறையவோ, ஒவ்வொரு மனுஷன்கிட்டயும். அதை யழிக்க அவரால முடியல. இந்த விஷயத்துல அவரு ஏதாவது செய்தா நல்லா இருக்கும். ஆனா இந்த விஷயம் அவருக்குத் தெரியுமாங்கறதே சந்தேகமாக இருக்கு. அவரு சும்மா ஒவ்வொரு தடவையும் வந்து ரெண்டு பேரைக் கொன்னுட்டு, மீதிப் பேரைப் பயமுறுத்திவிட்டுப் போறாரு. ஆனா, மனுஷன் பயப்படுகிற மாதிரி தெரியல. அவன் ஒன்பது அவதாரத்துக்கும் பெப்பே காட்டிட்டான். அவரும் பத்தாவது தடவை வேறு வர்றேனு சொல்லிட்டுப் போயிருக்காரு. இவனும் இன்னொரு அவதாரத்த சீக்கிரம் தரிசிக்க ஆசைப்படுகிற மாதிரி நடந்துகிட்டு வர்றான் இந்த மெட்ராஸ் பாஷையில சொன்னா இந்த மனுஷன் ஒரு 'பூட்ட கேஸ்.' இதுல நீங்க வேற எதுக்கு அடிக்கடி..."

கடவுள் புறப்பட்டார்.

**ஜெயந்தனின் 'நானும் நாடகமும்' வரும் இதழ்களில்.**

படிப்பகம்

www.padippakam.com



# புதிய சிகரங்களில் இலக்கிய விமர்சனம்

— எஸ்.வி. ராஜதுரை

1990இல் மண்டல் குழு அறிக்கை வெளியிடப்பட்ட பின், இந்தியாவின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த சமூகவியலாளர்களும் மார்க்சியர்களும் 'சாதி' என்ற வகையினம் பற்றிய தீவிரமான ஆய்வில் ஈடுபட்டனர். மண்டல் குழுவிற்கு எதிராக உயர்சாதியினர் எனத் தம்மைக் கருதிக்கொண்டோர் நடத்திய வெறித்தனமான போராட்டங்களும் அதற்குக் காரணமாக இருந்தன. அதற்கு முன்பு 'சாதி' பற்றி மார்க்சியர்கள் பேசாமலிருக்கவில்லை என்பது உண்மைதான். ஆனால், அது இந்திய சமுதாயத்திலுள்ள பொருளாதார அடித்தளத்தின் மேலடுக்கு (Super structure), அல்லது நிலப்பிரபுத்துவ சமுதாயத்தின் எச்சம், அல்லது வர்க்கத்தின் ஒரு வடிவம் (மேல் தோற்றம்) என்றே விளக்கி வந்தனர். காலஞ்சென்ற டி. டி. கோசாம்பி மட்டுமே சாதியமைப்பு முறை எவ்வாறு தோன்றிற்று என்பது குறித்து முனைப்பான ஆய்வுகளைச் செய்தார். ஆனால் அவரும் தேவிபிரசாத் சட்டோபாத்யாவும் நமக்கு அறிமுகப்பட்ட அளவிற்கு, மார்க்சியத்துடன் ஃபுலெ, அம்பேத்கர் சிந்தனையையும் இணைத்து இந்திய வரலாற்றைப் பார்ப்பவரும், பாலி, சமஸ்கிருத மொழிகளில் ஆழ்ந்த புலமை பெற்றவருமான மராத்திய மார்க்சிய அறிஞர் ஷரத் பாட்டில் இந்திய மார்க்சிய வட்டாரங்களில் போதுமான அங்கீகாரமும் மரியாதையும் பெறமுடியவில்லை. சூத்திரரான அவரது சொல்லாடல்கள் மார்க்சிய வட்டாரங்களிலுள்ள உயர்சாதி மார்க்சியர்களின் சொல்லாடல்களால் இன்றும்கூட அமுக்கியே வைக்கப்பட்டிருக்கின்றன.

மண்டல் குழு' அறிக்கையின் பின் விளைவுகளிலொன்றாக இந்திய மார்க்சியவாதிகளின் கவனத்திற்கு 'சாதி' என்ற பிரச்சனை வந்து சேர்ந்துள்ள போதிலும், அதனை அவர்கள் எதிர்கொள்ளும் முறைகள் பல தரப்பட்டவையாக உள்ளன. இட ஒதுக்கீடு என்பது நாடாளுமன்ற அரசியலுக்குப் பயன்படுகிறது என்கிற அளவில் சி. பி. ஐ. அதனை முழுமையாகவும், சி. பி. எம். வேண்டா வெறுப்பாகவும் ஆதரிக்கின்றன. சி. பி. எம். கேரளத்தில் ஒரு நிலைப்பாடும் மேற்கு வங்கத்தில் மற்றொரு நிலைப்பாடும் வகிக்கின்றது. மேற்கு வங்கத்தில் அரசியல், பொருளாதாரம், சமூக பண்பாட்டுத் துறைகள் அனைத்திலும் பார்ப்பனர், காயஸ்தர், வைத்தியா ஆகிய முப்பெரும் சாதியினரே ஆதிக்கம் செலுத்துகின்றனர் என்றும், இந்த சாதிகளுக்கப்பால், பிற்பட்ட – தாழ்த்

படிப்பகம்

www.padippakam.com



தப்பட்ட சாதியினர், பழங்குடி மக்களிலிருந்து வந்த ஒரு முக்கிய அரசியல் தலைவர் இதுவரை யாரும் இல்லை என்றும் (இதற்கு ஒரே ஒரு விதி விலக்கு நக்சல்பாரி இயக்கத்தின் தொடக்ககால நாயகர்களில் ஒருவரான ஜங்கால் சந்தால் என்றும்) மக்கள் தொகை கணக்கெடுப்பு வல்லுநர் அசோக் மித்ர கூறுகிறார். (Mainstream, 28-1-95.)

மண்டல்குழு பரிந்துரைகள் பிற்படுத்தப்பட்ட சாதியினர், இடை நிலைச் சாதியினர், சூத்திரர் எனப் பலவாறாக அழைக்கப்படும் சாதியினருக்குத்தான் நன்மை பயப்பன என்ற போதிலும், அப் பரிந்துரைகளை எதிர்த்து மூர்க்கதனமாய்ப் போராடிய மேல் சாதி யினருக்கு எதிராக பல இடங்களில் குரல் கொடுத்தவர்கள் தலித்து கள். பெரியார் வருணித்தது போல 'ஏணி மரப் படி' போன்ற நமது சாதிய சமுதாயத்தில், எல்லா ஏணிப்படிகளுக்கும் கீழே முதல் படியாக அமைந்து, ஒவ்வொரு சாதியினரின் பாதங்களின் சுமைகளைத் தாங்கி, அவர்களை மேலே ஏற்றிவிடும் தலித்துகள் தங்களுக்கான நிரந்தரமான கடைத்தேற்றத்துக்கான ஒரே வழி யான சாதி ஒழிப்பு என்பதற்கான முதல் கட்டமாக, எல்லா சாதி யினருக்கும் சமவாய்ப்பு, பாரபட்சமின்மை ஆகியவற்றைப் பார்த்த தால்தான் சூத்திரர்களுக்கு ஆதரவான குரல் கொடுத்தனர். இந் துத்துவ அரசியலின் வளர்ச்சியை இந்திய மக்கள் அனைவருக்கு மெதிரான கொடிய சவாலாகவும் கருதியதால்தான், 1947 ஆம் ஆண்டுக்குப் பிந்திய இந்தியாவில் இடைநிலைச் சாதிகள் கணிச மான பொருளாதார அரசியல் ஏற்றம் பெற்றுப் புதிய ஆதிக்க சக்திகளாகத் தங்களைக் கொடுமைப்படுத்தி வந்தபோதிலும் அனை வருக்கும் பொதுவான எதிரியான இந்துத்துவ - பார்ப்பனிய சக்தி களை எதிர்த்துப் போராடத் தோள் கொடுத்தனர். 'சமூக நீதி' என்ற முழக்கத்தின் கீழ் இந்தக் கூட்டணி செயல்பட்ட போதிலும் தலித்துகளுக்கான 'சமூகநீதி' என்பது இன்னும் எட்டாக்கனியா கவே இருந்துவருகிறது. அறிவொளி இயக்கமும்கூட கிராமப் புறங் களில் சாதி இந்துக்களையும் தலித்துகளையும் தனித்தனியாக உட் கார வைத்தே எழுத்தறிவு ஊட்டிக் கொண்டிருக்கிறது.

மற்றோர்புறம் இந்தியாவில் உழைப்பு இயக்கத்திலீடுபட்டும் சுரண்டப்பட்டும் வருகிற சாதிகளையும் சமூக அடுக்குகளையும் விட எல்லா வகைகளிலும் கொடுமைக்குள்ளாகின்ற தலித்துகளி டையே புதிய எழுச்சி அலைகளும் தோன்றிக் கொண்டிருக்கின் றன. வர்க்க அடிப்படையில் மார்க்சிய - லெனினியப் பதாகைக ளின்கீழ் தலித்துகள் ஒன்றுதிரட்டப்படும் உ. பி., பீகார், ஆந்திரம் போன்ற மாநிலங்களிலும்கூட சுயாதீனமான தலித் இயக்கங்கள் வளர்ந்துள்ளன. உயர்சாதி / சூத்திர / 'வர்க்க'ப் பார்வைகளின் போதாமையை மட்டுமின்றி அவற்றிலும்கூட உள்ளார்ந்த ஒடுக்கு முறைக் கூறுகள் உள்ளன என்று கருதும் தலித் அமைப்புகளில் சில வெளிப்படையான மார்க்சிய, இடதுசாரி எதிர்ப்புத் தன்மை

படிப்பகம்

www.padippakam.com



யுடையவையாய் உள்ளன. மற்றொருபுறமோ மராத்தியம், ஆந்திரம் கருநாடகம் போன்ற மாநிலங்களில் காணப்படுவது போல, தலித் இயக்கங்கள் இடதுசாரிகளின் கூட்டுறவை நாடுகின்ற மரபும் தொடர்ந்து இருந்து வரவே செய்கிறது. எல்லா இடங்களிலுமே தலித் இயக்கங்கள், கூட்டணிகளை உருவாக்கிக் கொள்கின்றன; அதே சமயம் அக் கூட்டணிகள் தலித்துகளை விழுங்கி, சீரணித்துக் கொள்ளாமலிருக்கும் பொருட்டுத் தம் தனித்தன்மையை விட்டுக் கொடுக்காமலிருப்பதையும் காண்கின்றோம்.

இப்படித் தனித் தன்மையை உறுதி செய்து கொள்ளும் தலித் இயக்கங்கள் எல்லாமே, குறிப்பிட்ட தலித் சாதிகளின் 'தனித் தன்மை'யைக் காப்பாற்றிக்கொண்டு, அவற்றுக்குச சில தனிச் சலுகைகளை வாங்கிக் கொடுத்துக்கொண்டு, புரவலர் - புரக்கப்படுபவர் என்ற அடிப்படையில் மேல் சாதிக்காரர்களின் வாக்கு வங்கி முகவர்களாகச் செயல்படுவன அல்ல. மாறாக மானுட விடுதலையைச் சாத்தியப் படுத்துகிறதும், மானுட குலம் முழுவதின் துயரத்தையும் தன் துயரமாகக் கருதுகிறதுமான உலகு தழுவிய வர்க்கம் ( Universal Class ) என்று மார்க்ஸ் பாட்டாளி வர்க்கத்தை வரையறுத்தாரே, அதே போன்றதொரு உலகு தழுவிய வர்க்கத்தின் நிலையில் 'தலித்' என்ற வகையினத்தை வைத்துப் பார்க்கும் விசாலமான பார்வையைக்கொண்ட தலித் அரசியல் இயக்கங்கள் அல்லது இலக்கிய இயக்கங்கள் குறிப்பாக ஆந்திரம், கருநாடகம் ஆகியவற்றில் பல்லாண்டுகளாகவே செயல்படுகின்றன. அங்கு தலித் அரசியலும் தலித் இலக்கியமும் ஒன்றையொன்று சார்ந்தவையாக, ஒன்றையொன்று வளப்படுத்துபவையாக உள்ளன.

தமிழகத்தில் 'தலித்' என்ற அடையாளத்தோடு இயங்கும் அமைப்புகள் மிகச் சிறியவையாகவே உள்ளன. 'தலித்' என்ற சொல்லே பல்வேறு முகச்சுளிப்புகளுக்கு ஆளாகி வருகிறது. மராத்தியத்தில் பல்வேறு பின்னடைவுகளையும் சந்தர்ப்பவாத அரசியல் அறுவடைகளையும் கண்ட பிறகு, அண்மையில் ஒற்றுமை நாட்டம் பெற்றுள்ள குடியரசுக்கட்சி தமிழ்நாட்டில் அத்தகைய முன்னுதாரணங்களை உருவாக்கவில்லை. 'டெல்லியைக் கைப்பற்றுவோம்' என்ற கவர்ச்சிகரமான முழக்கத்தின் கீழ் தலித்துகளிடையே நாடாளுமன்ற அரசியல் செயல்பாடுகளிலேனும் சுய நம்பிக்கையை ஊட்டக்கூடிய ஒரு கன்ஷிராம்கூட இங்கில்லை. சாதிப் பிரச்சனையைத் தீவிரமாகக் கருத்தில் கொள்ள முன் வந்திருக்கும் ஆந்திர மக்கள் யுத்தக் குழுவோ, ஜனசக்தி குழுவோ அல்லது பார்ப்பனீயம் பற்றித் தீவிரமாகச் சிந்திக்கத் தொடங்கியுள்ள வினோத் மிஸ்ரா குழுவோ போன்ற வெகுமக்கள் ஆதரவு பெற்ற நக்சலைட் குழுக்களும் இங்கில்லை. எனினும் உலக வரலாற்றில் பலமுறை நிகழ்ந்துள்ளது போல தமிழ் நாட்டில் இன்று நடக்கும் கருத்தியல் (கருத்துநிலை) போராட்டம், பண்பாட்டுத் தளத்தில் நடக்கும் போராட்டம், பின்னாளில் வரும் ஒரு அரசியல் இயக்கத்திற்குப் பாதை வகுக்கக் கூடும்.

படிப்பகம்

www.padippakam.com



எது எப்படி இருப்பினும் இன்று தமிழ் நாட்டில் தலித் இலக்கியம், தலித் அரசியல், தலித் பார்வை என்ற சொல்லாடல்கள் புறக்கணிக்கப்பட முடியாதபடி தம்மை முன் நிறுத்திக்கொண்டு வருகின்றன. இலக்கியத்திலும் சாதியமா? பண்பாட்டிலும் இட ஒதுக்கீடா? வர்க்க ஒற்றுமையைச் சீர்குலைப்பதா? என்று பல்வேறு கேள்விகளும் எழுப்பப்படுகின்றன. இக்கேள்விகள் அனைத்துமே அறிந்தோ அறியாமலோ, உணர்ந்தோ உணராமலோ கேள்வி கேட்பவர்களிடம் (அவர்களில் சிலர் தலித் சாதியினராகக்கூட இருக்கலாம்) உள்ள பார்ப்பனியத்தை வெளிப்படுத்தி விடுகின்றன. முளைத்து இலை விட்டுக் கொண்டிருக்கும் தலித் இலக்கியத்தை சோசலிச யதார்த்தவாதக் கூடையில் போட்டு மூடிவைக்க சில ஐதானோவிஸ்ட் ஜடாமுனிகளும் முயற்சி செய்கின்றனர்.

'கம்யூனிஸ்ட்', 'மார்க்சிஸ்ட்', 'மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட்' என்ற சொற்களே (உச்சரிப்பவர்கள் உள்ளீடற்ற ஓட்டை மனிதராகக் கூட இருக்கலாம்) தம்மளவிலேயே ஒருவருக்கு மிக உயர்ந்த ஸ்தானத்தையும் உயரிய விவேகத்தையும் ஞானத்தையும் வழங்கிவிடுவதாகக் கருதுபவர்களும் இரவல் பெற்ற கருத்தாக்கங்களின் துணைகொண்டு இந்திய யதார்த்தத்தைச் சிறை பிடிக்க முயல்பவர்களும் இங்கு நிறையவே உண்டு. அப்படிப்பட்டவர்களுக்கு தலித் இலக்கியம் என்பது 'குறுக்குச்சால்' ஓட்டுவதாகவும் பாட்டாளி வர்க்கத்தைப் பிளவு படுத்துவதுமாகவே தெரியும். (ஏதோ இந்திய / தமிழகப் பாட்டாளி வர்க்கம், விவசாயத் தொழிலாளி வர்க்கம், நடுத்தர வர்க்கம் முதலியன சாதிகளால் பிளவு படாமல், வர்க்க அடிப்படையில் ஒன்று பட்டிருப்பதாக அப்படி ஒரு சோசலிச ரொமாண்டிக் கனவு!) அத்தகையவர்கள் தங்கள் கனவுகளிலிருந்து விழித்தெழுந்து, யதார்த்த உலகைக் காண்பதற்கு, ஒரு உண்மையான இந்தியா / தமிழக மார்க்சியப் பார்வையின் வழி அதனைப் புரிந்துகொள்வதற்கு உதவக்கூடிய அற்புதமான கட்டுரைத் தொகுப்பாக வெளிவந்துள்ளது ராஜ்கௌதமனின் "பொய் + அபத்தம் > உண்மை" (விளிம்பு டிரஸ்ட், 11, தேவேந்திர குல வீதி, உப்பிலிபாளையம், கோயமுத்தூர்-641015, 124 பக்கங்கள். விலை ரூ. 32.)

தலித் பிரச்சனை என்பது பொருளாதாரப் பிரச்சனை, வர்க்கப் பிரச்சனை என்று எழுபதாண்டுகளுக்கு முன்பே ம. சிங்காரவேலர் கூறிய சூத்திரத்தை இன்றும் விடாது மனப்பாடம் போட்டு ஒப்பிப்பவர்களுக்கு ராஜ்கௌதமன் கூறுகிறார்:

> தீண்டாமை காரணமாகவே தலித்துகளுக்கு உடைமைக்கும் (பொருளாதாரம்), சமத்துவத்திற்கும் (பண்பாடு) உரிமைகள் மறுக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. இவர்களிடம் தீண்டாமையும் இல்லாமையும் ஒன்றையொன்று பரஸ்பரம் நிர்மானித்துக்கொண்டிருக்கின்றன. விடுதலை என்பது இங்கே தீண்டாமையை அமலாக்குகின்ற சாதிமுறையை ஒழிப்பதாலேயே ஏற்

படிப்பகம்

www.padippakam.com



பட வேண்டும். தலித் மக்களுக்கு உயர்சாதி நிலவுடைமைக் காரர்கள் கூலியைக் குறைத்துக் கொடுப்பதும், தலித் பெண் களை தங்களுடைய மோகத்துக்கு உரியவர்கள் என உரிமை பாராட்டுவதும் ஏன் என்றால் இவர்கள் கூலி விவசாய வர்க்கம் என்பதால் அல்ல. உரிமைக்கே அருகதையற்ற, தீண்டத் தகாத அடிமைச்சாசனம் பண்ணுவது தீண்டாமை. இந்தியச் சூழலின் இந்தக் குறிப்பிட்ட வரலாற்று நிலைமையைச் சோச லிச எதார்த்தவாத எழுத்தாளர்களால் கதைகளில் கூற இயல வில்லை. கட்சித் தலைமையோ இந்த வரலாற்று உண்மையை வக்கணை செய்கிறது. தலித்தியத்தின் புரட்சிகர அரசிய லான சாதி ஒழிப்பிற்கு இடதுசாரிகள் முன்னுரிமை கொடுப் பதில்லை. தலித் விடுதலைக்கும் தாங்களே தலைமை வகிப்ப தாக நம்புவதும் பேசுதும் இன்று காமெடியாகி விட்டது.

தலித் இலக்கியம் ஒடுக்கப்பட்ட மக்களைப் பிரிக்கக் கூடியதல்ல' மாறாக ஒன்றிணைக்கக் கூடியது:

தலித் இலக்கியத்தோடு உறவாடுகிற தலித் அல்லாத ஒவ்வொரு ஆண் / பெண்ணிடம் ஒரு மூலையில் ஒடுங்கிக் கிடக்கின்ற தலித் உசுப்பிவிடப் படுகின்றான் / ள். தாயின் கர்ப்பத்தில் சுருண்டு கிடக்கிற சிசுவைப் போலப் புதையுண்டு கிடக்கும் இந்த தலித் தன்னுணர்வு பெறுகிறான் / ள். தலித் இலக்கி யத்தில் முழுவீச்சோடு வெளிப்படுகிற ஒடுக்கப்பட்ட தலித்தோடு ஒவ்வொருவரும் தன்னை அடையாளம் காண்கிறான் / ள். இப்படி அடையாளம் காணும்போது, அது தொலைந்துபோன கடந்த கால சுகமாக (Nostalgia) இன்றி வேதனையாக அமை கிறது. இதனை உயிர்ப்பிப்பது தலித் இலக்கியமாகும்.

பார்ப்பனச் சாதிக்குக் கீழே வரிசையாக சமூக அந்தஸ்து குறைந்து கொண்டே வருகிற ஒவ்வொரு சாதியைச் சேர்ந்த ஆண் / பெண்ணுக்குள் 'உயர் சாதி'யால் ஒடுக்கப்படுகிற தலித் அரையும் குறையுமாக இருக்கத்தான் செய்கிறான் / ள். அவன் / அவள் நூற்றுக்கு நூறு தலித்தாக இரத்தமும் சதை யும் கொண்ட ஸ்தூல வடிவாக வெளிப்படுவது தீண்டாமை எனும் கொடிய சமூக விலக்கிற்கு உள்ளாக்கப் படுகிற தலித் சாதி மக்களிடம்தான். எனவே சகலருக்குள்ளும் சாதியின் பேரால் ஒடுக்கப்பட்டிருக்கும் தலித்தை உணரவைத்து, தலித் தாகத் தங்களை நினைத்துப் பார்க்க வைக்கின்ற பணி தலித் இலக்கியத்தின் பணி ...அம்பேத்கரின் சாதி ஒழிப்பு என்கிற விடுதலை அரசியலை மையமாக வைத்து தலித் யார்? தலித் அல்லாதார் யார்? என்று பார்த்தால், சாதி ஒழிப்பிற்காக நிற் பவர்கள் தலித்துகள், சாதிமுறை காத்து நிற்பவர்கள் தலித் அல்லாதார்கள் என்ற இரண்டே இரண்டு அணிகளே இந்திய சமுதாயத்தில் இருக்கமுடியும். எப்படியெல்லாம் சமாத்கார மாக வியாக்கியானம் செய்தாலும் சாதி ஒழிப்பு என்ற கொடுக்

படிப்பகம்

www.padippakam.com



கிலிருந்து யாரும் தப்பிக்க முடியாது. இந்த விதத்தில் தலித் அல்லாதார் என்று நினைத்துக் கொண்டிருக்கிற தலித்தை உசுப்பி விடுவது தலித் இலக்கியத்தின் தனித்துவமான வரலாற்றுக் கடமையாக இருக்கிறது.

இத்தகைய தலித்தியம் மார்க்சியத்திற்கு நெருக்கமானது; மார்க்சியத்தால் வளப்படுத்தப்பட்டது. பெண்ணியச் சிந்தனைகளை உள்வாங்கிக் கொண்டது. சாதி ஒழிப்பு பற்றிய அம்பேத்கரியத்தை அச்சாணியாகக் கொண்டது. பெரியாரின் சிந்தனைகளால் ஊட்டம் பெற்றது.

> பிறப்பால் அமைகின்ற பால் வேறுபாட்டாலோ, உடல் நிறத்தாலோ, சாதித் தீட்டாலோ பண்பாட்டுத் தளங்களிலும் அவற்றின் நீட்சியாகப் பொருளாதாரத் தளங்களிலும் ஒடுக்கப்படுபவர்கள், பெண்கள், கறுப்பர், தலித் சாதியர்கள். இவர்கள் படைக்கும் இலக்கியத்தில் எதிர்ப்பும் கலகப் பண்பும் இயல்பாகவே அமைந்துள்ளன. இவ்விதத்தில் உலகளாவிய ரீதியில் படைக்கப்படுகிற ஒடுக்கப்பட்டோர் இலக்கியத்தின் இந்திய — தமிழகப் பிரதியாகத் தமிழ் இலக்கியத்தைக் கருதலாம். இங்குள்ள நிலைமைகளை ஒட்டி இது சாதி ஒழிப்பையும் பொருளாதார சமத்துவத்தையும் வலியுறுத்துகிறது. வர்க்க வேறுபாடுகளை அகற்றுவதைச் சாதி ஒழிப்புடன் தொடர்புபடுத்துகிறது.
>
> மேலும் தலித்தியம் என்பது இந்துத்துவ, பாசிச சக்திகளைச் செயலிழக்கச் செய்யும் வரலாற்றுக் கடமையோடு சம்பந்தப்பட்டது... தலித் எழுச்சியானது தேசிய இனங்களின் சுய நிர்ணய உரிமை, சுதந்திரம், பெண் விடுதலை, இன - நிற ஒடுக்கு முறையிலிருந்து விடுதலை ஆகிய உலகளாவிய எழுச்சிகளோடு நல்லிணக்கம் கொள்ளத்தக்கதாய் விரிவடையும் போக்குடையது.

இத்தகைய விளக்கம் தரும் ராஜ்கௌதமன், பார்ப்பன - வேளாளர் பார்வையில் தலித்துகள் எப்படித் தென்பட்டனர், அவர்களது மனித நேய எதார்த்தவாத இலக்கியத்தில் தலித்துகள் எவ்வாறு சித்தரிக்கப்பட்டனர், திராவிட இயக்கம் எவ்வாறு சாதி அரசியலைப் பேசி, சாதியை ஒழிக்காமல் போயிற்று என்பனவற்றை விரிவாக விளக்குகிறார். பாரப்பன - வேளாள எதார்த்தவாதம் என்பதை முதலாளிய (பூர்ஷ்வா) எதார்த்தவாதத்திற்கு நிகரானதாக கருதும் ராஜ்கௌதமன் அது தலித் விடுதலைக்கு மட்டுமல்ல, நம் சமூக முழுவதின் விடுதலைக்கும் உதவக் கூடியதல்ல என்கிறார். ஏனெனில் பார்ப்பன வேளாள எதார்த்த இலக்கியத்தில்,

> மனிதர்கள் சாதி, பால், மத, பொருளாதார இன வகைகளால் தீர்மானிக்கப்படுகின்ற எதார்த்த நிலைமைகள் பூசி மெழுகப்பட்டு, தனிப்பட்ட மனிதர்களின் குணாதிசயம் மனிதாபிமானப் பூச்சோடு கவனிக்கப்படுகின்றன. இப்படி எதார்த்த நிலைமையானது எதார்த்த வாதத்தால் ஒரு தலைச்சார்பாக

படிப்பகம்

www.padippakam.com



கையாளத்தக்கதாக அமைந்து விடுகிறது. இப்படிப்பட்ட எதார்த்தவாதத்தால் பிறப்பால் தீண்டவே தகுதியற்றவர்கள் எனச் சில மனிதக் கூட்டங்கள் இந்துத்துவ சாதி முறையால் நிர்ணயிக்கப்படுவதைக் கேள்வி கேட்க இயலாது.

மையம் நீங்கிய அதிகாரம், நுண் அரசியல் அதிகாரங்கள், எல்லோருக்கும் பொதுவான ஒடுக்குமுறைகள் என்பன இல்லை. எல்லாவற்றையும் ஒரே தத்துவத்தைக் கொண்டு விளக்கிவிட முடியாது. எல்லாரையும் ஒன்றிணைக்கும் தத்துவம் இல்லை. சமுதாயத்தில் நிலவும் வித்தியாசங்கள்தான் உண்மை என்ற நியாயங்களின் கீழ் பவனி வந்து கொண்டிருக்கும் போஸ்ட் - ஸ்ட்ரக்சுரலிசமும் போஸ்ட் மாடர்னிசமும் பால், இன, வர்க்க, சாதிய ஒடுக்கு முறைகளுக்கு ஆளாகிவரும் ஆண், பெண்களின் போராட்டங்கள் ஒன்றிணைவது சாத்தியமே இல்லை என்ற எண்ணத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கும் இந்தக் காலகட்டத்தில் 'வித்தியாசங்களை' எடுத்துச் சொல்லும் அதே சமயத்தில் எல்லா ஒடுக்கு முறைகளுக்குமிடையே இருக்கக் கூடிய ஒற்றுமையையும் ராஜ்கௌதமன் வலியுறுத்துகிறார். 'உலகமயமாதல்' என்ற கட்டத்தில் முதலாளித்துவ ஏகாதிபத்தியம் இயங்கிக் கொண்டிருக்கும் இந்த நாட்களில் பார்ப்பனியமும் கூட அதற்கு ஏற்றவாறு தன்னைத் தகவமைத்துக் கொள்வதையும், தலித்துகளுக்கு மேலும் பல நெருக்கடிகள் ஏற்படுவதையும் கருத்தில் கொண்டால் மார்க்சியத்தால் ஒரு பொதுக் கோட்பாடாகத் தொடர்ந்து செயல்பட முடியும் என்பதைப் புரிந்து கொள்ளலாம்

ஸ்டாலினிய – கடோனிவியத்தால் நிராகரிக்கப்பட்டவரும், மார்க்சியத்திற்கு எதிர் முகாமிலிருப்பவர்களால் தம் வயமாக்கிக் கொள்ளப்பட்டவருமான மார்க்சிய மொழியியல் அறிஞர் மிகெய்ல் பக்தினை மீட்டெடுத்து சாதிய - வர்க்க ஒடுக்குமுறைக்கு எதிரான மார்க்சியத்தினிடம், தலித்தியத்தினிடம் ஒப்படைக்கிறார் ராஜ்கௌதமன். மார்க்சியத்தில் அவர் இன்னும் ஆழமாக வேரூன்றி நிற்பதற்கான சாட்சியம் 'தமிழ் அறநெறியும் உடமைச் சமூக உருவாக்கமும்' என்ற — இத்தொகுப்பிலுள்ள முதல் கட்டுரை. மார்க்சியம் அவரிடம் மங்காமல் இருப்பதால்தான் சொல்லாடல்கள் ( discourses ) என்பதை வெறும் மொழியியல் வகையினமாகப் பார்க்காது, பொருண்மை உலகில் - சாதி, வர்க்க அடிப்படையில் வேர் கொண்டவையாக அவரால் பார்க்க முடிகிறது. (கி. ரா. என்ற கதை சொல்லியும் கதை சொல்லியின் அரசியலும்.)

பார்ப்பனியம்- சாதியம் என்பதை ஒரு ஒடுக்குமுறை கருத்தியலாகவும், (தலித்) அரசியல் ரீதியாக எதிர்க்கப்பட வேண்டிய விஷயமாகவும் அவர் கருதியபோதிலும் பார்ப்பன, வேளாள, உயர்சாதி, சூத்திர எழுத்தாளர்களின் படைப்புகளை, ஆழ்ந்து ரசிக்கவும்,

படிப்பகம்

www.padippakam.com



அவற்றிலுள்ள சில கூறுகளும்கூட தலித் விடுதலைக்குப் பயன்பட முடியுமா என விசாரணை செய்யவும் அவரால் முடிகிறது.

அ. மாதவையா பிறப்பால் பார்ப்பனர் என்றாலும், சாதிய ஒடுக்குமுறைகளுக்குத் தனது பார்ப்பன சாதிக்குள்ள பொறுப்பை எடுத்துக்காட்டியதன் வழியாக, தலித்துகளுக்கு உதவியாயிருக்கிறார். இந்துக்களின் கிறிஸ்துவ மத மாற்றத்தைக் கண்டு பொறாமைப்பட்டிருந்த போதிலும், 'புதுமைப்பித்தன் என்னும் பிரம்மராக்ஷஸ்' என்ற கட்டுரை, புதுமைப்பித்தன் என்ற படைப்பு மேதையைக் கொச்சைப்படுத்துவதில்லை. அவர் தனது காலத்திய நவீனத்துவவாதிகள், பகுத்தறிவுவாதிகள் ஆகியோருக்கும் அறிவொளி மரபுக்கும் மாறாக, பகுத்தறிவுக்கு விரோதமான, அறிவின் எல்லைகளுக்குள் கட்டுப்பட்டிராத, பூடகமான, புதிர் நிறைந்த அனுபூதி நிலை சார்ந்த விஷயங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தது பற்றி விவரிக்கும் இக்கட்டுரை, புதுமைப்பித்தன் தாசர்கள் இதுவரை நமக்கு எடுத்துக்காட்டியிராத புதிய பரிமாணங்களைக் காட்டுகிறது. இக்கட்டுரை ஒரு மாஸ்டர் பீஸ். அதே போல பக்தினை ஆக்கபூர்வமாக ராஜ்கௌதமன் பயன்படுத்தியுள்ள மற்றொரு கட்டுரையும் 'திராவிட இலக்கியம் - கலகக் கூறுகளும் உலகப் பார்வையும்' ஆழமான சிந்தனையைத் தூண்டவல்லதாக உள்ளது. பெரியாரின் அரசியல் வாழ்க்கை வரலாறு சரியாக எழுதப்படுமானால், ராஜ்கௌதமன் பெரியாரை மேலும் ஒரு படி உயர்த்திப் பார்ப்பார் என்ற எண்ணமும் எழாமலில்லை.

இலக்கிய விமர்சனம் என்பதைத் தமிழ் பேசும் உலகில் இதுவரை யாரும் எட்டிப் பிடிக்காத உயரத்திற்கு ராஜ்கௌதமன் உயர்த்தியிருக்கிறார். அவரது எள்ளல், கோபம், வேதனை, எரிச்சல், பாராட்டுதல்கள் -எல்லாமே அசலானவை; உண்மையானவை. அவரது எழுத்துகள் புதிய விஷயங்களைச் செறித்துத் தன்வயமாக்கிக் கொள்ளும் ஆற்றலை வெளிப்படுத்துகின்றன. பெரிதாக வெற்று ஆர்ப்பரிப்புகளோ செயற்கைத் தனமோ இல்லாத ஒரு இலக்கிய விமர்சகர் அவர்.

பின் குறிப்பு:

தலித்தியப் படைப்புகளை வெளியிடும் நோக்கத்துடன் தொடங்கப்பட்டுள்ள 'விளிம்பு ட்ரஸ்ட்' நமது பாராட்டுக்குரியது. இனி வெளியிடவிருக்கும் நூல்களில் அச்சுப் பிழைகளைத் தவிர்க்க வேண்டும் என்பது நமது அன்பான வேண்டுகோள்.

இருப்பினும் ராஜ்கௌதமனின் 'அ. மாதவையா (1872 - 1925) வாழ்வும் படைப்பும்' என்ற அருமையான ஆய்வு நூலை பெங்களூர் 'காவ்யா' பயங்கரமான அச்சுக் கொலை செய்துள்ளதைப் பார்க்கும்போது இங்கு மதிப்புரை வழங்கப்பட்டுள்ள நூலிலுள்ள அச்சுப் பிழைகள் புறக்கணிக்கத்தக்கவையே. —எஸ். வி. ஆர்.

படிப்பகம்

www.padippakam.com



—16 ஆம் பக்கத் தொடர்ச்சி

அதாவது, 'நிறப்பிரிகை' தலித்தியம் பேசும் குழுவாகவும், 'கோடு' தமிழ்த் தேசியம் பேசும் அமைப்பாகவும், இரண்டும் நெருங்கி வருவதற்கான கலந்துரையாடலாக இக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது என்னும் புரிதலோடு அவர் பேச்சு அமைந்தது.

அவர் பேச்சின் சாரம்: "குறைந்தபட்சமாக மனிதாபிமானம் என்ற அளவில்கூட தலித்தியம் என்னும் கருத்தாக்கத்தைப் பெரும் பகுதி அறிவுத் துறையினர் அணுகவில்லை என்ற கருத்து எனக்குண்டு. 'தேசியம் ஒரு கற்பிதம்' என்னும் நூல் வந்து ஓராண்டுக்கு மேல் ஆகியும் அதுபற்றி அழுத்தமான விவாதங்கள் இதுவரை நடத்தப்படவில்லை. அந்நூலின் முதல் கட்டுரையே ஆணைமையப்படுத்துதல் எப்படியெல்லாம் நடந்துள்ளது என்பதுதான். ஆனால் இங்குள்ள தலைப்பு "தமிழன்– ஒரு சித்திரம்" என்பது ஆணை முதன்மைப் படுத்துகிறது. இது ஒன்றும் unconcious ஆக வருகிற விஷயமல்ல. இத்தனை விஷயங்களுக்குப் பின்னும் இப்படிச் செய்வது என்னும்போது நமது கரிசனங்கள் பற்றிய அடிப்படையான கேள்வி எழுகிறது. இந்தச் சூழலில்தான் தமிழ்த் தேசியம் பேசுகிற அமைப்புகளும் சரி, அறிவுத்துறையினரும் சரி தலித்தியம் பற்றி எதிரான அணுகுமுறை ( Approach ) கொள்கிறார்கள். தலித்தியத்தைப் புரிந்து கொள்வதில் என்ன சிக்கல் வருகிறது என்று தெரியவில்லை. தமிழ்த் தேசியம் பற்றித் தர்க்க பூர்வமான விவாதம் தொடங்கி, தற்போது உணர்வுக் கொந்தளிப்பு என்ற நிலைக்கு வந்துவிட்டது. இந்த அபாயம் பற்றி நிறப்பிரிகை எழுப்பிய ஐயம் இன்று நடந்துகொண்டிருக்கிறது. இதன் ஒரு அறிகுறிதான் குணா போன்றவர்கள். குணா எழுப்பியுள்ள கேள்விகள் பற்றிய நியாயமான சந்தேகங்களும் விவாதங்களும் எழுவதற்கு மாறாக, தலித் இலக்கியம் பற்றிய கேள்விகளும் கோபங்களும் இங்கு அதிகரித்திருக்கின்றன. 'தலித்' என்னும் சொல் ஒரு தன்னிலை அடையாளம். பெண்ணியம் என்பதும் அப்படியொரு புதிய தன்னிலை அடையாளம். இதுபோல 'தமிழன்' என்பது தன்னிலைப் போக்கில் வரும் மாறுபட்ட அடையாளமா? இதுதான் அடிப்படையாக 'தலித்' என்னும் சிந்தனையோட்டத்திற்கும் 'தமிழன்' என்னும் சிந்தனையோட்டத்திற்குமுள்ள உறவை நிர்ணயிக்கிற ஒரு பிரச்சினை. இரண்டுக்கும் பொதுவான உடன்படுகிற கூறுகள் உண்டு —பார்ப்பன எதிர்ப்பு, பெருந் தேசிய எதிர்ப்பு, தமிழ் மொழி ஆதரவு போன்றவை. ஆனால் தமிழ்த் தேசியம் என்ற ஒரு ஒழுங்கமைவுக்குள் தலித்தியத்தை உட்படுத்துகிற எந்த ஒரு போக்கையும் நாம் அனுமதிக்கக்கூடாது என்பதை ஒரு ஜனநாயகக் குரலாக நீங்கள் பாருங்களென்று சொல்கிறேன்."

படிப்பகம்

www.padippakam.com



(பேச்சினூடே கவிதாசரண் எழுந்து, "கோடு என்பது தமிழ்த் தேசியத்தைக் கட்டமைக்கிற ஒற்றைப் பரிமாண அமைப்பாகச் சுருக்கிவிடக் கூடாது. 'தமிழைத் தமிழனுடைய மொழியாக்குவது' என்னும் அதன் ஒற்றை வரிக் கோட்பாட்டிற்கு தேசியம் தேவைப் படக்கூடும். மற்றபடி மொழியை முதன்மைப்படுத்தலில் தலித் தியம், பெண்ணியம், ஜனநாயகம் ஆகிய மூன்றோடும் தன்னை ஐக்கியப்படுத்திக்கொள்ளும் ஓர் அமைப்பாகத்தான் 'கோடு' விளங் குகிறது. ஆகவே ரவிக்குமார் தன் பேச்சைத் தமிழ்த் தேசியம் என்ற அளவில் சுருக்கிக் கொள்ளாமல் பரந்துப்பட்ட தளத்தில் கொண்டு செல்ல வேண்டும்," என்று கேட்டுக்கொண்டார். ரவிக் குமாரும் கோடு - நிறப்பிரிகை இரண்டையும் எதிரெதிர் அணியாக வைத்து தான் பேசவில்லை என்றார்.)

அடுத்து பேசிய மார்க்ஸ் 'பொதுவாகத் தமிழ்ச் சூழலில் விவா தங்கள் நடத்துவதற்கான சுமுகமான சூழ்நிலை இல்லை என்றே கருதுகிறேன்' என்று சொல்லித் தொடங்கினார். அவரது பேச்சு, வேலுசாமி - ரவிக்குமார் பேச்சுகளின் விடுபட்ட கண்ணிகளை ஒருங்கிணைத்துத் தெளிவுறுத்துகிற வகையில் அமைந்தது.

அவரது பேச்சின் சாரத்தை இப்படித் தொகுக்கலாம்:

தமிழ்த் தேசியம் பேசுகிறவர்கள் ஏதோ ஒரு விதத்தில் குணாவின் கருத்தாக்கத்தை ஏற்றுக் கொள்கிறவர்களாகவே இருக் கிறார்கள். வாழ்ந்த காலத்தில் கடுமையாக நிந்திக்கப்பட்டவர் கார்ல் மார்க்ஸ் என்றால், வாழ்ந்து முடிந்த காலத்திலும் நிந்திக் கப்படுபவராக பெரியார் இருக்கிறார். திராவிடர்களை —திராவிடர் கள் என்று தாம் சொல்வது தமிழ் சூத்திரர்களைத்தான் என்பதை பல இடங்களில் அவர் குறித்திருக்கிறார்—நம் மக்களை அறிவும் மானமும் உள்ள இனமாக மாற்ற உழைத்தவரைத் தமிழரின் வளர்ச்சியை முடக்கியவர் என்று இன்று தாக்கிக் கொண்டிருக்கி றார்கள். அவரைப் போலவே பின் - நவீனத்துவமும் தாக்குதலுக் குள்ளாகிக் கொண்டிருக்கிறது. கடந்த இரண்டாயிரம் ஆண்டு காலத் தமிழ் வரலாற்றில் பார்ப்பன மரபிலும் பார்ப்பனர்களை எதிர்த்த தமிழ் மரபிலும் ஒலித்த மையமான குரல் வேதத்தைப் பிரமாணமாக ஏற்றுக் கொண்ட குரலே. மேலைத் தத்துவ மர பில் 1. புராதன கிரேக்க தத்துவம், 2. மத்திய கால தத்துவம், 3. நவீனத்துவம் என்று மூன்று கால கட்டங்கள் உண்டு. நவீ னத்துவம் என்பது தத்துவத் துறையில் மொழியப்பட்ட ஒரு கருத் தாக்கம். மத்திய காலத்தில் தத்துவம் மதத்தின் எடுபிடியாக்கப் பட்டது. இந்திய – தமிழ்ச் சூழலிலும் அதுதான் நேர்ந்தது. பின் னர் அறிவியல் கண்ணோட்டத்தை உள்ளடக்கி நவீனத்துவம்

படிப்பகம்

www.padippakam.com



தோன்றுகிறது. இதன் மிகப் பெரிய மாற்றம் மதத்தின் பிடியிலிருந்து தத்துவம் விடுவிக்கப்பட்டதுதான். ஆனால் நம் நாட்டில் இந்த நவீனத்துவத்துக்கு இணையான போக்கு உருவாகவில்லை. மத நீக்கம் பெறவில்லை. வேதத்தைப் பிரமாணமாகக் கொண்ட பார்ப்பனியச் சிந்தனைகளே இந்திய தத்துவ, கலாச்சார, இலக்கியங்களாகக் கோலோச்சிக் கொண்டிருக்கின்றன. மதநீக்கம் Secularisation ஆகாமலேயே இங்கே நவீனவாதிகள், கம்யூனிஸ்டுகள் யாவரும் தோன்றி மதம் சார்ந்த மரபுக்குப் பலியாகிப் போயினர். தமிழ்த் தேசியம் விரும்பியே அதில் விழுந்தது. அறிவுத் துறையினரான சிறு பத்திரிகையாளர்களும் தங்கள் நவீனத்துவத்தை மத நீக்கம் செய்துகொள்ளவில்லை. இங்குள்ள தமிழவன், நாகார்ஜுனன் போன்றவர்கள் நவீனத்துவத்தைப் பார்ப்பனிய மரபுக்குள் கட்டமைத்து எழுதிக் கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். இச்சூழலில்தான் Secularist – மத நீக்கம் பெற்ற ஒரே தலைவர் பெரியார் என்பதை நினைவு கூர வேண்டும். இதன் பின்னணியில்தான் தமிழர்கள் தங்கள் அடையாளங்களை உருவாக்கிக் கொள்ள வேண்டியவர்களாய் இருக்கிறோம்.

தமிழர்கள் எவையெல்லாம் பார்ப்பனியத்துக்கு எதிரானதென்று கொண்டிருந்தார்களோ, அவையெல்லாம் பார்பபனியக் கறை படிந்ததாக இருந்ததைக் காணத் தவறினார்கள். இந்த ஆபத்தை இனங் கண்டு கொண்ட ஒரே மனிதர் பெரியார்தான். அதையே வாழ்நாள் முழுதும் எடுத்துரைத்தார். மிக நவீனமான சிந்தனைகளையும் போகிற போக்கில் சொல்லிச் சென்றவர்.

பலகாலமாக இங்கு கல்வி என்பது வேதக்கல்வியாகவே இருந்து வந்துள்ளது. பொதுக் கல்வி என்பது மக்களுக்கு மறுக்கப்பட்டிருக்கிறது. இப்படி மறுப்பது பார்ப்பனியப் போக்கு. ராஜாஜி இங்கு இரண்டுமுறை ஆட்சிப் பொறுப்புக்கு வந்திருக்கிறார். இருமுறையும் நிறைய பள்ளிகளை மூடினார். பார்ப்பனர் அல்லாதார் ஆட்சிக் காலத்தில் மட்டுமே கல்வி பொதுமக்களுக்குப் போய்ச் சேர்ந்திருக்கிறது.

தமிழனுடைய அடையாளம், கலாச்சாரம் என்பதெல்லாம் இயல்பான ஒன்று அல்ல. கற்பிதம் செய்யக்கூடிய ஒன்று என்ற கருத்தாக்கத்தை மனதில் பதித்துக் கொண்டால்தான் தமிழக வரலாறு எப்படியெல்லாம் திரித்தெழுதப் பட்டிருக்கிறது என்பது புரியும். இதுவரை எழுதியதெல்லாம் மையங்களைப் பற்றியே. தப்பித் தோடியவர்களின் வரலாறு எழுதப்பட்டால்தான் தமிழர்களின் அடையாளம் என்ன என்பது தெரியும்.

இன்று பார்ப்பனியக் குரலை இன்னொரு தளத்தில் மிகவும் வலிமையாக ஒலிக்கக்கூடிய குணாவின் நூலில் திரித்துக் கூறிய

படிப்பகம்

www.padippakam.com



வற்றில் ஒன்று களப்பிரர் காலம் பற்றிய செய்தி. மேலும் குலோத் துங்கன் காலத்தில் தமிழ் நாட்டு சாதிகளுக்குள் மோதலை ஏற்ப டுத்த செய்த சதிதான் வலங்கை இடங்கைப் போராட்டம் என்றும் கூறுகிறார். ஆனால் வலங்கை 92 சாதிகளும், இடங்கை ( கை வினைப் பறையர் உட்பட) 92 சாதிகளுமாக விளிம்பு நிலை மக்கள் ஒன்றிணைந்து நின்று ஆட்சியாளர், ராணுவத்தார், வரி வசூலிப் போர், பார்ப்பனர் - வேளாளர் ஆகியோரை எதிர்த்து வரிகொடா இயக்கம் நடத்தினர். இதைத் திரித்துக் கூறுவது மிகப் பெரும் அயோக்கியத்தனம்.

இன்று பன்முகத் தன்மைகளை அங்கீகரிக்கும் போக்குகளை ஏற்றுக் கொள்வதன் மூலம்தான் ஒரு புதிய தமிழ்ச் சமுதாயத்தைக் கட்டமைக்க முடியும். இங்கே தமிழர் என்பதைக் காட்டிலும் தமி ழர்கள் என்று பன்முகத் தன்மையில் சிந்திக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம். பல்வேறு தமிழர்கள், பல்வேறு தமிழ் மொழிகள், தமிழ்க் கலாச்சாரங்கள் இருக்கின்றன. இந்தப் பன்முகத்தன்மை யினை அங்கீகரித்தே நாம் செயல்பட வேண்டியவர்களாயுள்ளோம். அல்லாமல், ஒற்றைத் தீர்வை அடிப்படையாகக் கொண்ட எந்தப் போக்கையும் எடுத்துக் கொண்டு செயல்பட்டோமானால், அது ஏதோ ஒரு வகையில் அதிகாரத்துவச் செயல்பாடுகளுக்கே இட்டுச் செல்லும்.

தமிழ்நாட்டில் தமிழ் மரபு என்பது சைவ வேளாளர் மரபுதான். இன்னும் தெளிவாகவே வெள்ளக்கால் சுப்பிரமனிய முதலியார்— மனோன்மணியம் சுந்தரம் பிள்ளையின் ஆசிரியர்— தாழ்த்தப்பட்ட வர்களை நீக்கிய தமிழ் மரபு என்றே சொல்கிறார். இதுவரை தமிழன் என்று சொல்லிக் குவிக்கப்பட்ட அத்தனை அடையாளங் களும் பார்ப்பனக் கறை பட்ட அடையாளங்கள்தான். இதில் தப் பியவர்கள் யாருமில்லை. இந்த மோசமான போக்கின் மொத்த உதாரணமாக குணாவைச் சொல்லலாம்.

ஆகவே மத நீக்கம் செய்யப்பட்ட —சரியாகச் சொன்னால் பார்ப்பனிய நீக்கம் செய்யப்பட்ட, அதிகாரத்தைக் கேள்விக்குள் ளாக்குகிற கருத்தை வளர்த்துக் கொள்வதன் மூலம்தான் நம் அடை யாளங்களைக் கண்டடைய வேண்டியவர்களாய் உள்ளோம்.

அ. மா. வின் பேச்சைத் தொடர்ந்த கலந்துரையாடலில் ‘கீழைக் காற்று’ துரைசண்முகமும், ‘புதிய கலாச்சாரம்’ வீராசாமியும் செயல் வடிவம் பெறாத சொல்லாடலின் விரயம் பற்றிய கவனம் கொள்ளும்படியான கேள்விகளோடு கலந்துகொண்டார்கள்.

இன்குலாப் தன் நிறைவுரையில் ‘கோடு’ பேசும் தமிழியம், தலித் தியத்திற்கும் பெண்ணியத்திற்கும் அப்பாற்பட்டதல்ல. அவற்றை

படிப்பகம்

www.padippakam.com



உள்வாங்கிக் கொண்டது. ஆகவே அவற்றைப் பற்றிய எங்கள் அக்கறையும் ஈடுபாடும் சந்தேகத்திற்கப்பாற்பட்டவை என்று தெளிவு படுத்தினார்.

கவிதாசரண் தன் நன்றியுரையில் தலித்துகளுக்கும் தமிழுக்கும் உள்ள உறவும் அதன் இன்றியமையாமையும் பற்றித் தன் கருத்தை முன் வைத்தார்: இன்று தமிழ்நாட்டில் தமிழை மட்டுமே பேசிப் புழங்கிக் கொண்டிருப்பவர்கள் தலித் மக்கள் மட்டுமே. (தலித்துகளில் ஒரு பிரிவினராகிய சக்கிலியர்கள் தெலுங்கு பேசுவோர் என்றாலும் அவர்கள் தம் சமூக மொழியாகத் தமிழ் ஒன்றையே அதுவும் அந்தந்த வட்டாரத் தமிழையே பிசிறின்றிப் பேசிப் புழங்கும் தமிழர்களாக —தமிழ் நாட்டுத் தலித் மக்களிடம் கூடுதலாக ஒரு சாதிப் பிரிவைத் தோற்றுவித்த தமிழக மக்களாகவே மாறியுள்ளனர். இரத்தக் கலப்பற்ற சுத்தத் தமிழர்களைக் கட்டமைக்க முற்படுகிறவர்கள். அவர்களை 'தெலுங்கர்'களாக முத்திரை குத்தினால், அது அந்தத் தலித் மக்கள் மீதான இன்னொரு வன்முறைதான். மேலும் தெலுங்கு முதலாளிகளின் காலடி மண்ணாக அவர்களைத் தேய்த்தழிப்பதற்கான திட்டமிட்ட சதியும்கூட.) தமிழன் என்பவன் பறையனொழிந்தவன் என்றும், தமிழ் மரபு என்பது தாழ்த்தப்பட்டவர்களை நீக்கிய மரபு என்றும் வேளாளர்கள் விளம்பிக் கொண்டாலும், அவர்கள் தூக்கிப் பிடித்ததெல்லாம் வட மொழியை விடவும் சமயக்கறை படிந்ததும், பார்ப்பனியத்தைக் கைமாற்றிக் கொண்டதுமான பொய்யான தமிழ் மரபைத்தான். இந்த மரபில், பிராமண வர்ணாசிரமத்தை விடவும் கொடியதாகவும் கொன்றழிக்கும் நச்சுக் கபமாகவும் தென்கைச் சாதியக் கற்பிதம் கெட்டிதட்டிப் போயுள்ளது. மதச் சாயம் பூசிக் கொள்வதில் பிராமணிய வேதங்களை 'நிகர்த்தல்' என்னும் கோட்பாட்டோடு வடமொழியின் ஒலிபெயர்ப்பாகத் தமிழ் சிதைவுறுவதைச் சகித்துக் கொண்டதும், தர்க்கத்துக்கடங்காத பாமரத் தாக்கமாய் (இதில் படித்த தலித்துகளும் அடக்கம்தான்.) ஆக்கிரமித்துள்ள ஆங்கில மோகமும் சேர்ந்து பொதுத் தமிழை 'பறைத் தமிழ்' என்று சொல்லிச் சிறுமைப் படுத்தும் கேவலப் போக்கும் வளர்ந்துள்ளது. 'பறைத் தமிழ்' என்பது சாதிய வக்கிரத்தோடு சபிக்கப்பட்ட பெயர்தான் என்றாலும் உண்மையும் அதுதான். தீண்டாமைக் கொடுமையாலும் ஆயிரங்காலக் கல்வி மறுப்பாலும் மைய நீரோட்டத்திலிருந்து தொடர்ந்து ஒதுக்கி வைக்கப்பட்ட நிலையில் தலித் மக்களிடம் மட்டுமே தமிழ் தன் சாரத்தை இழந்துவிடாமல் மூலத்தன்மையோடு உயிர்த்திருக்கிறது. அவர்கள் மட்டுமே அருவறுப்பு கொள்ளும்படியான கலப்படமில்லாமலும், மதக் கறை படியாமலும், வேர்த்திறனை இழக்காமலும் தமிழைப் பாவித்து

படிப்பகம்

www.padippakam.com



வருகிறார்கள். அதன் காரணமாகவே "தமிழகத்தில் தலித்தைப் பற்றிப் பேசினால் அது தமிழைப் பற்றி பேசுவதாகும்'' என்று நான் சொல்லப் புகுவது.

தமிழ் நாட்டில் தமிழை மட்டுமே பயிற்று மொழியாக்குவது தலித் மக்களை மேம்படுத்துவதற்கான ஓர் இன்றியமையாத் தேவை. தலித் மக்கள் இப்போதுதான் கணிசமான அளவில் பொதுக் கல்வி பெறத் தொடங்கி யருக்கிறார்கள் என்றாலும், அந்தக் கல்வியை, சிந்தனை மொக்குகளை ஒவ்வொரு கணுவிலும் கிளர்த்தும் தாய் மொழி வாயிலாகப் பெறுவதன் மூலம், பரம்பரைப் படிப்பாளிகளோடு 'கல்வி சமத்துவம்' பெறுவதை குறுகியக் காலத்துக்குள்ளேயே எட்டிப் பிடிக்க முடியும். அல்லாமல் ஆங்கில வழிக் கல்வியோ, அல்லது கல்வியே ஒரு விற்பனைப் பண்டமாக மாற்றப் படுவதோ, கல்வியை தலித்துகளிடமிருந்து அந்நியப்படுத்தவும், தலித்துகளைப் பிறரிடமிருந்து எட்ட நிறுத்தவுமே பயன்படும். மொழிவழி மாநிலம் அமைந்து நாற்பதாண்டுகள் ஆகியும் இன்னும் தமிழ்வழிக் கல்வி முதன்மை பெறாததற்கு இதுபோன்ற சூழ்ச்சியும் வஞ்சகமுமே காரணங்களாக இருக்க முடியும்.

கூட்டம் பிற்பகல் 3 மணியளவில் நிறைவுற்றது.

★

## யோசிக்கையில்:

மொழியானது மனிதர்களின் பிரச்சினை. மொழிதான் மனிதனை முழுமைப்படுத்துகிறது—குறைந்தபட்சம் பேசத் தெரிந்த விலங்காகவாவது. மௌனம்கூட மனிதனுக்கு மொழியாகவே சாத்தியப்படுகிறது. மனிதர்களை இனக்குழுக்களாகப் பங்கீடு செய்வதும் அடையாளப்படுத்துவதும் மொழிதான்.

'தலித்' என்பது ஒடுக்கப்பட்டவர்கள் தங்கள் வித்தியாசங்களை அழித்து, சரிநிகராய் ஒரு குடைக்கீழ் திரளவும், சாதியழிப்புப் போரின் முதல் வெற்றிச் சின்னமாகவும் கிடைத்த ஒரு சொல். ஒடுக்கப்பட்ட உணர்வுள்ள ஒவ்வொருவனும் தலித்துதான் என்னும் பொதுமைப் படுத்தலைத் தவிர்த்துவிட்டால், 'தலித்' ஒரு தன்னிலை அடையாளம்தான். அதே சமயம் 'தமிழன்' என்பது தலித்தினுடைய இனத்தின் அடையாளம். ஒரு விடுதலைப் போருக்கான 'தலித்' என்னும் புதிய அடையாளம் 'தமிழன்' என்னும் பிறவி அடையாளத்தை விழுங்கிவிடக் கூடும் எனில், அடுத்தது

படிப்பகம்

www.padippakam.com



என்ன? 'தலித்துகள் தமிழர்கள் இல்லை' என்ற வேளாள வரையறைகூடத் தன்னை மட்டுமே 'தமிழன்' என்னும் தன்னிலை அடையாளமாக்கிக் கொள்ளத்தான். இந்த அபத்தத்திற்குத் துணை போகிற போக்குதான் 'தமிழன் என்று சொல்லத் தயக்கப்படுவ'தாகச் சொல்லிக் கொள்கிற தலித்தியக் கட்டமைப்பு. நவீன தலித்தியர்களின் வித்தியாசமான சிந்தனை என்பது தன்னளவில் முடிந்துபோகிற விரயமாகிவிடக்கூடாது. தமிழனாயிருப்பது ஏதோ இலாப நஷ்டக் கணக்கில் முடிந்துபோகிற விஷயமில்லை.

ரெட்டைமலை சீனிவாசனுக்குத் தமிழனாயிருந்ததில் எந்த விதச் சிக்கலும் எழவில்லை என்பதற்கு, ஐக்கியப்பட்டுக் கிளர்ந்தெழும் சாத்தியப்பாடுகளை நிராகரித்து உதிரிகளாயிருப்பதே நிதர்சனம் என்று அங்கீகரிக்கும் நவீனத்துவத்தில் அவருக்குப் பரிச்சயம் இல்லாதது காரணமாயிருந்திருக்கலாம். ஆனால் இன்னும்கூட கர்நாடக தலித் ஒரு கன்னடக்காரனாகத்தான் இருக்கிறான். மராட்டியத்தில் அவன் மராட்டியனாகத்தான் இருக்கிறான். பஞ்சதிராவிடத்தில் மராட்டியமும் ஒன்று என்றாலும் அம்பேத்கர் தன்னை ஒரு 'இந்தி'ய தேசியவாதியாகவே வெளிப்படுத்திக்கொண்டார். சமஸ்கிருதம் தேசிய மொழியாவதில் அவருக்குப் பூரண சம்மதம். வட இந்திய மொழிகளுக்குப் பொருந்தும் என்றாலும், திராவிட மொழிகள் என்பவைகூட எப்போது வர்க்க எழுத்துகளை ஏற்றுக் கொண்டனவோ, அப்போதே அவை சமஸ்கிருதத்தால் ஆசீர்வதிக்கப்பட்டவை என்று பெருமை கொள்ளத் தொடங்கி விட்டன. விதிவிலக்காகத் தனித்து நிற்கும் ஒரே மொழியும் இனமும் தமிழும் தமிழரும்தான்.

உலகளாவிய மொழிநுட்ப வல்லுநர்களில் ஒரு பகுதியினர்கூட வெகு அசட்டையானதொரு மௌடிகத்தாக்கத்தோடு, இந்திய மொழிகள் அனைத்தும் சமஸ்கிருதத்திலிருந்தே கிளைத்தவை என்றும், இந்தியக் கலாச்சாரம் என்பது முற்ற முழுக்க சமஸ்கிருதக் கலாச்சாரம்தான் என்றும் ஒரு முன்முடிவோடு தங்கள் ஆய்வைத் தொடர்கின்றனர். இந்தியாவின் தென்கோடியில் இந்த மண்ணின் மூலமொழியாகத் தமிழ் இன்னமும் மனித நாவில் ஊறி உயிர்த்திருக்கிறது என்பது அவர்களுக்கு மறந்து போகிறது. சமஸ்கிருதத்துக்கு இணையாக, செழுமையாக, சுத்த சுயம்புவாக, சமஸ்கிருதப் பரவலுக்கும் செய் நேர்ந்திக்கும் தன் வாழ்வியல் அனுபவங்களை வாரி வழங்கியதாக, சமஸ்கிருதத்தின் மூவாயிரம் ஆண்டு கால சகலவிதமான தாக்குதல்களையும் தாங்கி, ஈடு கொடுத்து[1]

---

[1] இன்றைக்கு நா. மகாலிங்கம் போன்ற தமிழ் முதலாளிகள் காஞ்சி சங்கராச்சாரியின் கனகாபிஷேக மலர் வெளியிடுவதும்,

படிப்பகம்

www.padippakam.com



மனிதர்களின் உயிர்க்கணுவில் வேர் பாய்ச்சி இன்றுவரை வாழ்ந்திருக்கும் தமிழை, அதன் வேருக்கு நீரூற்றிக் கொண்டிருக்கிறவர்களே 'தலித்'தியப்படுத்துவது என்ன வகை நவீனத்துவம்?

தமிழின் இன்றைய இந்தப் பின்புலத்தை நினைவில் கொண்டால், இன்று இந்தியப் பெருந் தேசியக் கட்டமைப்பில் தமிழர்களே தலித்துகளாகப் புறக்கணிக்கப் படுகிறார்கள் என்பது விளங்கும். இந்திய நுண்ணரசியல் தளத்தில் தமிழ் ஓர் உறுத்தலாய் நினைவு கூறப்படுவதற்கு, தமிழால் அடையாளப்படும் நம்மூர் பூணூல்கள்

---

சமஸ்கிருதம் இந்த நாட்டின் தேசிய மொழியாக இருக்க வேண்டும் என்று பிரகடனப் படுத்துவதும், இந்துத்துவம் பேசி பாபர் மசூதி இடிப்பை நியாயப்படுத்துவதோடு, இந்துக்களின் உணர்வை மதித்து இன்னும் இரண்டு மசூதிகளை முஸ்லீம்கள் விட்டுக் கொடுக்க வேண்டும் என்று குரல் கொடுப்பதும் — பார்ப்பனியக் கிருமிகள் தங்களைத் தின்று ஏப்பம் விட்டுவிடாமல் இருக்க, தாங்களே பார்ப்பனக் கிருமிகளாக மாறிக் கொள்வதாக இருக்கலாம். இதைப் போலவேதான் வேளாளர்களும் சமஸ்கிருதத் தாக்குதலிலிருந்து தமிழை — அவர்கள் நேர்த்தி செய்த செந்தமிழைக் காப்பாற்ற அதனை அதீதமான சமயக்கறையாலும், பார்ப்பனியத் தின் மாற்றுப் பிரதியாகவும் 'செழுமை'ப்படுத்தியிருக்க வேண்டும் என்று படுகிறது. இந்த வில்லங்கங்களுக்கெல்லாம் ஆட்படாமல் தலித்துகள் தமிழின் அசல் தன்மையைப் பேணிவந்தார்கள். அவர்கள் தமிழ் நிலத்தை மீறி வளரவில்லை என்றபோதிலும், தன் முகத்தைச் சிதைத்துக்கொள்ளவில்லை. வேளாளர்கள் கையில் செந்தமிழ் முற்ற முழுக்க சமயத் தமிழ் ஆனதற்கு மேலாக வேறொன்றும் கூடிவிடவில்லை என்றாலும், வேளாளர்கள் 'சாதி'த்தது என்னவோ அதிகம்தான். தமிழ் மக்களின் அடிநிலை சாதியர்கள் அனைவருக்கும் ஏறுமுகம் என்பது 'மெள்ள மெள்ள வெள்ளாளனாவதுதான்' என்ற அளவுக்கு 'சாதி'த்தவர்கள் அவர்கள். ஆனால் இன்று இதெல்லாம் பழங்கதை. இந்துத் தேசியத்தில் பார்ப்பனர்கள் சாதித்துத் கொண்டிருப்பது இதைவிட அதிகம். நாடார்கள், கொங்கு வேளாளர்கள் போன்றோர் தங்கள் திருமணச் சடங்கை 'பார்ப்பான் மறை வழி காட்ட' செய்வதில்லை. ஆனால் இன்று பணம் கொழுத்தவர்கள், நகர நாகரிகத்துக்குள் புதைந்து கொள்கிறவர்கள் 'பார்ப்பான்' வைத்துச் செய்ய முற்பட்டிருக்கிறார்கள். 'மெள்ள மெள்ள வெள்ளாளனாவது' என்று மண்ணில் மரியாதை தேடிய காலம் போய், பார்ப்பான் வழி காட்ட பரமபதம் போய்ச் சேர்வது என்று விண்ணை விலை பேசும் காலமாக பரவல் கொள்கிறது. ●

படிப்பகம்

www.padippakam.com



காரணமாகலாம். இந்த வகையிலும் தமிழர்களுக்கு உளவியல் ரீதியான நட்டம்தான்.

இப்படிப்பட்டதோர் அழுத்தத்தின் நிலப் பிளவாக வெடிக்க வேண்டிய தமிழ்த் தேசியம், வெறும் வெக்கைக் கொப்புளங்களாகவும் அவற்றைச் சொரிந்து கொள்கிற 'வீரத்தினவா'கவும் குறி தப்பிப் போய்க்கொண்டிருக்கிறது.

இன்றுள்ள நிலையில் ஒன்றுக்கொன்று இசைவற்ற பல காரணிகளால் தமிழுக்கும் தமிழருக்கும் உள்ள உறவும் பெரும் பரிதாபமாய் இருக்கிறது. தமிழானது தொழு நோய் பிடித்த குருட்டுப் பிச்சைக்காரன் கையில் திணிக்கப்பட்ட செங்கோல் மாதிரி தெருப் புழுதியைக் கிளப்பிக் கொண்டிருக்கிறது. (மலர்க்கிரீடம், வீரவாள், கேடயம் என்று வேஷங்கட்டி ஆடுகிறவர்களுக்கு இந்தச் செங்கோல் ஒரு கூடுதல் ஆயுதமாகும்.) இந்தக் கூத்துப் பட்டறையில்தான் காது கிழிபடும்படி தமிழ்த் தேசியம் முழக்கப்படுவதும் அதில் தலித்துகள் அவர்களுடைய எரியும் பிரச்சனைகளோடு புறந்தள்ளப்படுவதும் நடந்துகொண்டிருக்கின்றன. இதற்கு மாற்று, "நான் தலித். தமிழன் இல்லை," என்பதாக இருக்கமுடியாது. இருக்கும் எனில், இந்தியா முழுமையுமுள்ள தலித் மக்களோடு இவர்கள் தங்கள் இன, மொழி அடையாளங்களைப் புறக்கணித்து ஒன்று சேர்வார்கள். 'தலித் விடுதலை' தேசியப் போராட்டமாக வடிவம்பெறலாம்; வெல்லலாம். நல்ல காரியம்தான். ஆனால் இதிலுள்ள அபாயத்தையும் நாம் கணக்கில் கொள்ள வேண்டும். அதுதான் பெருந் தேசிய அபாயம்.

ஏற்கனவே இங்குள்ள வன்னியர்கள் தங்களை க்ஷத்திரியர்கள் என்று வருண அடையாளம் தேடுவதும், பள்ளர்கள் தங்களை தேவேந்திரகுல வேளாளர் என்று பட்டம் சூட்டிக் கொள்வதும், பொற்கொல்லர்கள் தங்களை விஸ்வகர்மாக்களாக்கிப் பூணூல் தரிப்பதும், நம்மூர் இடையர்கள் வட இந்திய யாதவர்களோடு கோத்திர சம்பந்தம் தேடுவதும் என்பதான இதிகாசத்தனமான பெருந் தேசியக் கற்பிதத்தில் தமிழர்கள் தங்கள் முகத்தில் காறித் துப்பிக் கொள்ளும் கேவலம் நடந்து கொண்டிருக்கிறது. மனிதர்கள் மனிதர்களோடு ஒன்றுபடுவது போய் சாதிகளோடு ஒன்றுபடுவதும், வேதப் பிரமாணங்களோடு அடையாளப்படுவதுமாக தேசிய கற்பிதத்தில் எரிகற்களாக சேமிக்கப்படுகிறார்கள். இந்த நிலையில் தலித்துகள் இன்னொரு கற்பிதத்துக்கு ஆளாகக்கூடும். பஞ்சமி நில மீட்புப் போராட்டத்திற்கு பாஸ்வான் தலைமை ஏற்க வரலாம். அவர் மொழியும் தலைமை ஏற்கும் என்பதானால், அங்கே தலித்தியத்திற்குள் ஒரு தலித்தியம் கட்டமைக்கப்படாது என்பது என்ன நிச்சயம்? சட்டத்திற்கு அப்பாற்பட்ட தலித்

படிப்பகம்

www.padippakam.com



பிரச்சினை இன, மொழி, கலாச்சார ஊடுருவலோடு கூடிய பிரச்சினை என்பதால், தங்களுக்கு எவனோடு பிரச்சினையோ அவனோடு தீர்த்துக்கொள்ளவும், எவனோடு போரோ அவனை வெற்றி கொள்ளவும், தங்களுக்குள் ஐக்கியப்படுவது, ஆதரவு சக்திகளைத் திரட்டுவது, எதிராளிக்குள்ளான தலித் உணர்வுகளை நியாய வாதங்களால் மீட்டெடுப்பது ஆகியவற்றைத் தலித்தியர்கள் போர்க் குணத்தோடு முதன்மைப்படுத்துவதை விட்டுவிட்டு, உதிரிகளாய் இருப்பதற்கான தத்துவார்த்தக் கச்சைகளை இழுத்துக் கட்டுவதால் ஏற்படும் உடனடிப் பலன் என்ன? ஒருவேளை தோளில் கிடக்கும் துண்டை அக்குளில் இடுக்கிக்கொண்டு, "சா...மி" என்று கூனிக் கும்பிடுபோடும் கிராமத்துத் தலித்துகளிலிருந்து 'வித்யாச'ப்பட்டு, படித்த தலித்துகள் புதிய பார்ப்பனர்களாகக் குசு விட்டுக்கொண்டிருக்கலாம். வேறென்ன ஆகிவிடும்?

ஒரு மரத்தில் எண்ணற்ற பூக்கள். அவை ஒன்று போலத் தோன்றினாலும் ஒன்றல்ல. ஒவ்வொன்றும் தன்னளவில் தனிதான். அந்தத் தனியன்கள் ஒரு மரத்துப் பூக்களாயிருப்பதில் முரணற்ற ஓர் அழகே கோலோச்சுகிறது. மனிதர்கள் இப்படி இணைவதை நவீனத்துவம் உயர்த்திப் பிடிக்கும் என்று நம்பலாம்.

ஆனால் தலித்துகள் தங்கள் வாழ்வியல் பரிணாமத்தில் இப்போது பூக்களைத் தாங்கும் வளர்ச்சியில் இல்லை. தங்கள் மிடிமையிலிருந்தும் ஒடுக்குமுறைக் கொடுமையிலிருந்தும் விடுபட்டு நிமிர்ந்து நிற்கத் துடிக்கும் தண்டுப் பருவத்தில் இருக்கிறார்கள். ஒற்றைப் பட்டையால் பற்றிக் கட்டப்பட்ட அடிமரமாய் அவர்கள் திரண்டெழுந்து, தளைகளற்ற சிந்தனைகளோடு வளர்ந்து, கிளைகள் பரப்பி, இலைகள் விரித்து, அதன் பின்னரே பூக்கும் வளர்ச்சியை எட்ட வேண்டும். அதுவரை நவீனத்துவம் புத்தி ஜீவிகளின் வீட்டுப் பெட்டகத்தின் பொக்கிஷமாய் இருக்கலாமே தவிர, போராளிக்கான கற்பிதமாய்த் துணை வராது. இதற்கு ஒரு தேசியம்தான் வேண்டும்.

தேசியம் ஒரு கற்பிதம்தான். கற்பனை நீளும்வரை ஒன்று மாற்றி ஒன்றாய் கற்பிதங்கள் கட்டமைக்கப்படவே செய்கின்றன.

யோசிக்கையில் அன்னைக்கும் பிள்ளைக்கும் இடையேயுள்ள உறவுக்கப்பால் எல்லாமே கற்பிதம்தான். கற்பிதங்களை முற்றிலும் ஒழித்துவிடல் சமூகக் கட்டுமானத்தைக் கலைத்துப் போட்டாலும்கூட சாத்தியப்படுகிற விஷயமாயில்லை. ஒருவேளை சீர் குலைக்கும் கற்பிதத்திற்கெதிராக மாற்றுச் சிந்தனையாளர்கள் எழுப்பும் கலகக்குரல் வேறொரு மேம்பட்ட கற்பிதத்துக்கான தேவையை உணர்த்தக்கூடும். 'பழகிப் போதல்' என்னும் நோயைக்

படிப்பகம்

www.padippakam.com



களைகிற மாற்றுச் சிந்தனை என்பது மனித குலம் தோன்றிய நாளிலிருந்து தொடர்ந்து கொண்டுதான் உள்ளது. இந்தக் கண் காணிப்புதான் நம் விழிப்புணர்வுக்கான வெளிச்சம். வாழ்க்கை யில் எதிர்ப்படும் அறைகூவல்களை வென்றெடுக்க தேசியம் என் னும் கற்பிதம் தேவைதான் என்றாலும், வன்முறையால் கட்ட மைக்கப்படும் கற்பிதங்களுக்கெதிராக நாம் எப்போதும் போர் செய்தே ஆகவேண்டும். இன்று தமிழ் நாட்டில் பேசப்படும் தமிழ்த் தேசியம் தலித்துகளின் நலன்களை புறக்கணிக்கிறதெனில் அதை மாற்றிக் கட்டமைப்பது நம் பொறுப்பு. 'தலித்' என்னும் தன்னிலை அடையாளம் விடுதலைக்கான கவசம்தான். கற்பிதத் துக்கப்பாலும் தொடர்ந்து வருவது 'தமிழன்' என்னும் பிறவி அடையாளந்தான். அல்லாமற் போனால், தலித் தன் இன்றைய தளத்திலேயே, இந்தப் பெயரிலேயே, தன்மேல் திணிக்கப்பட்ட தையே தன்னுடையதாக ஏற்றுக்கொண்டு, தனக்குப் பிறத்தியாகிற வனைக் கேள்வி கேட்கிறவனாக, அல்லது கேள்வி கேட்கும் உரி மையைக் கோருகிறவனாக, இருக்கும் வளவுகளிலேயே இருக்க வசதி பண்ணிக் கொள்கிறவனாகவே இருக்க முடிவெடுத்தவனாய் இருப்பான். இது சொந்தத்தில் செய்துகொள்கிற சூழ்ச்சியாகலாம்.

'தமிழன் — மனிதன் — ஏன், ஆள்' என்பதுகூட ஆணை மையப்படுத்தும் சொல்லாடல்கள்தாம். ஒப்புக் கொள்கிறோம். இது பற்றிய எதிர்க்குரல் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் னரே எழுந்திருக்க வேண்டும். அதனால் தான் 'இச்சொற்கள் இரு பாலருக்குமான பொதுக் குறியீடு' என்று அப்போதே இலக்க ணம் வகுக்கப்பட்டுள்ளது. உண்மையில் இது போன்ற இலக்க ணம் — ஒரு தப்பை நியாயப்படுத்துகிற இலக்கணம் — எல்லாவற் றையும் எப்போதும் சரி செய்துவிடாது. மீறல்கள் ஒவ்வொரு கட் டத்திலும் நிகழத்தான் செய்கின்றன. இம்மீறல்களுக்கு எதிராக சமூகக் கட்டுமானத்தை மேம்படுத்த எண்ணும் மாற்றுச் சிந்னை யாளர்களின் குரல் அனல் மாதிரி கனன்று கொண்டே இருக்க வேண்டும். புதிய சொல்லாடல்களையும், கட்டமைவுகளையும் உரு வாக்க வேண்டும். 'தோழர்' என்னும் சொல்லை இருபாலருக்கும் பொதுக் குறியீடாக மாற்றுவது போல், சமத்துவ குறியீடுகளைப் புதிதுபுதிதாய் அர்த்தப்படுத்த வேண்டும். இதற்கும் மேலாக, பெண்ணுக்கான சமத்துவத்தைச் சித்தாந்தப்படுத்துகிறவர்களை விட, அதை அணிச்சையாக நடைமுறைப்படுத்திக் கொண்டிருப்ப வர்கள் உயர்ந்தவர்கள். சித்தாந்த காலட்சேபக்காரர்கள் நம்மி டையே எப்போதும் உலாத்திக் கொண்டுதான் இருக்கிறார்கள் நீங்களும் நானுமாக.

★

படிப்பகம்

www.padippakam.com

# ஞானபீடம் விருது பெற்ற எம். டி. வாசுதேவன் நாயரும் மலையாளத் திரைப்பட உலகமும்

—ஏ. எம். சாலன்

நம் வாழ்க்கையோடு மிக நெருங்கிய காதல் கொண்டுள்ள கலைத்துறைகளில் ஒன்று திரைப் படம். இது இதற்கு முன்பு இருந்ததைவிட, இப்போது பல மடங்கு மனித வாழ்க்கையை அகமும் புறமுமாக அழகாக சித்திரப்படுத்தித் தர முன் வந்துள்ளது. இப்படி, தங்கள் ஜீவிதத்தை பிரமாண்ட அழகுடன் வண்ணவண்ண நிறத்துடன், தாங்கள் அனுபவித்து வருபவைகளையும் அனுபவிக்கத் துடிப்பவைகளையும் திரைச்சீலைகள் எடுத்துக் காட்டுவதால், மக்கள் திரள்திரளாக அதனை நோக்கிச் செல்ல ஆரம்பித்துள்ளனர்.

இக்கலைத் துறையின் ரகசியத்தைப் புரிந்து கொண்ட பெரிய பணக்காரர்கள் இன்று தங்களுக்கு லட்சம் லட்சமாக லாபம் கொய்தெடுப்பதற்காக வேண்டி இதனைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தத் துவங்கியிருக்கிறார்கள். இவர்களுடைய கால்களில்தான் இன்றைய நடிகர்கள், நடிகைகள், டைரக்டர்கள், திரைக்கதாசிரியர்கள், பாடலாசிரியர்களும்கூட கட்டுண்டு கிடக்கிறார்கள். இன்றைய திரைப்படங்களின் 'லகான்' இவர்கள் கையில்தான் இருக்கிறது என்றால் அது மிகையான கூற்று அல்ல.

இன்று வெளியாகிக் கொண்டிருக்கும் புதுப்புதுத் திரைப்படங்களும், பாடல்களும், கொச்சையாக எழுதப்படுவதுடன், சிலவேளைகளில் மனிதனின் படுக்கையறை ரகசியங்களைக் கூட நமக்கு அப்படியே எடுத்துக்காட்ட ஆரம்பித்துள்ளன.

இதற்குப் பல திரைப்படக்கதையாசிரியர்களும் பாடலாசிரியர்களும் கை கொடுத்து வருகிறார்கள். கேட்டால் நொண்டிக் காரணங்களைப் பதிலாகக் கூறுகிறார்கள்.

இது இப்படியிருக்க, இங்கே எம். டி. வாசுதேவன் நாயர் என்ன சாதித்துவிட்டார் என்ற கேள்வி எழலாம்.

அதற்கு முன் சில விஷயங்களைத் தெரிந்துகொள்வது நல்லது. மலையாளத் திரைப்படங்களை மூன்று பிரதான வகைகளாகப் பிரிக்கலாம்!

1. சாதாரண 'மசாலா' படங்கள்.
2. நடுத்தரப் படங்கள்.
3. கலைப்படங்கள். ( Art Films )

இவைகளில் மேற்சுட்டிய இரண்டும் ஏகப்பட்ட சனங்களை தங்கள் பக்கம் வசீகரித்து வைத்துள்ளன. இங்குள்ள கலைப்படங்களும்

படிப்பகம்

www.padippakam.com



கூட மற்ற மொழிகளில் வரும் படங்களோடு ஒப்பிட்டால் வசூலில் அவ்வளவு மோசம் ஒன்றுமில்லை. இதற்குரிய முக்கிய காரணம், இங்குள்ள ரசிகர்களின் தரமே!

இங்கே எம். டி. வாசுதேவன் நாயர் செய்த மிகப் பெரிய சாதனை என்னவெனில், வணிக நோக்கில் எடுக்கப்படும் திரைப் படங்களுக்குள் தன் முத்திரையைப் பதித்ததுதான். இந்த இடத்தில் அவர், பண மோகம் கொண்டு அலையும் படத்தயாரிப்பாளர்களின் நோக்கங்களுக்கு அடி பணியாமல் தன்னுடைய தரத்திற்கு – அதாவது தேசிய அளவிற்குப் பிடித்து அவைகளைத் தூக்கிவிட்டு விட்டார் என்றுகூடச் சொல்லலாம்.

இச்செயல் தற்போது மற்ற எந்த மாநிலத்துள் நடை பெறுவதை விடவும் மிகவும் மேலான, எடுத்துப் பேசப்பட வேண்டிய விஷயங்களில் ஒன்றாகும். இது மலையாளத் திரைப்பட உலகில் ஒரு பிரதான திருப்பு முனையாகும்.

காரணம் இக் காலங்களில் வந்த திரைப்படங்கள் அனைத்துமே மலையாள மண்ணிற்குரிய தனித்தன்மையை அல்லது பண்பாட்டு அம்சங்களை ஒதுக்கித்தள்ளிவிட்டு வந்த சுத்த 'மசாலா படங்கள்' என்பதையும் இங்கே எடுத்துச் சொல்ல வேண்டி இருக்கிறது.

மாத்திரமில்லை. இவ் வேளைகளில் வெளிவந்த கலைப்படங்களும் கூட வாழ்க்கையிலுள்ள சின்னஞ்சிறு அம்சங்களை பூதாகாரப்படுத்திக்கொண்டும், சுத்தமான 'கலை' உடைகளைத் தரித்துக்கொண்டும் வெளிவந்தவைகள் என்பதையும் மேற்கண்டவைகளோடு சேர்த்துக் கொள்ள வேண்டும்.

மேற்சொன்னவைகளிலிருந்து சற்று வித்தியாசமாக வெளிவந்த எம். டி. யின் திரைப்படங்களின் மேல் மக்கள் கவனம் குவியவே, வணிக நோக்கில் தயாரிக்கும் திரைப்படத் தயாரிப்பாளர்கள் கூட எம். டி. யின் வாசலில் வந்து திரைக்கதைக்காகக் காத்து நிற்க வேண்டிய கட்டாயத்திற்குள்ளானார்கள்.

இப்படி திரைக்கதை மூலமாக மலையாளத் திரைப்பட உலகிற்குள் பல சாதனைகளை சாதித்த எம். டி. சுயமாகவும் பல திரைப் படங்களை இயக்கி இருக்கிறார். அது இந்திய திரைப்பட உலகிற்குள் பல மாறுதல்களையும் நிகழ்த்தி இருக்கிறது. அதில் 'கடவு' என்ற திரைப்படத்தை இங்கே குறிப்பிட்டுச் சொல்லலாம்.

இது வெளிநாட்டிலுள்ள பரிசையும்கூட வாங்கி வந்திருக்கிறது.

இவருடைய திரைக்கதைகளைச் சுமந்து கொண்டு வந்த படங்களானாலும் சரி, அவர் சுயமாக இயக்கிய படங்களானாலுஞ் சரி, அவைகளைத் தொகுத்துப் பரிசோதித்தோமானால், எங்கெங்கெல்லாம் மனிதன் பாதிக்கப்படுகிறானோ, எப்படியெல்லாம் மனித

படிப்பகம்

www.padippakam.com



ஆன்மா நசுக்கப்படுகிறதோ, யார்யாரெல்லாம் அவற்றுக்குக் கூட்டு நிற்கிறார்களோ, அவைகளையெல்லாம் அதற்குரிய காரணகாரியங்களோடு, ரொம்பக் கவனமாக எம். டி. தன் திரைக்கதைகளில் பதிவு செய்திருப்பதைக் காணலாம்.

இனி எம். டி. யின் சில திரைக்கதைகளுக்குள் செல்வோம்.

எம். டி. திரைக்கதை எழுதி புகழ்பெற்ற படங்கள் பல. அவைகளில் பஞ்சாக்னி (எவ்வாறு ஒரு ஸ்திரி தீமையை எதிர்க்கத் துணிகிறாள் என்பது) அமிர்தங்கமயா (ராகிங் காரணமாக அவனை நம்பி வாழும் குடும்பம் எவ்வாறு நசித்துப் போகிறது என்பதை மையமாகக் கொண்டுள்ள படம்) நகச்சதங்கள் (தனக்கு ஏணியாக இருந்தவருக்கும் தன் எளிய காதலிக்கும் இடையேயிருந்து தத்தளித்துக் கொண்டு சாகும் ஓர் இளைஞனின் கதை) இவை போக ஒரு வடக்கன் வீரகாதை, சுகுர்தம் என இப்படி இன்னும் அடுக்கிக் கொண்டே போகலாம். இவை அனைத்துமே வணிக நோக்கில் எடுக்கப்பட்ட திரைப்படங்கள்தாம். என்றாலும்கூட, உள்ளடக்க ரீதியாக 'கனமான' விஷயங்களைத் தன்னுள் கொண்டவை என்பதையும் இங்கே சுட்ட வேண்டி இருக்கிறது. தன்னைச் சுற்றி வாழும் மனிதர்களிடமிருந்து கிளர்ந்தெழும் புத்தம்புது கருத்துகள் அவற்றின் வேர்களோடும் மண்ணோடும் தோண்டியெடுக்கப்பட்டு படைக்கப்பட்டிருக்கும் இவரது திரைக்கதைகளில்.

பழமையும் புதுமையும், பல சந்தர்ப்பங்களில் ஒன்றுக்கொன்று மோதிக் கொள்வதையும், காலத்தால் கிழடுதட்டிப் போன தேவையற்ற பழைய பண்பாட்டு அம்சங்கள் பின்தள்ளப் படுவதையும் எம். டி. யின் திரைக்கதைகளில் காணமுடியும்.

இதிகாச கதாபாத்திரங்களையும் எம். டி. தன் திரைக்கதைகளுக்குள் கொண்டுவந்திருக்கிறார். திரையுலகில் அது அவருக்கு மாபெரும் வெற்றியையும் ஈட்டிக் கொடுத்துள்ளது. இங்கேயும்கூட மேலாளர்களால் ஒதுக்கப்படும் தேவதாசியினுடைய மகள் பக்கமாகத்தான் நிற்கிறார் எம். டி.

மேல்தட்டு, அடித்தட்டு என்று மட்டுமல்ல, தன் சொந்த பந்தங்கள் என்று கூட பார்க்காமல், அவர்கள் எல்லாரையுமே இந்த சமூகம் என்ற மாபெரும் சங்கிலியின் ஒரு கண்ணியாகக் கண்டு அவர்களையும், அவர்களைச் சுற்றி நடக்கும் சம்பவங்களையும், அவர்களைக் கட்டிப் போட்டுள்ள பண்பாட்டு அம்சங்களையும் அதை மீறத்துடிக்கும் ஜீவன்களையும், நம் கண்ணுக்குப் புலப்படாமல் சதா நேரமும் நம்மைச் சுற்றி நிகழ்ந்து கொண்டிருக்கக்கூடிய உள் மாறுதல்களையும்கூட எம. டி. யின் பேனா தொடத் தவறுவதில்லை.

படிப்பகம்

www.padippakam.com

நெருக்குக பொறுக்கிகளையே!

## பிளாஸ்டிக் கழிவுகள்

யாரெல்லாம் நமது அண்டை வீட்டுக்காரர்களாய் இருக்க நேர்ந்தால் அருவெறுப்பும் அவமானமும் கொள்கிறோமோ, அவர்களே நம் அரசியல் ஆண்டைகள் ஆகும்போது, கொஞ்சமும் கூச்சமில்லாமல் விழுந்து சேவித்து பெருமிதம் கொள்கிறோம்.

—கவிதாசரண்

இன்றைய அரசியல் வாதிகளுக்கு அரசியல் என்பது புனிதமான விஷயமில்லை. நாட்டின் மதிப்பையும் கௌரவத்தையும் மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்த வேண்டும் என்ற அக்கறை அவர்களுக்கு இல்லை. எந்த முதலீடும் இல்லாமல், உடல் உழைப்பு இல்லாமல், எந்த சட்டத்துக்கும் பயப்படாமல், யாருக்கும் பதில் சொல்ல வேண்டிய பொறுப்பு இல்லாமல் லட்சக் கணக்கில் சம்பாதிக்கக் கூடிய தொழிலாகி விட்டது இன்றைய அரசியல்.

பண்டைய காலத்தில் பண்டிதர்களின் காலடியில் அமர்ந்து அறிவுரைகளைக் கேட்பதை கௌரமாகக் கருதினார்கள் மன்னர்களும் மாமன்னர்களும். இன்றைய நாடாளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சர்களும் சமூகவிரோதச் செயல்களில் ஈடுபடும் 'தாதா'க்களின் காலடியில் உட்கார்ந்திருப்பதையும் அவர்களிடம் ரகசியமாக லட்சக்கணக்கில் பணம் பெறுவதையும் பாக்கியமாகக் கருதுகிறார்கள்.

அரசியல் அதிகாரத்தின் மூலம் பணம் சம்பாதித்து உள்நாட்டிலும் அயல்நாட்டிலும் வங்கிக் கணக்குகளைத் துவக்கி கோடிக்கணக்கில் சேர்த்து கொழுக்கிறார்கள். மக்களவை, மாநிலங்களவை போன்ற பெருமைக்குரிய அமைப்புகளின் கூட்டத்துக்குச் செலவிடும் தொகைகூட வீணாகிறது. உறுப்பினர்கள் எதற்கெடுத்தாலும் வெளிநடப்புச் செய்கிறார்கள். கூச்சல் போட்டு ரகளை செய்து மீன் கடை சந்தையைப் போல மாற்றிவிடுகிறார்கள்.

(தினமணி, 28 பிப்ரவரி 1996)

தில்லி தடா நீதிமன்ற நீதிபதி எஸ்.என்.திங்ராவின் விளாசல் இது. படித்திருப்பீர்கள். மனிதர்

படிப்பகம்

www.padippakam.com



பண்டிதர் பரம்பரைபோல் தெரிகிறது. சரசரவென்று சாரல் மாதிரி பொழிந்திருக்கிறார். உண்மைதானே. ஆனால் அதைவிடவும் அதில் புதைந்துள்ள கோபம் —அது சனாதனக் கோபமோ, அல்லது சன்மார்க்க கோபமோ —அந்த உண்மைக்கான நியாயத்தை நிர்வாணப்படுத்தியுள்ளது கொஞ்சம் கூடுதல்தான். பொறுப்பிலுள்ளவர்கள் பாமரனைப் போலப் பொறுப்பில்லாமல் உண்மையை சுடச்சுடக் கொட்டக்கூடாது என்பதல்லவா ராஜதந்திரம். அதனால்தான் அவர் பேச்சில் சில பகுதிகளை உயர்நீதிமன்றம் தணிக்கை செய்திருக்கிறது.

பம்பாய் வெடிகுண்டு வழக்கில் முக்கிய குற்றவாளியாகக் கருதப்படும் தாவூத் இப்ராகிமின் அடியாட்களுக்கு அடைக்கலம் கொடுத்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு, தடா கைதியாக திஹார் சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் முன்னாள் மத்திய அமைச்சர் கல்பநாத் ராய் —ஹவாலா மோசடியிலும் பெருந்தொகை பெற்றவராகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளவர் —பல்லாயிரம் கோடி சர்க்கரை பேர ஊழலில் சிக்கி, அல்லது சிக்க வைக்கப்பட்டு அமைச்சர் பதவியை இழந்தவர் — கைதாகி, கம்பிவலை அடித்த போலீஸ் வண்டியில் ஏற்றப்பட்டபோது ஷேக்ஸ்பியரை மேற்கோள் காட்டித் தன் கல்விப் புலமையைத் தூக்கிப்பிடித்தவர் —மக்கள் பிரச்சினை பற்றிப் பேசுவதற்காக நாடளுமன்றக் கூட்டத்தில் கலந்துகொள்ளும் பொருட்டு, பிணையில் விடுவிக்க வேண்டும் என்று கோரிய வழக்கில் தான் நீதிபதி மேற்கண்ட தொகுப்புரை வழங்கி, பிணை வழங்க மறுத்துள்ளார்.

நீதிபதியின் இந்தப் பேச்சால் பாராளுமன்றமே கொதித்துப் போனது. தொலைக்காட்சியில் காட்டினார்கள். கட்சி வேறுபாடில்லாமல் எல்லாரும் கண்டனம் செய்தார்கள். "சரி, அந்த நீதிபதி அப்படி என்னதான் ஊர் உலகத்தில் நடக்காததைச் சொல்லி விட்டார். உண்மையைத்தானே சொன்னார்," என்று சொல்லக் கூடிய பாமரத்தனம் ஒருவரிடம் கூட இல்லை. எல்லாருமே highly diplomatic. அதிலும் முன்னாள் பிரதமர் சந்திரசேகர் - அதுதான் அந்த வெளுத்துப் போன புத்திஜீவிகளுக்கான தாடிக்காரர்- பல படிகள் மேலே போய்விட்டார்.

வெறும் 10 சதவீதத்துக்கும் குறைவான பாராளுமன்ற உறுப்பினர்களைப் பங்கு பிரித்துக் கொண்டு போய், பிரதமராகிப் புதிய வரலாறு படைத்த —ஊர்ப்பட்ட நியாயங்களை பிராமணோத்தம சாதுர்யத்தோடு புட்டுப்புட்டுவைக்கும் 'சோ'

படிப்பகம்

www.padippakam.com



ராமசாமியின் அத்தியந்த புனிதரான சந்திரசேகர் ரொம்பத் தான் கொதித்தார். "ஒரு நீதிபதியின் தாக்குதலிலிருந்து தன்னைக் காத்துக்கொள்ள வேண்டும் என்ற அக்கறைகூட இந்த அவைக்கு இல்லையே என்ற வெறுப்பில், இனி உள்ளே இருப்பதால் பயனில்லை என்று வெளியேறிவிட்டேன்," (தினமணி, 28 - 2 - '96) என்று கூறித் தன் 34 ஆண்டுக்கால நாடாளுமன்ற வாழ்க்கையில் முதல் முறையாக வெளிநடப்புச் செய்தார். அதற்கும் மேலாக, மிகுந்த பரிவுணர்ச்சியோடு திஹார் சிறைக்குச் சென்று கல்பநாத் ராயைச் சந்தித்து ஆறுதல் கூறித் தன் மனிதாபிமானத்தை உயர்த்திக்கொண்டார்.

இவர் பிரதமராயிருந்தபோது தமிழ்நாட்டில் இரண்டு கொலைகள் நடந்தன. இரண்டும் வரலாறு படைத்த கொலைகள். ஒன்று கலைஞர் கருணாநிதி தலைமையிலான பெரும்பான்மை அரசு ஆளுநரின் பரிந்துரைகூட (அவர் கொடுக்க மறுத்துவிட்டதால்) இல்லாமல் அற்பாயுளில் கலைக்கப்பட்டது. மற்றொன்று, அரசியல் புரட்டு வேலைகள் எப்படியிருந்தாலும் தென்னக மக்கள் நம்பிக்கை கொள்ளும்படியான தேசியத் தலைமையின் கடைசி வாரிசாக எஞ்சி நின்ற ராஜீவ் காந்தி மனிதக் குண்டுக்குப் பலியாகிப் போனது. சந்திரசேகருக்கு இன்னொரு பெருமைகூட உண்டு. இவர் பிரதமராய்ப் பதவி ஏற்றதும், போஃபர்ஸ் ஊழல் விவகாரம் பற்றி 'ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டரின் வேலை இது' என்று கூறிப் பிரச்சினையை ஓரங்கட்டியவர். அறச் சினம் இவருக்கு ஆறிய பழங் கஞ்சி என்பதற்கு இது ஒரு சான்று.

இவர் காங்கிரசில் இருந்த காலத்தில் 'இளம் துருக்கியர்' என்னும் பெயரில் சொந்தக்கட்சிக்காரர்களுக்கே திருகு வலியாய் இருந்தவர்தான். அமைச்சராகவோ, வேறு அதிகார மையம் உருவாக்கவோ எண்ணாமல் ஜனதா கட்சி தலைவராகவே தொடர்ந்தபோதும் திருகுவலிக்காரர்தான். ஜனதாவில் இருந்த அன்றைய ஜனசங்கக்காரர்கள் ஆர். எஸ். எஸ். அமைப்பிலும் அங்கத்தினர்களாய் இருந்ததைக் கண்டித்தார். 'இரட்டை உறுப்பினர்களாயிருக்க இங்கே இடமில்லை' என்று இவர் காட்டிய கண்டிப்பும் ஜனதா அரசின் வீழ்ச்சிக்கு ஒரு காரணம். இந்த விஷயத்தில் இவரோடு ஒத்துப் போனவர் ஜார்ஜ் பெர்னாண்டஸ். இருவரும் இப்போது தங்கள் கட்சிகளை ஒன்றாக இணைத்துக் கொண்டு, ப. ஜ. க. என்னும் அந்நாளைய ஜனசங்கக்காரர்களுடன் இப்போது துணிச்சலோடு தேர்தல் கூட்டு வைத்துக் கொண்ட முற்போக்குவாதிகள் இவர்கள்தான். கேட்டால், "என்னுடைய மதச்சார்

படிப்பகம்

www.padippakam.com



பின்மையை நிரூபிக்க யாரிடமும் சான்றிதழ் பெற வேண்டிய அவசியம் எனக்கில்லை,'' என்கிறார் சந்திரசேகர். உண்மை தானே. இப்போது மதச்சார்பின்மையா முக்கியம்? தொண்டர்கள் பஞ்சமுள்ள இவர் போன்ற 'முற்போக்குகள்' பாராளுமன்றத்தில் நுழைய வேறு என்னதான் வழி இருக்கிறது?

இவர் ஒருமுறை பாரத யாத்திரை நடத்தினார். நல்ல வரவேற்பு. நல்ல வசூலும்கூட. அத்தோடு அவர் அவராயிருந்த அத்தியாயம் ஒரு வழியாக முற்றுப் பெற்றிருக்க வேண்டும். இப்போது இவருக்கு பரந்து விரிந்த, பளிங்குக் கல்லால் சலவை செய்யப்பட்ட பண்ணை வீடு உண்டு. பிரதமராயிருந்தபோது கட்டி முடிக்கப்பட்டது. இவரின் அரசியல் நேர்மைக்கு யாரும் சான்று தந்துதான் என்னாகப் போகிறது?

இவரை விடுங்கள். இன்னொன்றைக் கேளுங்கள்.

ஒரு இளைய தலைவர் திடீரென்று உச்சாணிக் கிளையில் அமர்த்தப்பட்டார். அவரும் அந்த உயரத்திற்கு தகுதியாயிருக்க உறுதி பூண்டார். பணமுதலைகள் யாருக்கும் இரையாகிவிடாமல் 'திருவாளர் பரிசுத்த'மாக இருப்பதோடு, இந்த நாட்டு அரசியலையே தூய்மைப்படுத்திவிடவேண்டும் என்னும் உறுதியோடு தன் பணியைத் தொடங்கினார். ஒரு தொழிலதிபர் அவரைப் பார்க்க, அவரோடு ஒரு மணி நேரம் பேச அனுமதி கோரினார். இவர் உறுதியாக மறுத்துவிட்டார். அவரும் விடுவதாக இல்லை. அரைமணி நேரமாவது ஒதுக்கும்படி கேட்டார். அசைந்துகொடுக்கவில்லை. 10 நிமிஷம், 5 நிமிஷம், ஒரு நிமிஷம், வேண்டாம் 10 வினாடிகள் போதும் என்று பழியாய்க் கிடந்தார். கோரிக்கை எரிச்சலூட்டினாலும், ஒரு சுவாரசியமும் கூடவே தோன்றிவிட்டது. 10 வினாடிகளில் என்ன பேசிவிட முடியும்? சம்மதித்தார். சந்திப்புக்கு ஒதுக்கப்பட்ட அந்தப் பொழுதில் தொழில் அதிபர் கூப்பிய கைகளுடன் உள்ளே நுழைந்து கொண்டே, "உங்கள் அம்மா என்னிடம் கொடுத்த 60 கோடி பணத்தை யாரிடம் கொடுப்பது?'' என்று கேட்டு நிறுத்திக் கொண்டார். பிறகென்ன. நேரம் ரெக்கை கட்டிக் கொண்டு பறந்தது. அவருடைய 'பரிசுத்த ரெக்கைகளைப்' புதைத்த இடத்தில் புல் முளைத்த கையோடு அவருடைய வாழ்க்கையும் அகாலத்தில் முடிந்து போனது. அண்மையில் வருமான வரித்துறை அவர் வாங்கிய ஹவாலா கோடிகளுக்கான வரியை அவர் வாரிசுகளிடம் வசூலிக்கலாமா என்று யோசித்துக்கொண்டிருக்கிறது.

படிப்பகம்

www.padippakam.com



அரசியலில் குண்டர்களாகவே நுழைந்து கொடிகட்டிப் பறப்பவர்களைப் பற்றிப் பேச நமக்கொரு அருகதையும் இல்லை. புனிதர்களாய் வந்து புழுத்துப் போனவர்களைப் பற்றிப் பேசுவதும்கூட அரசியல் ஒரு கழுத்தறுப்பாக நம் வாழ்வோடு சம்பந்தப்பட்டுப் போனதே என்னும் ஆற்றாமையால்தான்.

'இந்தியா ஒரு மதச் சார்பற்ற நாடு' என்று பெயரிட்டார்கள். Secular என்னும் சொல்லின் பொருள் தெரிந்த மனிதர்கள் எல்லாம் எப்போதோ போய்ச் சேர்ந்துவிட்டார்கள். திருட்டுப்பயலை 'டில்லி ராஜா' என்று அழைப்பதில்லையா? அப்படியொரு சொல்லலங்காரமாகத்தான் அது இன்றும் நீள்கிறது. (பௌராணிகர்களுக்கு இந்த உதாரணத்தை வியாக்கியானப்படுத்துவதில் ஒரு கஷ்டமும் இராது.)

அதுபோலத்தான் 'இந்தியா உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடு' என்பதும். மக்களுக்கு அவ்வப்போது வாக்களிக்கும் வாய்ப்பு வழங்கப்படுவது உண்மைதான். அந்த மக்கள் எப்படி? "ஐயா, உங்களுக்குத்தான் நம்ம ஓட்டு. 'கை' சின்னத்திலேயே குத்திப் போட்டுடுறோம், கவலையே படாதீங்க," என்று மூப்பனாரிடம் கையடித்துக் கொடுத்தால் எப்படியோ அப்படிப்பட்ட மக்கள். வேறு விஷயங்கள் யாவும் அவர்களுக்கு ரொம்பவும் அத்துப்படி. காரணம் அவர்களுக்கு கற்பித்தது அப்படி. ஆனால் அரசியல்வாதிகள் எப்படி? ஒருவர் தன் நாற்பதாவது வயதில் அமைச்சராகியிருப்பார். இப்போது தன் எழுபதாவது வயதிலும்கூட —அது நோய் தின்னும் வயதல்லவா —உள்ளூரில் ஆயிரம் ரூபாயில் முடியும் மருந்துவத்தைக்கூட வெளிநாடு சென்று ஐம்பதாயிரம் டாலர் அரசுச் செலவில் செய்துகொண்டு— அமைச்சராகவே தன் புதைகுழி மேல் பூங்கா அமைக்க இடம் தேடிக் கொண்டிருப்பார். அந்தக் காலத்தில் மன்னர்கள்கூட இவ்வளவு நீளமான செங்கோலைத் தாங்கியதில்லையல்லவா. போதாததற்கு வாரிசு வார்ப்புகள் வேறு. இதில் கட்சி பேதமே கிடையாது. ஜோதிபாசுகூட 20 ஆண்டுகளை முடித்து இன்னும் ஐந்தாண்டுகள் முதல்வராகத் தொடரப் போகிறார்.

சிங்கப்பூரில் துறை வல்லுநர்களைத் தேடிப் பிடித்து அமைச்சர்களாக்குவார்களாம். ஆனால், அவர்கள் ஆறு மாதம், ஒரு வருஷம்கூட நீடிப்பதில்லையாம். காரணம் அமைச்சர் பதவியில் சுதந்திரமில்லையாம். மேலும் அமைச்சராய் ஒரு மாதத்தில் அவர்கள் வாங்கும் சம்பளத்தை வியா

படிப்பகம்

www.padippakam.com



பாரத்தில் ஒருநாளில் சம்பாதித்துவிட முடியுமாம். அண்மையில் அங்கிருந்து வந்த நண்பர் ஒருவர் சொன்னார். மனிதர்கள் எங்கேயும் லாபம் தருகிற தொழிலைத்தான் பண்ண விரும்புகிறார்கள் என்பது நம் அரசியல்வாதிகள் அறியாததா?

அமெரிக்காக்காரன் என்னதான் கோக்குமாக்குப் பேர் வழியாய் இருந்தாலும், உலகத்தையே தன் கட்டை விரலுக்குள் அழுத்தி வைக்கத் துடிக்கும் ஆக்கிரமிப்பாளனாக வளர்ந்தாலும், அவனுக்கான அரசில் அரசியல் ஜனநாயகம் பேணுகிற நாணயஸ்தன்தான்.

இந்தியாவில் இப்போது பாராளுமன்ற — சில சட்டமன்றங்களுக்கும் —தேர்தல் காலம். (இக்கட்டுரை ஏப்ரல் 30இல் எழுதப்படுகிறது.) சென்ற தேர்தலுக்கும் இந்தத் தேர்தலுக்கும் இடையே எத்தனை வெட்கங்கள், வேசைத்தனங்கள் நடந்தேறிவிட்டன! இவற்றாலெல்லாம் அதிகம் பாதிக்கப்படாதவராய்க் காட்டிக் கொள்கிற ஒரே நபர் நரசிம்மராவ்தான். சென்ற தேர்தலில் ராஜீவ் காந்தியால் தேர்தல் களத்திலிருந்து ஓய்வளிக்கப்பட்டவர். இந்தத் தேர்தலுக்குள் ஏறக் குறைய நேரு குடும்பத்தையே கழித்துக்கட்டிவிட்டார். ஐந்தாண்டுகளுக்கு முன் ஒரு சிறுபான்மை அரசுக்குத் தலைமை யேற்றார். ப. ஜ க. காரர்கள்கூட ஓர் உடன்பிறப்புப் பாசத்தோடு அவரை வரவேற்றார்கள். என்ன ஏதென்று மற்றவர்கள் நிதானிப்பதற்குள் ஒரு வித்தைக்காரனின் நெளிவு சுளிவுகளோடு தன் அரசை ஒரு பெரும்பான்மை அரசாக வடிவமைத்துவிட்டார். அவரது சீடர்கள் இப்போது இதை ஒரு சாதனையாகவே முன் வைக்கிறார்கள். கேவலங்கூட இங்கு சாதனையாகியுள்ளது. இவர் இந்த ஐந்தாண்டுக் காலமும் தன் சிறுபான்மை அரசை எதிர்க்கட்சிகளின் துணையோடு நடத்திச் சென்று, 'இது ஒரு தேசிய அரசு' என்று பாராட்டும் அளவுக்கு இந்திய ஜனநாயகத்தை உயர்த்திப் பிடித்திருந்தால் மகத்தானதாய்த்தான் மதிக்கப்பட்டிருக்கும். ஆனால் கட்சிகளை உடைத்து, கோடிகளைக் கொடுத்து —எல்லாம் குற்றச்சாட்டுகள்தாம். இவர் நிலையான அரசில் எத்தனை வண்ணமயமான ஊழல்கள் வெளிவந்தன! ஓலைப் பாம்பு ஒன்றாய் வராதாம். ஒன்றன்பின் ஒன்றாய் ஒன்பது வருமாம். இவர் காலத்து ஊழல்களும் அப்படித்தான். ஒவ்வொன்றும் பல்லாயிரம் கோடிகளாகத்தான்.

ஏறக்குறைய எல்லா ஊழல்களிலும் இவரின் பெயரும் இழுக்கப்பட்டுவிட்டது. மனிதர் அசைந்து கொடுக்கவில்லை.

படிப்பகம்

www.padippakam.com



'பொதுநலம் நாடல்' என்னும் பெயரில் தொடரப்படும் வழக்குகளைக் கொண்டு உச்ச நீதிமன்றமே அரசின் அலுவல்கள் பலவற்றைக் கையில் எடுத்துக்கொண்டு ஆணைகள் பிறப்பிக்கிறது. தேங்கிக் கிடக்கும் வழக்குகளுக்கிடையே இது தேவையில்லாத சுமைதான். ஆனால் அதுதான் மனிதர்களை இன்னும் நல்லதின்மேல் நம்பிக்கை கொள்ள வைக்கிறது. இந்த நிலையிலும் அவர் அசைந்து கொடுக்கவில்லை. மனிதர் சாணக்கியனா, அல்லது சிந்துபாத்தின் தோளில் தொத்திக் கொண்டு, அவன் கழுத்தை நெறித்தபடி இறங்க மறுத்து, கடைசியில் கல்லடி பட்டுச் செத்த கடல் கிழவனா என்று இன்னமும் குழம்பிக் கொண்டிருக்கிறார்கள் நம் அரசியல்வாதிகள்.

ஹவாலா பல தலைகளை உருட்டிவிட்டது. அத்வானி பாவம், பாராளுமன்ற அங்கத்தினர் பதவியைத் துறந்து, ஹவாலா வழக்கு முடியும்வரை தேர்தலில் நிற்கப் போவதில்லை என்று சூளுரைத்து, —பிறருக்குத் தன்னைப் புனிதர் என்று காட்டிக் கொள்வதைவிட —தன் கட்சியில் தனக்கான இடத்தைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டார். எதிர்க்கட்சிகாரர்களோடு சொந்தக்கட்சிக்காரர் பலரும் — சொல்லிவைத்தாற்போல் ராவுக்கு உறுத்தலாயிருந்த பலரும் — ஹவாலாவில் சிக்கிக்கொண்டனர்.

ஹவாலாக்காரர்களைத் தேர்தலில் நிற்கத் தடை விதித்த புனிதர் கடைசியில் ஒரு செவிட்டூமைக் குருடரைப்போலக் கண்ணைத் திறந்துகொண்டு ஜெயலலிதாவுடன் வியாபாரக் கூட்டு வைத்துக்கொண்டார். நமது அரசியல்வாதிகள் எல்லாருமே தங்கள் மான அவமானங்களை ஈடு வைத்துத்தான் லாப நஷ்டங்களைக் கொள்முதல் செய்கிறார்கள் என்றாலும் இவர் அதிலும் ஓர் அத்துமீறலான மனிதர். இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாகத் தன் சொந்தக் கட்சிக்காரர்கள் ஜெயலலிதாவிடம் பட்ட சிறுமைகளை, கேவலங்களையெல்லாம் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல், இந்த உறவு வேண்டாம் என்று காலைப்பிடித்து கெஞ்சிய கட்சிக்காரர்களையெல்லாம் அலட்சியப்படுத்திவிட்டு, ஒரு செயல்படாத பிரதமர் செயல்பட்டால் அது விபரீதமாகத்தான் இருக்கும் என்று மெய்ப்பிக்கிற விதமாய் தன்னிச்சையாக கூட்டு வைத்துக்கொண்டுவிட்டார். சத்தியமூர்த்தி பவனில் வைத்திருந்த இவர் 'கட் - அவுட்'டை ஒரு வயதான காங்கிரஸ்காரர் பக்தியோடு தன் கன்னத்தில் போட்டுக் கொள்கிறவரைப் போல செருப்பைக் கழட்டி 'பட்

படிப்பகம்

www.padippakam.com



பட்' என்று அடித்துவிட்டுப் போனார். தொலைக்காட்சியில் தெரிந்தது. அருவெறுக்கத்தக்க, மன்னிப்பு கோரக் கூடிய செயல்தான் என்றாலும், இவர் ஒரு இனத்தையே, தென் தமிழினத்தையே ஒரு சொடுக்கு போட்டால் வாலைக் குழைத்துக் கொண்டு பின்னால் ஓடிவரும் நாய்க்குட்டி மாதிரி சிறுமைப் படுத்திவிட்டாரே. அதற்கு யார் மன்னிப்பு கேட்பது?

அன்மையில் இந்திரா பார்த்தசாரதி மிக அழகாகச் சொல்லியிருந்தார்: '13 மொழிகளில் மௌனம் காக்கிறவர்'' என்று பெரிய விஷயம்தான். அந்தப் பதின்மூன்றில் தமிழ் உண்டு என்பதற்கு ஒரு தடயமும் தட்டுப்படவில்லை. 'உண்டு' என்றால் அது எட்டாம் உலகத் தமிழ் மாநாட்டில் ஒரு கிச்சுகிச்சு மூட்டலாய்க்கூட வெளிப்பட்டிருக்கலாம். ஆனால் இல்லை. இந்திக்காரர்கள்கூட இவரைப் போலத் தமிழர்களை இவ்வளவு அலட்சியப்படுத்தியதில்லை. இந்த ஆற்றாமை எல்லா கரங்கிரஸ்காரர்களுக்கும் இருந்து வந்திருக்கிறது. அதன் வெளிப்பாடுதான், ''இனி தமிழர்களை மதிக்கிற பிரதமர் வரவேண்டும்,'' என்னும் ப. சிதம்பரத்தின் கூற்று.

இப்படியொரு சகிக்க முடியாத, அவமானகரமான சூழலில்தான், ''நாங்கள் மானமுள்ளவர்கள்,'' என்று சொல்லித் தன் ஆதரவாளர்களோடு வெளியே வந்திருக்கிறார் மூப்பனார். மான அவமானங்களின் மதிப்பீடுகளை மீட்டெடுக்க முன் வரும் எவருக்கும் கிடைக்கும் நிபந்தனையற்ற மரியாதையும் வரவேற்பும் அவருக்கும் கிடைத்திருக்கின்றன என்றே தோன்றுகிறது. அவருக்குக் கிடைத்த அவகாசத்திலும், மானமுள்ளவராய்த் தன்னை நிலைப்படுத்திக் கொள்ள வேண்டிய அவசரத்திலும், அவர் 'சோ' ராமசாமியைப் பயன்படுத்திக் கொண்டதும், கலைஞருடன் தேர்தல் கூட்டு ஏற்படுத்திக் கொண்டதும், ரஜினி காந்தின் சினிமா செல்வாக்கை வரவு வைத்துக் கொண்டதும் பெரிதாய்ப் பொருட்படுத்த தேவையில்லாத விஷயங்களாகிவிட்டன. இந்தத் தோழமைகள் இல்லாமல் போயிருந்தால் அவர் முன்னெடுத்த நியாய உணர்வுக்கு வடிவம் இல்லாமல் போயிருக்கும். மேலும், இதுவரை அவர் செய்த அரசியல் தவறுகள் என்று சொல்வதற்கு — கட்டுப்பாடுள்ள கட்சித் தொண்டராய் இருந்ததும், தமிழ்நாட்டுக்கும் மக்களுக்கும் உரிய பங்கு கிடைக்காத போதும் முணுமுணுப்பு கூட இல்லாமல் கட்சித் தலைமையைச் சகித்துக் கொண்டதும், 'தலைமைக்கு எல்லாம் தெரியும், உரிய காலத்தில் உரியது நடக்கும்' என்று தானும் ஏமாந்து மக்களையும்

படிப்பகம்

www.padippakam.com



ஏமாற்றிக் கொண்டிருந்ததும்தான். தன் கையிலுள்ள சூத்திரக் கயிற்றைப் பிறர் விருப்பத்துக்கு சுண்டிக்கொண்டிருக்கிற இவரைப் போன்ற எந்தக் கட்சி விசுவாசிக்கும் நேரக்கூடிய சோதனைதான். மற்றபடி, (மிராசுதாராய் இன்னும் நீள்வதே பிறர் உழைப்பைச் சுரண்டித்தான் என்பது சித்தாந்த ரீதியில் உண்மைதான் என்றாலும்) அரசியல் சுரண்டலால் அவர் மிராசுதார் ஆகவில்லை. அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி கொள்ளையடித்ததில்லை. அதிகாரத்திற்கும் பதவிக்கும் அலையவில்லை. மேடையில் முன் வரிசையில் உட்காரக்கூட அவர் முனைப்பு காட்டியதில்லை. அவர் பண்ணைக் களத்து மேட்டில் குவியும் பதரைப் புடைத்துக் கருக்கா பொறுக்கிப் பிழைப்பு நடத்தும் நிலையிலிருந்த பலர் அரண்மனைக் கோழி முட்டைகளாகி (சர்க்கார் கோழி முட்டைகள் வேறு) அவரைப் போல ஐம்பது மடங்கு சொத்து சேர்த்தாயிற்று. ஆனாலும் அவர்களும்கூட இவரைத்தான் மிராசு என்கிறார்கள். முலைப்பாலோடு பயின்ற இந்த மிராசுத்தனமே அவரை மக்கள் தலைவராக முன் வர வொட்டாமல் தடுத்திருக்கலாம். இப்போது நிர்பந்தம் அவர் முதுகில் கைவைத்து முன்னே நெட்டித் தள்ளியிருக்கிறது.

இந்த வயதில் 'இன்று புதிதாய்'ப் பிறந்தாற்போல், தமிழ் மாநிலத்திற்கு ஓர் எழுச்சி மிக்க தலைவராய் அடையாளம் காணப்பட்டுள்ள மூப்பனார், இந்தப் பெயரைக் காப்பாற்றி, வளர்த்தெடுத்து, தமிழகத்தின் மரியாதையை ஒட்டு மொத்தமாய் மீட்டெடுத்து, மேலும் மக்கள் தலைவராய் உயரப் போகிறாரா, அல்லது பழைய குழியிலேயே பதுங்கிக் கொள்ளப் போகிறாரா என்பது தேர்தல் முடிவுகள் தெரிந்த சில நாள்களிலேயே தெரிந்துவிடத்தான் போகிறது. பெரியார் இந்தச் சூத்திரர்களை அறிவும் மானமும் உள்ளவர்களாக மாற்றத் தன் வாழ்நாள் முழுதையும் செலவிட்டார். ஒரு விபத்து மாதிரி இப்போது அரசியல் தளத்தில் மானம் நினைவுகூரப்பட்டிருக்கிறது' அறிவு இன்னும் கொஞ்ச காலம் அடகுக் கடையில்தான் கிடக்க வேண்டுமோ என்னவோ. 'சோ'வைக் கேட்டால் சொல்லக்கூடும்.

5 ஆண்டுகளுக்குமுன் கலைஞர் அமைச்சரவையைக் கலைக்கத் தன்னாலான சிறு பங்களிப்பை நல்கிய 'சோ' இப்போது அவரை வரவேற்கிறார். இப்போதும் கலைஞர் - மூப்பனார் உறவுக்குத் தன்னாலான சிறு பங்களிப்பை நல்கியிருக்கிறார். கலைஞரின் இனிவரும் ஆட்சி நல்லாட்சியாய் அமையும் என்று மூப்பனார் உத்தரவாதம் தருகிறார். (எதை வைத்து இவ் உத்தரவாதம் என்று தெரியவில்லை. ஒருவேளை மூப்பனார் தன் அரசியல் பாதையின்

படிப்பகம்

www.padippakam.com



செக்குமாட்டுத் தனத்திலிருந்து மீண்டு, திடீரென்று புதிய பரிணா மத்தில் ஒளிவட்டம் பெற்றுவிட்டதைப் போல்,—அவர் வயதுக்காரர், அவர் மாவட்டக்காரர், அவரைப் போலவே காவிரி நீரில் (ரைக்?) கைகழுவியவர் என்னும் உறவுகளுக்குரிய கலைஞரும் புதுப் பரிமா ணம் பெற்றுவிடுவார் என்று நம்பிக்கை கொண்டிருக்கலாம். கேட்க இனிப்பாய்த்தான் இருக்கிறது. இதுமட்டும் நடந்துவிட்டால் தமிழன்களெல்லாம் 'சிண்டு விறைச்சான்கள்' ஆகிவிடமாட்டார் களா! இப்படி ஆசைப்பட மூப்பனாருக்குக் காரணங்கள் இருக் கும். 7 ஆண்டுகளுக்குமுன் கலைஞர் ஆட்சி அமைக்க இதே மூப் பனாரும் ஜெயலலிதாவும்தான் காரணமாயிருந்தனர். எல்லாரும் தனித்தனியாய் நின்று வாக்குகளைப் பிரித்துக் கொண்டதால் அவ ரால் வெல்ல முடிந்தது. இன்றைய மூப்பனாரின் ஒளிவட்ட வெளிப் பாட்டிற்கான விதைகூட, அன்று தனித்து நின்று தன் தனித்து வத்தைக் காட்டிய போது ஊன்றப்பட்டதுதான். இன்றைக்கும் கலைஞர் ஆட்சிக்கு வருவார் என்றால் அதே மூப்பனார் - ஜெய லலிதாவால்தான் ஆகக்கூடும்.) சினிமாக்காரர்கள் கலைஞருடைய கலைச்சேவையின் பொன்விழாவைக் கொண்டாடுவதாகச் சொல்லி, சந்தர்ப்பம் பார்த்து ஆளுயர பேனா கொடுத்து விழா எடுத்திருக் கிறார்கள். அதற்கும் மேலாக, ஒரு அதிசயம்போல காஞ்சி சங் கராச்சாரியார் அவரைப் பாராட்டி வாழ்த்தியிருக்கிறார்.

ஆக, அடுத்த முதல்வர் கலைஞர்தான் என்று தீர்மானித்துவிட் டதாகவே தெரிகிறது. கலைஞர்கூட அவருக்குப் பிடித்த பழந் தமிழ்த் தேசிய மரபுப்படி கிரீடம் தயார் என்கிறார். கிரீடம் எப் போதும் தயார்தான். ஆனால், அதைச் சூடிக்கொள்வதைத் தீர்மா னிக்க வேண்டியவர்கள் மக்கள். அவர்களும்கூட இப்போதெல்லாம் கிரீடம் தாங்கிகளை ஏற்பதில்லை. மெய்யாகவே மக்களாட்சிப் பிரியர்களாக மாறிக்கொண்டு வருகிறார்கள். இது இன்னும் நினைவு கூரப்படாமல் இருப்பதற்குக் காரணமே — இந்தக் கிரீடம், சிம்மாசனம், கேடயம், வாள், செங்கோல் என்று மெய் மறந்து பேசத் தூண்டுகிற முடியாட்சித் தத்துவ மனோபாவந்தான் என்று படுகிறது. கட்சிக்கான தேர்தல், செயல்பாடுகள் போன்றவற்றில் தன்னைக் கேள்வி கேட்காதபடிக்கு சடங்கு முறைகளோடுகூடிய மரபுகளை முறைப்படி கடைப்பிடித்து வரும் கலைஞர், இனிமேலா வது தமிழர்களை ஜனநாயகச் சிந்தனைப் போக்குக்கு மாற்றுவ தற்கான சொற்களஞ்சியத்தை உருவாக்கிப் பரப்ப வேண்டும்.

கடந்த சில நாட்களாக, திமுகவும் அதிமுகவும் செய்தித்தாள் களில் நடத்தும் விளம்பரத்தைப் பார்க்க மிகவும் வியப்பாக இருக் கிறது. ஒன்று, பிறிதொன்றின் ஊழல் பட்டியலை விலாவாரியாக வெளியிட்டு, 'இவர்களுக்கா உங்கள் ஓட்டு?' என்று கேட்கிறது.

படிப்பகம்

www.padippakam.com



"இரண்டு கட்சிகளும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்," என்று ஒற்றைவரி விமர்சனமாய் காமராசர் எப்போதோ சொன்னதை இப்போது சத்தியப்பிரமாணம் செய்து ஒத்துக் கொள்கிறார்களா? என்ற வியப்புதான். விளம்பர வாசகங்களின் நம்பகத் தன்மை அப்படி. காலக்காரணியால் திமுகவின் ஊழல் - நினைவுப் பெட்டகத்திலிருந்து தேடித் தொகுப்பதாகவும், அதிமுகவின் ஊழல் - நேற்றுத்தான் நடந்த பிரம்மாண்டத்தோடு மயிரைப் பிளப்பதாகவும் உள்ளன என்பதுவான் இதிலுள்ள வேறுபாடு.

அதிமுகவின் விளம்பரங்களில் ஒன்று, "ஒரு தலைமுறை மறந்திருந்த சாராயத்தை மறுபடியும் கொண்டுவந்த தி. மு. க. ஆட்சியை மன்னிக்க முடியுமா?" என்று கேட்கிறது. அது தொடர்பாக கருணாநிதியை சமூக விரோதி என்றும் குற்றஞ்சாட்டுகிறது. சமூக விரோதச் செயல் என்பதற்காக அதிமுக அதை ஒன்றும் நிறுத்திவிடவில்லை. ஆனால் அதன் தொடர்ச்சியாக நேர்ந்த ஊழலைத் தடுப்பதாகச் சொல்லிக்கொண்டு அரசாங்கமே சாராய வியாபாரம் நடத்தியது. அதுவும் கலைஞர் ஆட்சியில்தான்.

பேசக் கஷ்டமாய்த்தான் இருக்கிறது. கலைஞரை இரண்டுபடி இறக்கிய விவகாரம் இது. ஆவணங்களில் பட்டியலிடப்படும் ஊழல் விவகாரமும், ஒரு சமூகத்தின் பரிணாமச் சிதைவாக அதன் உடலிலேயே விஷமுள்ளாய்த் தங்கிப்போன இந்தச் சாராய விவகாரமும் ஒன்றல்ல. ஒத்துக்கொள்வதில் தப்பில்லை. சில விஷயங்களை வியாக்கியானப்படுத்த முனைந்தால், நம் சாமர்த்தியத்தைவிட விஷயங்களின் கோணல்கள்தான் பூதாகாரப்படும்.

கலைஞர், அரசியல் சித்து வேலைகள் அத்தனையும் கற்ற வித்தகர். நேரு மாதிரி, ஜோதிபாசு மாதிரி அரசமைப்பில் தொடர்ந்து வரலாறு படைக்க ஆசை கொண்டவர்தான். ஆனாலும் முடியவில்லை. தன்னை மையப்படுத்துகிற அரசியலுக்கும் மேலாக அரசியலைத் தன்மயமாக்க முயன்றதன் பின்னடைவாயிருக்கலாம். இவருக்கு ஒரு ராசி உண்டு. இவர் யாரை முள் என்று நினைத்துக் கிள்ளிப் போடுகிறாரோ, அவர்கள் இவரை வெற்றி கொள்ளும் தலைவர்களாகிவிடுவர். எம்ஜியாரும் ஜெயலலிதாவும் அப்படி ஆனவர்கள்தாம். வை. கோபால்சாமிக்கு வயதிருக்கிறது; பக்குவமும் வரவேண்டியிருக்கிறது. மெல்ல ஆவார்.

எம்ஜியாரை இவர் வெல்ல முடியவில்லை. ஜெயலலிதா தன் பிரம்மாண்டத்தால் விழுந்துவிடுவார் என்று நம்புகிறார். அவர் விழுந்து, இவர் வென்றால், கோபால்சாமி ஒரு நல்ல தலைவராய் முதிர்வதற்குள், இவர் தமிழர்களின் வெல்லக்கட்டியாய் மாறினால் உண்டு. இவர் சரித்திரம் தொடரும். இந்த அணிசேர்ப்புகளின்

படிப்பகம்

www.padippakam.com



ஊடே இவர் ஒரு 'இளவலை'க் கண்டெடுத்திக்கிறார். ரஜினிகாந்த். எதன் பொருட்டு? தன் வெற்றியின் பொருட்டுத்தான். ஆனால் ஒரு வினை அதனோடு முற்றுப் பெறுவதில்லை. அதற்கொரு எதிர்வினை உண்டு. கருணாநிதிக்குத் தெரியாதா என்பீர்கள். தெரிதல் மாத்திரமே தீர்வாகாதுதானே.

கலைஞர 'தமிழினத் தலைவர்' என்று அறியப்படுகிறார். இதை நாம் சந்தோஷமாக ஏற்றுக் கொள்ளும் போதே சில சங்கடமான கேள்விகளும் முளைக்கின்றன.

திராவிடர் இயக்கம் தமிழுக்குச் செய்ததெல்லாம் அது தேர்தல் களத்தில் குதித்த வரைதான். அந்த நாளில் செய்ததுதான் அதன் பாராளுமன்ற அரசியலின் மூலதனமும் ஆயிற்று. அதன் பின் தமிழ்தான் அதற்கு எல்லாம் செய்திருக்கிறது. கட்சி பெரி தாய் ஒன்றும் செய்துவிடவில்லை (செய்ததைப் பட்டியல் போடு வது அவர்கள் வேலை. அவர்கள் செய்யாததையும், செய்த குறை பாடுகளையும் சுட்டுவதே நம் வேலை.) கலைக் களஞ்சிய வெளி யீடு, ஆட்சிமொழி சட்டம் முதலியவை அதற்கு முன்பே கொண்டு வரப்பட்டவை. அவற்றைத் தொடர்வதையும் நடைமுறைப்படுத்து வதையும்கூட திராவிடக் கட்சிகள் செய்யவில்லை. அண்ணாவின் ஓராண்டு ஆட்சிக் காலத்தில் பயிற்றுமொழிச் சட்டம் ஒரு பெருங் குறைபாட்டோடு கொண்டு வரப்பட்டது. அவருக்குப் பின்னால் அதை மறுபரிசீலனைகூட யாரும் செய்யவில்லை. அதற்கு நேர மில்லை, பாவம். குறைந்த பட்சம் 308 டிஎம்சி நீர் கொடுக்க சம் மதித்த கர்நாடக அரசுடன் காவிரி நீர் பற்றிய உடன்பாடு காணக் கூட நேரமில்லை. அப்போது கலைஞர்தான் ஆட்சியில் இருந் தார். அவர் கட்சி எம். பி. க்களையும் நம்பித்தான் இந்திரா காந்தி இருந்தார். தமிழ்மொழி 'வாழ்க' என்னும் கோஷத்தில் மட்டுமே நினைவு கூரப்பட்டது. உண்மையில் கலைஞரைவிட எம்ஜியார் தமிழுக்குச் செய்தது அதிகம். தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் எல்லாம் எம்ஜியார் காலத்தில் வந்தவைதான். குறைந்த பட்சம் பெரியார் தமிழைப் பொதுத் தமிழாய்க் கொண்டுவந்ததும் எம்ஜியார்தான். கலைஞர் இல்லை. தமிழ்- கலைஞருக்குச் செய்ததை ஒப்பிட்டால், கலைஞர் தமிழுக் குச் செய்தது 'ஒன்றுமில்லை'.

மொழிவழி மாநிலங்கள் பிரிந்து 40 ஆண்டுகள் முடிந்துவிட் டன. தமிழ்நாட்டில் மட்டும்தான் தமிழ் பயிற்று மொழியாய், ஆட்சி மொழியாய், வழிபடு மொழியாய், நீதி வழங்கும் மொழியாய் துறைவல்லுநர்களின் மொழியாய் —ஒரு புடலங்காயாகவும் இல்லை. இதில் 30 ஆண்டுகளாக 'தமிழ் வாழ்க'க்காரர்களின் ஆட்சிதான் நடந்துகொண்டிருக்கிறது.

படிப்பகம்

www.padippakam.com



அண்மையில் பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் இரங்கற் கூட்டத்தில் கலந்து கொண்ட கலைஞர், நான் இன்னொருமுறை ஆட்சிக் கட்டில் ஏறுவதானால் அது தமிழுக்கு நான் செய்யாது போனதைச் செய்து முடிக்கத்தான்," (சொற்கள் கட்டுரையாளருடையது) என்றார். மீண்டுமொருமுறை பதவிக்கு வரும் உபாயமாக இதைச் சொல்லியிருக்க மாட்டார்.

திமுகவின் தேர்தல் அறிக்கை வந்ததும் ஆவலோடு பார்த்தேன். மெல்லமெல்லத் தமிழ் வருமாம். ஏன் அப்படி?

"தமிழ்நாட்டில் மழலையர் பள்ளியிலிருந்து கற்பதின் கடைசி எல்லைவரை தமிழ்தான் —தமிழ் மட்டும்தான் கல்விமொழி — பயிற்றுமொழி; மொழிப் பாடமாக —மொழிப்பாடமாக மட்டுமே, மாணவர்கள் எந்த மொழியையும் கற்கலாம்."

ஒற்றை வரியில் சட்டம் கொண்டுவந்தால் என்ன ஐயா குடி முழுகிவிடும்? ஈழத்தில் முடிவது இங்கு ஏன் முடியாமல் போகும்?

அண்மையில் பெங்களூர் சென்று வந்த நண்பர், "எல்லாரும் கம்பெனி மேனேஜர்கள், ஐ. ஏ. எஸ்.கள் எல்லாரும் கன்னடத்தில் தான் இயல்பாகப் பேசுகிறார்கள். இங்கு மட்டும் ஏன் ஐயா தமிழில் பேச வராது என்று சொல்லிக்கொள்வது கௌரவமாய் இருக்கிறது?" என்று கேட்டார்.

எழுபதுகளில் ஜேக்டீ போராட்டத்தின் போது முதல்வர் கலைஞருடனான நேர்ப் பேச்சில் —ஆசிரியர்கள் சம்பள விகிதங்களை இன்னின்ன வகைகளில் உயர்த்த வேண்டும் என்று — பின்னாளில் எம்.எல்.சி.யான லீலாவதி சொன்னபோது, கலைஞர் சற்று எரிச்சலோடு, "நீங்க கேக்கிறபடி தூக்கிக் கொடுக்க இது என்ன கத்திரிக்காய் வியாபாரமா?" என்றார். இப்போது அவர் ஆட்சி அமைத்து, அவரை அணுகி 'இதைச் சட்டமாக்கியுதவுங்கள்' எனக் கேட் 'சட்டமாக்குறது என்ன கத்திரிக்காய் வியாபாரமா?' என்று ல் படுவாரோ என்று மனம் துணுக்குறுகிறது.

அரசியலும் கத்திரிக்காயும் ஆண்டு முழுதும் நடக்கும் வியா ம்தான் என்பது கலைஞர் அறியாததா?

பிறகென்ன?

உலகத்தில் இனி எல்லாமே பிளாஸ்டிக்தான் என்னும் நிலை விட்டது. இதிலுள்ள பிரச்சினை என்னவென்றால் இந்தப் ஸ்டிக் கழிவுகளை அகற்றத்தான் வழி தெரியவில்லை.

ஊழல், அத்துமீறல், அராஜகம், கொள்ளை, இன்ன பிறவெல் அங்கங்களாகவே இரத்த நாளங்களை வளர்த்துக் கொண்டு - அரசியலும் அகற்ற முடியாத கழிவாகத்தான் ஆகிவிட்டது.

படிப்பகம்

www.padippakam.com

Kavithaasaran, D. to April- May, '96 Regd.No. TN/MSN/740
R. Dis. 5479/90
CREATIVE LITERARY MONTHLY IN TAMIL.

Printed by Mrs. Kavithasaran at 31, T.K.S. Nagar, Madras
and Published at 580, T.H. Road, Madras- 21 & Edited
Kavithaasaran.

படிப்பகம்